www.padippakam.com

புதிய முயல்கள்

செவ்வண்ணன்

மக்கள் கலை இலக்கியக் கழகம்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

புதிய முயல்கள்

செவ்வண்ணன்

மக்கள் கலை இலக்கியக் கழகம்,
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

மக்கள் கலை இலக்கியக் கழக வெளியீடு-3.

பாடல் தொகுப்பு : செவ்வண்ணன்

முதல் பதிப்பு: மே 1983

உரிமை : மகஇக சென்னை

தொடர்புக்கு :
தோழர். செம்முகிலன்,
22, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் ரோடு,
சைதை, சென்னை—600 015.

விலை : ரூ 3/-

முகப்பு : பிச்சையா,
மாத்யூஸ் பிராசஸ்,
தங்கம் பிரிண்டர்ஸ்

அச்சிட்டோர் :
நவஜோதி அச்சகம்,
சென்னை-600 005

படிப்பகம்

www.padippakam.com

புயற்பறவை சேரபண்டராஜு—
உனது சிறகுகளின்
வெளிச்சக் குருதிக்கு—
புதிய முயல்கள்,
காணிக்கை!

படிப்பகம்

www.padippakam.com

பொருளடக்கம்

மக்களிடமிருந்து மக்களுக்கே

துப்பாக்கியும் புல்லாங்குழலும்

பாடல்கள் :

வீரவணக்கம் 5. வெள்ளம் வந்து அரிக்குதடா 7. காக்கித் தொப்பிக்காரன் 10. அய்யனாரு கோவிலிலே 11. புது வசந்தம் 13. களையெடுப்பு கும்மி 15. தேர்தல் விநியோகம் 17. வெண்மணி எலும்புகள் 20. ஆலைத்தோழா எழுந்திரு 23. எண்ணெய் வயல் 26. புரட்சி மகனடா 29. தொழிலாளத் தோழனுக்கு 32. வென்று வருவோம் 34. ஒரு வாளை எடு 35. இரு பறவைகள் 37. புதிய முயல்கள் 40. வெளிச்சக்குருதி நிப்பாணி 50. லூசுன். 61. செங்கொடி 64. மீனாட்சி புரம் 66. குதூப்மினார் 72. பாரதத்துப் பூமியிலே 74. மாணவங்க நாங்க 83. ரத்தம் கொதிக்குதடா 87 அரசியலை ஆணையில் வைப்போம் 90. தோழர்களே நண்பர்களே 92. வடகிழக்கு மக்கள் படைப்பாடல் 101 மதம் ஒரு அபினி 106. உலகப்பிச்சைக்காரியும் உள்ளூர் மக்களும் 111. ஆந்திரத்துப் புரட்சிக்கவி 116. விடுதலைப் புலிகள் 121. மக்களுக்கே அதிகாரமே 124 வெள்ளச்சாமி 127. அரேபியாவுக்கு 132. உலையிலே தீப்பிடிச்சுது 136. இப்படி வா 139.

படிப்பகம்

www.padippakam.com

மக்களிடமிருந்து மக்களுக்கு . . .

அன்பார்ந்த உழைக்கும் மக்களே!

இன்று தமிழகத்து வீதிகளிலே புதிய குரல்களைக் கேட்கிறோம். அவை எழுச்சிக்குரல்கள்; போராட்டக் குரல்கள்; உழைக்கும் மக்களின் குரல்கள்; உழைக்கின்ற மக்களைப் பற்றிப் பாடும் குரல்கள். ''காலமெல்லாம் கண்ணீர் சிந்தி/கழனியில் நெல்லு கண்டோம்/என்ன சுகம்?/ நமக்கு என்ன சுகம்?/பொங்கல் வந்து எம்மனசு/பொங்கி எழச் செய்யுதம்மா!'' மக்கள்கலை இலக்கியக் கழகத்தின் இந்தக் குரல்கள் தந்தனத் தானன தாளம் போட்டுக் கொட்டி முழக்குகின்றன. பொங்கி எழும் காட்டாறு சிறிப்பாயும் திசையைப் பாருங்ககள் ''பாட்டாளி மக்களைத் தான் பல வழியில் சுரண்டிக்கிட்டு/ஓட்டாண்டியாக்குறானே தொழிலாளிமகனே—நம்ம—ஓட்டுக்காக விக்குறானே விவசாயிமகனே''

நீங்கள் கேட்கலாம்—அய்ம்பதிலே, அறுபதிலே, முக்கியமாய் எழுபதாம் ஆண்டுகளிலேயே நூற்றுக்கணக்கில் தமிழகத்துக் கலைஞர்கள் உழைக்கும் மக்கள் பற்றிப் பாடினார்களே என்று. ஆமாம் பாடினார்கள்—''காடுவிளஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலும்தானே மிச்சம்'' என்று. ஆனால் அதனுடயே 'காலம் இருக்குது பின்னே' என்று தான் அவர்களால் பாட முடிந்தது. அதுக்கு என்ன செய்யனும் என்று கேட்ட குரலுக்கு சோசலிசம் பண்ணுவோம் என்றுதான் அவர்களால் கூற முடிந்தது. இதோ

படிப்பகம்

www.padippakam.com

இந்தப் புதிய எழுச்சிக்குரல்கள் நண்பர்கள் யார்? பகைவர்கள் யார்? என்று அறுதியிட்டுப் பேசுகின்றன பாருங்கள்! "பண்ணைகள் தரகு முதலாளிகள் ஆதிக்கத்தை மக்கள் தூக்கியெறிய/மண்ணெல்லாம் செங்கொடி உயருதுங்க/மக்களின் அதிகாரம் மலருமுங்க!"; "விவசாயி தொழிலாளி வியாபாரி மாணவர்கள்/அரசாங்க அலுவலர்கள் அனைவரையும் அணிதிரட்டி/புதிய ஜனநாயகத்தைப் புரட்சியிலே மலர்விக்க/புதிய கலாச்சாரப்போரில் உயிர்நீத்த தோழர்களே!—வீரவணக்கம்!"—ஓர் இலக்கு—ஓர் முடிவு—புதிய சமுதாய மலர்ச்சி இவற்றை அப்பாடல்கள் முழங்குகின்றன!

இன்று தமிழகத்திலே புதிய மக்கள் இசையைக் கேட்கிறோம்—பேடைகளிலே, பாடல்களிலே, இசையிலே பறைச் சத்தம் கேட்கிறது—சாதிகளுக்கும் சாவுமணி அடிக்கும் போர்ப்பறை அது. சிருங்காரக் கிளுகிளுப்பூட்டும் 'நிலாக் காயும் நேரத்தில்' 'இஷ்க்'கடிக்கும் ஆண்-பெண் இணைக் குரல்களிலே, மேலை நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு காமப்போதையூட்டும் இசைமுறைகளை அடியொற்றி ஒருபக்கம் ஆளும் வர்க்கச் சார்பான 'பொழுது போக்குக்கலை' சீரழித்துக் கொண்டிருக்கையிலே—உழைப்பாளிகளின் பாடல்கள் இங்கே: துயரமும், வேதனையும், கஷ்டங்களும் படிந்த குரல்கள் அவற்றின் உச்சியிலே வீர எழுச்சி சுடர்விட ஓங்கிப் பீறிட்டுப் பாய்கின்றன இங்கே. அர்த்தமற்ற வடமொழி-தமிழ்ச் சேர்க்கையோடு சோகத்தையும், அவநம்பிக்கையையும், வாழ்க்கைத் தோல்விகளையும், புதிய அழுகுணிசித்தர்பாணியில் ஒருதலை ராகங்களை ரயில் பயணங்களில் தமிழகத்திலே இறக்குமதி செய்து கொண்டிருக்கும்போது, எளிய மக்கள் மொழியிலே, விளங்கிக் கொள்ள எளிமையான மக்களுக்கான போராட்டக் கருத்துக்கள் வெடித்துப் பரவுகின்றன இங்கே!

இவை நமது மக்கள்கலை இலக்கியக்கழகம் போன்ற போராட்டக் கலாச்சார அமைப்புக்களின் பாடல்கள்! இவை புதிய ஜனநாயக லட்சியத்தில் முழக்கமிடும் கருத்துக்கள்!

படிப்பகம்

www.padippakam.com

ஆம்! இதுதான் மக்கள் இலக்கியம்; மக்கள்கலை; பாட்டாளித் தலைமையிலே உழைக்கும் மக்களின், கூட்டுச் சர்வாதிகாரமாம் புதிய ஜனநாயகத்தை முழங்கிடும் போர்க் குரல்! இதுவே புதிய அரசியல் முழக்கம்! ஆண்டாண்டு காலமாய் மக்களை அடக்கி ஆண்டுவரும் ஆளும் வர்க்கம் தன் கலாச்சார ஆளுமை மூலமாக மக்களின் உழைப்பைத் தன் நோக்கங்கள், நலனுக்கேற்ப சேவை செய்வதாகவே மாற்றி அமைத்து வருகிறது.

நகர்ப்புறத்திலே பாருங்கள்! காலையில் கண் விழித்தவுடன் மூடத்தனப் பிற்போக்கைப் பிரச்சாரம் செய்யும் வானொலியின் பக்திப் பிரச்சாரங்கள்—பாடல்கள்; ஒவ்வொரு நாளும் மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் சீரழிவுப் பாலியல் வக்கிரங்கள்! கோழைத்தனமும் மூடத்தனமும் இன்னொருபுறம்! கதைப்புத்தகங்களில், பாட்டுப் புத்தகங்களில், திரைப்படம், ரேடியோ, டெலிவிஷனில் 'பொழுதுபோக்கு' என்ற பெயரில் ஏமாற்றுப் பம்மாத்துக்கள்! கிராமப்புறங்களில்—அடிமைத்தனம், மூடநம்பிக்கை, அறியாமை, ஜாதி, மதம், பெண்ணடிமை என்று பலநூறு வழிகளில் நிலப்பிரபுத்துவக் கலாச்சார அடக்குமுறை!

இவ்வாறு தான் மக்கள், யதார்த்தத்திலிருந்து பிரிக்கப்பட்டுப் 'போதை' யூட்டப்பட்டு, ஆளும் வர்க்கத்துக்கு அடிமைச் சேவகம் செய்யத் தயார் செய்யப்படுகிறார்கள்; அடுத்தாக புரட்சிகர மக்கள் கலை இலக்கியம் ஒடுக்கப்படுகிறது. அப்படியென்றால், ஆளும் வர்க்கக் கலை இலக்கியம், கலாச்சாரம் எப்படித்தான் இப்போது இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்—ஆம் மக்கள் சீனத்துப் புதிய ஜனநாயக கலாச்சார முன்னோடி லூசுன் எரியம்பாய்ச்சாடியது போல, "அப்படியானால் இன்று ஒடுக்குகின்றவர்களுக்கு இலக்கியம் என்ற ஒன்று கூட இருக்கிறதோ? நிச்சயம் இருக்கிறது. ஆனால் இங்கு அல்ல. அவசரத் தந்திகளிலே, ஆணைச் சட்டங்களிலே, செய்திகளிலே, மக்களை ஏய்க்கும் 'தேசிய இலக்கியங்களிலே, நீதிமன்றத் தீர்ப்புக்களிலே இத்யாதி...

படிப்பகம்

www.padippakam.com

இத்யாதி...'' இன்று நம்து நாட்டிலே போலியான பிரச் சாரங்களாகவே அவை மக்களுக்கு ஊட்டப்படுகின்றன. சாராம்சமாக, இது தான் மக்களுக்கெதிரான, தற்காலிக மான, அற்ப ஆயுளுள்ள பாசிசக் கலாச்சாரம்.

இதுமட்டும்மா? இன்றைய கலாச்சாரப்பின்னணி இன்னமும் நுணுக்கமாகவே பார்த்துக் கொள்ளுங்கள். ஆளும் வர்க்கங்கள் தனது 'போதைப்பிரச்சாரம்' தவிர, மக்கள் கலை மீதான தாக்குதல் முறை தவிர, மக்கள் கலாச் சார தளத்திற்குள் பிற்போக்குக் கலாச்சாரக் கருத்துக்களை வடிகாலாக இறக்கிவிடுவதன் மூலம் சமரச, சீர்திருத்தப் போக்குகளைத் தூண்டித் திசை திருப்புகின்றன.

இச்சமரசவாதிகள் ஒருபுறம் பொத்தாம் பொதுவான உழைக்கும் மக்கள் இலக்கியம் படைக்கிறார்கள் மறுபுறம், ஆளும்வர்க்க கலாச்சாரம் எது, மக்கள் கலாச்சாரம் எது என்று இனம் பிரித்துக் காட்டாமல் பிழைப்பை நடத்திக் கொள்கிறார்கள். ஆளும்வர்க்கங்கள் மக்கள் கலாச்சாரத்தின் மீது அடக்கு முறைத் தாக்குதலைத் தொடுக்கும்போது, மக்களின் கலாச்சார ஆயுதங்கள் பறிக்கப்பட்டு நிற்கும் போது, இவர்கள் ஓடி ஒளிகிறார்கள். இவர்களும் நிராயுத பாணியாக நின்று கொண்டு ''அய்யோ, அகிம்சா மூர்த்தி காந்தியடிகள் பிறந்த நாட்டிலா, இது? அமைதி வேண்டும் உலகம் முழுவதும் நமக்கு அமைதிவேண்டும்!'' என்று அழுது புலம்பி எதிரியிடம் மன்றாடுகிறார்களே தவிர, மக்கள் கலாச்சாரப்படை வரிசையின் அணிகளை நிறுத்துவது கிடை யாது; உழைக்கும் வர்க்கக் கலாச்சாரத்தைக் கட்டி நிறுவப் போராடாமல், தேசிய வெறிக்கும், மதவெறிக்கும், வால் பிடித்த அன்றையபாரதியை இவர்களும் தூக்கிப்பிடிக் கிறார்கள். காமாந்தகவெறி பிடித்த இந்துமதப் பிற் போக்கை உயர்த்திப்பிடித்த கண்ணதாசனை உயர்த்திப் பிடிக்கிறார்கள்; ''தாவணி விசிறிகள் வீசும்'' வைரமுத்துக் களைத் தங்களது அரங்குகளுக்கு அழைக்கிறார்கள்; பிற் போக்குக் கலாச்சாரக் கருத்துக்களைத் தாங்கி வரும்

படிப்பகம்

www.padippakam.com

ஆளும் வர்க்கக் கலை இலக்கிய வாதிகளிலே 'முற்போக்கு' 'பிற்போக்கு' என்று தரம் பிரித்துப்பார்க்கிறார்கள். ஒரு படி மேலே சென்று உலகப் போரைத் தூண்டி வரும் ருசிய சமூக ஏகாதிபத்தியத்தின் (உலகிலேமுதலாக ஆறில் ஒரு பாகம் சோசலிசமாக மாறியது. அப்படிப் பட்ட சோவியத் கனவை நனவாக்கிய மாவீரர் லெனினது லட்சியத்தைப் புதைத்துவிட்டு அதிகாரிகளின் முதலாளித்துவமாய்ச் சீரழிந்தது, ரஷ்யாவில், அறுபதாம் ஆண்டுகளில்.) அடிமைச் கலாச்சாரத்தைக் குருட்டுத்தனமாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். இவர்கள் இப்படியிருக்க, சீர்திருத்தக்காரர்கள் தங்களது உண்மை உருவத்தை மூடி மறைத்து, போலி இனவாத-சுயலாபநோக்கில், சமுதாய அடித்தளம் மாறுமுன்னரே, மேல்தளமான கருத்து, சிந்தனைகள் மாற்றம் பெறவேண்டுமென்று பிரச்சாரம் செய்கிறார்கள். சுருக்கமாக,—மக்கள் இலக்கியம் பற்றி முழங்கிக் கொண்டே, இவர்கள், ஆளும்வர்க்கக் கலாச்சாரத்தோடு கைகோர்த்துக் கொள்கிறார்கள், மக்களிடம் 'சமாதன மாயை'களை பரப்புகிறார்கள், வர்க்கப்போரைச் சீர்குலைக்கிறார்கள்.

இதுவே—இன்றைய இந்திய குறிப்பாக, தமிழகத்தின் கலாச்சாரப் பின்னணி இந்தியக்கலாச்சார அரங்கம் ஏகாதிபத்திய அடிமைக் கலாச்சாரமும், நிலப்பிரபுத்துவக் கலாச்சாரமும் கலந்த ஆளுமையால் சீரழிந்து கிடக்கிறது இதற்குத்தீர்வு மக்கள் கலை இலக்கியமே. எனவே தான் "கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!" என்று மக்கள் கலை இலக்கியக் கழகம் முழங்குகிறது. இன்றைய தீர்வு, வடிவங்களை மாற்றுவதில் அல்ல புரட்சிகரமாக உள்ளடக்கத்தை மாற்றுவதில் தான் உள்ளது என்று முழக்கமிடுகிறோம்.

இன்றைய சமுதாயத்தில் சமூக அரசியல் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு நமது நாடு இருமேலாதிக்க வல்லரசுகள், மற்றும் பிற ஏகாதிபத்தியங்களின் பிடி

படிப்பகம்

www.padippakam.com

யிலிருந்து உண்மையான விடுதலை அடையவேண்டும்; உள் நாட்டு நிலப்பிரபுத்துவத்திலிருந்து விடுபட்டுப் புதிய ஜன நாயகம் பெறவேண்டும். இவற்றை இலக்காகக் கொண்ட புதிய ஜனநாயப் புரட்சியே தீர்வாகும். அதேபோல சமூக அரசியல் பொருளாதாரத்தைப் பிரதிபலிக்கின்ற கலாச் சார அரங்கிலும் புதிய ஜனநாயகக் கலாச்சாரம் என்ற உள்ளடக்கமே தீர்வாகும். எனவே, இன்றைய ஆளுமையில் உள்ள ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவக் கலாச்சாரங்களுக்கு மாற்று—அறிவியல் பூர்வமான, தேசிய ஜனநாயகக் கலாச் சாரத்தைக் கொண்ட, மக்கள்திரள் சார்ந்த புதிய ஜனநாய கக் கலாச்சாரமே!

எனவேதான், "கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!" என்ற முழக்கமே இன்றைய கலாச்சாரக் களத்திலே மாற்று முழக்கம் என்றோம், உழைக்கும் மக்களின் மாற்று அரசியல் அதிகாரத்துக்கான புதிய ஜனநாயக அரசை நிறுவும் போராட்டப் பணியுடன் இக்கலாச்சாரப் பணி இணைந் துள்ளது.

புரட்சிகரக் கலாச்சார, கலை இலக்கியப் பணி ஆற்றும் தீர்மானமான கட்டத்தில் நாம் இருக்கிறோம். இக்கட்டத் தில் புரட்சிகரக் கலைஞரின் பங்கு, பாத்திரம் என்ன? "புனிதமான மென்மையான மலரைப்பறிக்க அரிவாளைப் பயன்படுத்துகிறார்களே; கலையைப்பிரச்சாரத்துக்குப் பயன் படுத்தாதீர்!" என்று கூறி, மறைமுகமாக ஆளும் வர்க்கத் துக்குச் சேவை செய்யும் "கலை கலைக்காகவே" கலைஞர் களுக்கு மத்தியில், வாளைவிற்றும் யாழை வாங்குவோம் என்று சமரசப் பிழைப்பு நடத்தும் சீரழிந்த முற்போக்குக் கலைஞர்களுக்கு மத்தியில், புரட்சிகரக் கலைஞர்களை எப்படிஇனம் காண்பது? நமது இந்தியப் புதிய ஜனநாயகக் கலாச்சார முன்னோடிகளையும், சர்வதேசமக்கள் கலாச்சார முன்னோடிகளையும் தான் நாம் பக்கபலமாக அழைக்க முடியும், லூசுன் கூறினார். "அரசியல் முதலில்; கலை அதற்கேற்பமாறும்" புரட்சிகர அரசியலின் நீண்டதொலை-

படிப்பகம்

www.padippakam.com

நோக்குப் பார்வையும், உடனடிக்கடமையுணர்வும் ஆகிய இருபார்வைகளும் ஓர் புரட்சிகரக் கலைஞனுக்கு அவசியம் என்றார். எந்தக்காலத்திலும் சமரசத்திற்கு இடம் இருக்கக் கூடாதென்றார். எவ்வித அடக்கு முறைக்கும் அஞ்சாது துணிந்து நிற்கும் தியாக மனப்பான்மை வேண்டுமென்றார். மக்களுக்காக இறுதிவரை எருதுபோலப் பணிந்து உழைக்க வேண்டும், எதிரிகளுக்கு எதிராகப் பணியாது இடைவிடாது போராடவேண்டும் என்றார். லூசுன் பாரம்பரியத்திலே, ஆந்திரத்துப் புரட்சிக்கலைஞர் தோழர் சுப்பாராவ் பாணிக்கிரகி ஒருகையிலே பேனாவும், இன்னொருகையிலே துப்பாக்கியும் எடுத்துக்கொண்டு இந்திய விவசாயப் புரட்சியிலே இணைந்தார்; அவரது அடியொற்றித்தியாகி யான தோழர் செரபண்டராஜு மக்கள் இயக்கத்தின் முன்னணிப்படையாக இருக்கிறோம் என்ற உணர்வோடு கலைஞன் படைக்கவேண்டுமென்றும், படைப்புத்தொழிலில் திட்டமிட்டு எழுவது போலவே, அதனை அவசியமாக மக்களிடம் எடுத்துச்செல்வதற்குக் கட்டாயமாகத் திட்டம் வேண்டுமென்றார். அப்படிப்பட்டவனே மக்கள் கலைஞன் என்று வரையறையிட்டார். மக்களிடம் அவர்களின் அரசியலைத்தன் கலை மூலம் இயக்கமாக எடுத்துச்செல்லாத கலைஞரின் கலை இலக்கியம் வெறும் பாறைமேல் பெய்த மழைக்கு நிகரானது என்று முழங்கினார்.

இப்படிப்பட்ட வரையறைகளே புரட்சிகரக்கலைஞர் களைப் பிரித்துக்காட்ட நமக்குக் கிடைக்கின்ற—புதிய ஜனநாயகக் கலாச்சாரப் படைப்பாளிக்குக் கிடைக்கின்ற மிகச்சரியான வரையறைகள் !

★

மக்கள் கலாச்சாரப் பாரம்பரியத்தில் படைநடை போடத்தான் நமது தோழர் செவ்வண்ணன் வருகின்றார். தோழரின் பாடல்தொகுப்பு இன்று உங்கள் முன்வருகிறது. தோழர் செவ்வண்ணன் தமிழகத்துக் கலாச்சாரதாரத்தின்

படிப்பகம்

www.padippakam.com

ஒருதிருப்பு முனைக்கட்டத்திலே அறிமுகமானவர். திசை தெரிந்த அம்புகளைக் கலைஞர்கள் ஆயுதமாக ஏந்தவேண்டு மென்று அறைகூவி களத்திலே நுழைந்தவர். "கருத்துச் சுரண்டலால் காயம்பட்ட பூமிக்கு இலக்கியமே வைத்தியம்" என்று 'வில்'லங்கம் கூறி அறிமுகமானவர் அந்த முதல் கவிதைத் தொகுப்பிலேயே புதிய ஜனநாயகத்துக்கான இடி முழக்கங்கள் வெளிவந்துவிட்டன. அன்றைய கட்டம்— புதிய ஜனநாயகத்துக்கான போர்க்குரல் தொடங்கி, நடந்து, பின் அமைப்புமுறை இல்லாமல் உதிரி உதிரியாகச் சிறு நடையில் இயங்கிய காலம். தோழரும் இக்கட்டத்தில் தான் புதியஜனநாயக அரசியலுக்கு அறிமுகமாகிறார். அன்றைய மற்றகலைஇலக்கியப் போக்குகள் மத்தியில் புதியஜன நாயகக் கலாச்சாரமே தெம்பளிக்கக் கூடிய, நம்பிக்கை கொடுக்கக்கூடிய வழியாக இருந்தது. நாட்டில் புரட்சிவேகம் ஏற்றகதியில் இருந்தபோது சிறிதுகாலம் பொதுவாகச் சோசலிசம் பாடித்திரிந்த 'முற்போக்கு'ப் பறவைகள், அரசியல் தெளிவின்றி, அரசியல் இலக்கின்றி, (யதார்த்தம் பற்றிய தவறான கணிப்பில் சோசலிசமே இலக்கு என்று பேசினார்கள்), திசைக்கு ஒன்றாய்ச்சிதறிவிட்டன. கற்ப னார்த்த சோசலிசம், காந்தியம், மிதவாத மனிதாபிமானம் என்ற தத்துவார்த்தக் கலவையாய் இறுதியிலே சீரழிந்தன அவை. (அவற்றிலே, இன்று ஒரு பறவை ஆர்.எஸ்.எஸ். மதவெறிக்கும், இன்னொரு பறவை இஸ்லாம் மதவெறிக்கும் தூதுசென்றுவிட்டன. மற்றவை பாசிச இந்திராக் கும்பலுக்கும், இன்னும் மிச்சம் மீதி சீரழிந்த சினிமாத்துறை யிலே புதுமுக அறிமுகக் கவிகளாகவும் சொன்னதைச் செய்யும் எடுபிடிகளாகச் சென்றுவிட்டன.) தோழர் செவ்வண்ணன் சரியான இலக்கைப் பிடிக்கும் நேரத்தில் (எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்திலே எழுந்த) இடிக்குரல் மீண்டும் கேட்டது: கலைஞர்களே நீங்கள் யார் பக்கம்? இந்தியா பூராவிலும் எழுந்து கொண்டிருக்கும் உழைக்கும் மக்களின் போராட்டத்தீயின் பக்கமா? ஆளும் வர்க்கத்தின்பக்கமா? வர்க்கப்போராட்டம் பற்றியும்,

படிப்பகம்

www.padippakam.com

உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரம் பற்றியும் பேசிய புதியஜனநாயகக் கலாச்சாரப் போர்க்குரல் வர்க்கக் கேள்வியைக் கலைஞர்கள் முன்வைத்தது.

இந்தியா முழுவதிலும் வசந்தத்தின் இடிமுழக்கம் எழுதாம் ஆண்டுகள் பூராவும், தொடர்ந்தும் எழுப்பிய அதிர்வலைகள் தொடர்ந்தன. வடகிழக்குப் பகுதிகளின் தேசீய இனவிடுதலைப்போராட்டம் குறுகிய எல்லைகள் கடந்து கூர்மையடைந்தது; நாடுமுழுவதும் உள்ள கலைஞர்கள் புரட்சிகர தளத்தின் பக்கம் மீண்டும் ஒன்றுபடச் சித்தாந்தப்போர் எடுத்தார்கள்; புதியஜனநாயக வர்க்கங்கள் புதிய சிந்தனைபெறத் தொடங்கின, பாட்டாளிப் பகலவனின் ஒளியால்; இலக்கியதளம்பற்றி விமரிசித்த செரபண்டராஜு கூறினார். ''பாமரனைக் கதாநாயகனாக வைத்துக் காவியம் எழுதப்படத்தொடங்கிவிட்டது......'' என்றார்.

ஆனால் காவியத்தின் மொழியோ, வகையோ நடையோ இன்னமும் மத்திய தரவர்க்கக் கோடுகளுக்குள்தான் இருக்கிறது என்றார் இன்றைய கட்டத்து விடிவைத்தரவல்ல பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் முழுதும் சார்ந்து இயங்கும் கலைஞர்கள் தனிப்பட இயங்குவது பலன் தராதென்றும், இயக்கமாக அது இருக்க வேண்டுமென்றும் வரையறுக்கிறார். ''மக்கள்கலை'' கட்டுரை)

இதுதான் திருப்பு முனைக் கட்டம் என்று கூறினேன்; தோழர் செவ்வண்ணன் தோழர் செரபண்டராஜு கூறிய இயக்கச் செயல்பாட்டுக்குள் நுழைகிறார். புதிய ஜனநாயகக் கலாச்சாரம் பற்றி நின்று ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முழக்கங்களுடன் அமைப்பாக இயங்கும் நமது அமைப்புக்கு அறிமுகமாகிறார்; அமைப்புக்குள் இணைகின்றார். இணைகின்ற தொடக்கத்திலேயே ''ஒருவாளை எடு என் தோழா—போர்வாளை எடு'' என்று முழக்கமிட்டவாறு நுழைகின்றார். மக்கள்கலை இலக்கியக் கழகம் புரட்சிகர வாழ்த்துக்கூறி தோழரை வரவேற்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com

தோழர் அமைப்புக்குள் வந்திணைந்தது மிகமுக்கியமான கட்டம். காரணம், அமைப்புக்குள் இருந்து கொண்டு சீர் குலைவு வேலை செய்து, ''நமது அமைப்பில் அரசியல் வாடை வீசுகிறதே!'' என்று 'புது' முழக்கம் வைத்த கொள்கை ஓடிகளை நாம் விரட்டிய நேரம் அது! "அரசியல் உள்ளடக்கம் இல்லாமல் கலை இலக்கியம் இல்லை; இன் றைய கட்ட வர்க்கப்போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபிரபுத்துவ எதிர்ப்பு, என்றுதான் அமையமுடியும் இலக்கு புதிய ஜனநாயகமே, இந்த அரசியலை அன்றி வேறு பிரச்சாரம் ஏது?'' என்று நாம் போராட்டம் வைத் தோம். தோழர் செவ்வண்ணனும் அன்றைய போராட்டத் தில் முக்கியப் பங்காற்றினார்: ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்புச் சாராம்சத்தைத்தான் தோழர் "வாளை எடு என்தோழா...''வாக உருவாக்கினார். எனவே தான் சொன்னேன்; தோழர் வந்திணைந்த கட்டம் மிக முக்கியமானதென்று.

பின்பு இருவ நடடங்கள் ஏறக்குறைய நடந்துள்ளன. மக்கள்கலை இலக்கியக் கழகம் இன்று வளர்ந்த கட் டத்தில் இருக்கிறது. கிளைவிரித்து மக்களுடன் இணைந்து செயலாற்றத் தொடங்கியுள்ளது. இப்படிப்பட்ட இந்நேரத் தில் தோழரின் பாடல் தொகுப்பு வெளியாகிறது.

ஒப்பிட்டு நோக்கில் பார்த்தாலும், முந்தைய தொகுப் பைக் காட்டிலும் இத்தொகுப்பு இன்னொரு வீச்சுக்குச் சென்றுள்ளது. முக்கியமாக முழுவதும் பாடல்களாகவே இப்போதைய தொகுப்பு வெளிவருகிறது. முந்தைய ('திசை தெரிந்த அம்புகள்') தொகுப்பில் எளிய நாட்டுச் சந்தங்களை வைத்து எழுதப்பட்ட கவிதைகள், பாடல்கள் சில இடம் பெற்றாலும், செறிவுக்குணம் மிகுந்த பல்வேறு உள்ளடக்கங்களில், பொதுவான பொதுவுடமைக் கருத் துக்கள் பொங்கிவரும் கவிதைகள்தான் அதிகம் இடம் பெற் றன. இப்போதைய தொகுப்பு தோழரின் இன்னொரு

படிப்பகம்

www.padippakam.com

தீர்மானமான போராட்டக் குணத்தைக் காட்டுகிறது. எவ்வாறு தோழர் செரபண்டராஜு தன் நுரையீரலையே காற்றுப் பெட்டியாக்கி இசைத்துத் தன் பாடல்களை மக்களுக்கு எடுத்துச் சென்று பாடுவேன் எனச் சபத மிட்டாரோ, பாடல்களை பிரதான ஆயுதமாக ஏந்துங்கள் என்று எவ்வாறு அவர் தனது சக தோழர்களுக்கு உணர்த் தினாரோ அதே வழியிலே, தோழர் செவ்வண்ணன் நிரூபித்துக் காட்டியுள்ளார். புதிய ஜனநாயகக் கொள்கை கூர்மையாக வெளிப்பட்டிருக்கிற தொகுப்பு இது!

☆

தோழர் செவ்வண்ணனின் இத்தொகுப்பிலே மொத்தம் 37 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பிலே ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புதிய ஜனநாயக அரசியல் தெளிவாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. 'வாளை எடு என் தோழா'', ''புதிய முயல்கள்', ''நிப்பானி'' (கதைப் பாடல்), ''வடகிழக்கு மக்கள் படைப்பாடல்'', ''மதம் ஒரு அபினி', ''உலகப் பிச்சைக் காரியும் உள்ளூர் மக்களும்'', ''ஆந்திரத்துப் புரட்சிக்கவி'' ஆகிய பல பாடல்களில் எடுத்துக் கொண்ட பாடு பொருளை ஒட்டிப் புதிய ஜனநாயக விடியலை முடிவாக் கிப் பாடியிருப்பதைக் காணலாம். இவ்வாறு தொலை நோக்கைச் சுட்டிக் காட்டியிருப்பதைப் போலவே, உடனடி கடமையான பாசிச எதிர்ப்பு, பாசிச கலாச்சார எதிர்ப்பு என்பதும் அடிக்கடி தெளிவுற எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மக்கள்கலை இலக்கியக்கழகம் இத்தெளிவுடன் தான் நடைமுறை வேலைகளை வகுத்துக் கொண்டுள்ளது. இந்த அமைப்பின் வழிகாட்டுதலை அடிப்படையாக வைத்துப் படைப்பில் ஈடுபட்டுவரும் தோழரின் தொகுப்பிலும் இவ் வழி முறையைத் தெளிவாக நாம் காணலாம்.

நாம் பாசிசக் கலாச்சாரத்தை அது மக்களை முழுவது மாகச்சூழ்ந்து இறுக்கிவிடுவதற்கு முந்திக்கொள்ளவோ, தலைதூக்கவோ அனுமதிக்கக் கூடாது! ஆளும் வர்க்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com

தனது நெருக்கடிகளை உழைப்பாளிகள் மீதும் மற்றமுள்ள ஜனநாயக வர்க்கங்கள் மீதும் திணித்து அடக்கியாளக் கையாளும் ஒடுக்குமுறை அரசாட்சி வடிவமே பாசிசம்! நம்து பணியான புதிய ஜனநாயகக் கலாச்சாரப்பணிக்கு மிகக் கொடிய, ஆனால் நிலையற்ற, தற்காலிகமான எதிரியே பாசிசக் கலாச்சாரம் என்பதை உணர வேண்டும். நமது உழைப்புப்பணி பாசிசத்தையும், அதன்கருவியான பாசிசக் கலாச்சாரத்தையும் எதிர்த்துத்தூக்கி எறிவதாக இருக்கும்.

இந்த உடனடிப் பணியின் சாராம்சத்தைந் தோழரின் பல கவிதைகளில் நாம் காணமுடியும். குறிப்பாக "பாரதத்துப் பூமியிலே", "வெளிச்சக்குருதி", "குதூப்மினார்" ஆகிய பாடல்களிலே கூர்மையாக பாசிச எதிர்ப்பு விழுந்திருக்கிறது.

"பாசிச மேகங்கள் கோபுரக் கலசம்!—வெள்ளைப்
பயங்கரமே கலசத்தின் கவசம்!
இனி இருட்டை மிதிக்க ஒளிகொண்டு போவோம்!
இங்கே கிணற்றை இறைக்க (செங்)கொடி
கொண்டு போவோம்!"
(குதூப்மினார்)

அதே டெல்லி-குதூப்மினார் சம்பவத்தில் மக்கள் இன்னுயிர் பலிவாங்கப்பட்டது தோழருக்குப் பாசிசக் கொலையாகத் தான் படுகிறது.

"கோபுரத்தில் பாசிசத்தின் கும்மிருட்டு தள்ளுதையா!
குழந்தைகளின் பிணத்தைக் கண்டு
குதூப்மினார் சொல்லுதையா!"
......பாரதத்துப்பூமியிலே பாசிசத்து அடக்குமுறை
(பாரதத்துப்பூமியிலே)

தோழரின் வர்க்கக்கோபம் எல்லாப் பாடல்களிலும் பொங்கிக் கொப்பளிப்பதைப் பார்க்க முடியும். பின்னித் தொழிலாளர் போராட்டத்தைப் பற்றிப் பாடும போதும், விவசாயிகளின் போராட்டம் நாராயணசாமி நாயுடுயால் சமரசப்படுத்தப்படுவதைக் கண்டு கொதித்துப்பாடும் போதும், நிப்பானி நடுத்தர விவசாயிகளுக்கு விடிவு இந்தியம்ண்ணி

படிப்பகம்

www.padippakam.com

லிருந்து ஏகாதிபத்தியத்தை, நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கி எறியும் போது தான் என்று முழங்கும் போதும், சாதிக் கொடுமைகளில், தீவைப்புக்களில், கொலை, கொள்ளை, கற்பழிப்புக்களின் அடிவேராக வர்க்கப்போராட்டத்தை எடுத்து விளக்கும் போதும், வைகை வெள்ளத்தின் போது குடிசைகளை மட்டும் காலிசெய்யச் சொல்லிக் குடிசை களைப் பிய்த்தெறிந்தது, குடிசைகளில் புகுந்து உறங்கிக் கிடக்கும் குழந்தையைத் தொட்டிலோடு வெட்டிய கொடூரம் ஆகியவற்றை ஆவேசமாகத் தாக்கிப் பாடும் போதும், 'அரேபியாவுக்குப் போய் அதிகப்பணம் சேர்த்துவா' என்று பிழைப்புக்கு வழி கூறும் அறியாத் தாயிடம் கோபத்தோடு அது முறையே அல்ல என்று ஆற்றாமையோடும், அறிவுறுத்த வும் எடுத்துக் கூறும்போதும் இதே வர்க்கக்கோபம் சீறி வெடிப்பதைப்பார்க்கலாம். எடுத்துக்காட்டாக ஒன்று.

"மோதுற ஆள முகம்பார்த்து மோது!
முதுகெலும்பு எங்கள் உழவர்படை!—திரை
கோதுற பேச்சு; கூட்டணிவேட்டை
தோதுப் படாது எழுந்துநட!

....

....

செக்கரிடுதே பக்கத்தில் கீழ்வானம்
செக்கொடித்த மாடுவிடுதலை—இனி
நிக்க நேரமில்லே "நிலம்உழு பவனுக்கே"
நெடுக்க முழங்குதுகுரல்வளை!"

(களையெடுப்பு கும்மி)

இந்தியாவுக்கு விடுதலை எப்போது, இங்குள்ள அனைத் துச் சமூகச் சிக்கல்களுக்கும் விடிவு எப்போதென்று கூறும் போது, மக்கள் கலை இலக்கியக்கழகம் சர்வதேச மக்கள் விடுதலை இயக்கங்களின் அனுபவத்திலிருந்து கற்றுக் கொள் கிறது; இந்த நாட்டு நிலைமைகளுக்கேற்ப அவற்றைப் பிரயோகித்து விடிவைக் கூறுகிறது. "சர்வதேசப்பாட்டாளி வர்க்கக்கலாச்சாரத்தை உயர்த்திப் பிடிப்போம்" என்று

படிப்பகம்

www.padippakam.com

கொள்கை முழக்கமாக்க் குரல் கொடுக்கும் மக்கள் கலை இலக்கியக்கழகம் புதிய ஜனநாயகக் கலாச்சார முன்னோடிகளை, சர்வதேசப் பாட்டாளிவர்க்ககலாச்சார முன்னோடிகளைப் பாடி வருகிறது; அவர்களின் போராட்ட வாழ்வை, கருத்துக்களைப் பிரச்சாரம் செய்கிறது, அவர்களுக்கு வீர விழா எடுத்து மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இவ்வாறு தோழர் லூசுன் நூற்றாண்டு விழா எடுத்தது தோழர் செவ்வண்ணன் இப்பார்வையின் அடிப்படையிலே, லூசுனைப் பாடுகிறார்.

“இமயம் நாங்கள் எதிரிக்குப் பணியோம்!
எருதுபோல மக்களுக்(கு) உழைப்போம்
மக்களைக் குழந்தைகள் என்று
மதித்த லூசுனே!—உன்
மானுட நேசம் எங்களுக்கு
புரட்சிப்பாடமே!”

(லூசுன் நூற்றாண்டு விழாப் பாடல்)

சர்வதேசப் பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தின் வழி நின்று இந்திய விவசாயப் புரட்சிக்குத் தன் ரத்தத்தையே வித்துக்களாகத் தூவித் தியாகியான இந்திய மண்ணின், ஆந்திரத்துப் புரட்சிக்கவி, புதிய ஜனநாயகப் புரட்சியை அறிவிக்கப் புறப்பட்ட புயற்பறவை தோழன் செரபண்ட ராஜுவின் கொள்கையை கடந்த மாதங்களில் தமிழகத்தில் ஓர் இயக்கமாக மக்கள் கலை இலக்கியக் கழகம் பிரச்சாரம் செய்தது. அப்போது நமது தோழர்கள் தோழர் செரபண்டராஜுவுக்கு வீர அஞ்சலியாகப் பாடல்களை எழுதி முழங்கினார்கள். அப்பாடல்களில் ஒன்று செவ்வண்ணனின் பாடல்:

“மரணதேவன் காலில்கூட—அவர்
மண்டியிட்டுப் பணியவில்லை!
உதடுசொன்ன ஒரேவார்த்தை—அது
யுத்தம் யுத்தம் மக்கள்யுத்தம்!”

(ஆந்திரத்துப் புரட்சிக் கவி)

படிப்பகம்

www.padippakam.com

இந்தியப் புதிய ஜனநாயகப் புரட்சிக்காகப் போராடித் தியாகியானவர்களின் பாதையிலே கோடானு கோடி உழைக்கும் மக்கள் துடிப்போடு போராடி வருகிறார்கள்! அதன் தொடக்கப் புள்ளிகள் ஏற்கெனவே சுடர்விட்டு ஒளி வீசுகின்றன! தமிழகத்துத் தருமபுரி விவசாயிகள் மத்தியிலே புரட்சிக் கருத்துக்களை வித்தூன்றி இளைஞர் அணியிலே உழைத்து மக்களோடு நின்ற ஒரே காரணத்திற்காக கொலை வெறிபிடித்த பாசிசப் பாதந்தாங்கி எம்.ஜி.ஆர். அரசின் அடக்குமுறைக் கருவிகளால் கொலை செய்யப்பட்டுத் தியாகியான தோழர் பாலன். இவரைப்பற்றி தோழர் செவ்வண்ணன் வீரமுழக்கமிடுகிறார் தனது பாடலில்—

"..
விட்டால் புயலை எழுப்புவான்!—பாலன்
வீழ்ந்தும் நம்மூச்சில் கிளம்புவான்!
....
....
பாட்டாளி யுத்தகாண்ட பாலபருவம் தருமபுரி!
நாட்டிலினி புதியஜன நாயகமே நமது குறி!
துளைக்க எதிரிவரைக்கும்—பாலன்
தோழர் புரட்சிவணக்கம்!"

(தோழர்களே, நண்பர்களே)

புரட்சிகரப் பாரம்பரியம் என்று கூறும்போதே—எதிரியை நோக்கி மக்கள் குவியாமல் திசை திருப்பிச் சிதறடித்து விடும் சமரசவாதிகளை ஈவிரக்கமின்றிச்சாடி தனிமைப் படுத்துவது என்பதே கவியின் திசையாய், இலக்காய் இருக்க வேண்டும். இக்குணாம்சத்தை நம் பாட்டுக்காரரிடம் பார்க்கலாம். இந்தியப் புரட்சிக்கு வழி பாராளுமன்றமல்ல, அது சமரசப் போக்கே என்று மிகக் கறாராகப் புரட்சிக்கும், சமரச சீர்திருத்த வாதத்துக்கும் ஓர் தெளிவான எல்லைக்கோட்டை வைக்கிறார் தோழர். நையாண்டிக் காவடிச் சிந்து மெட்டிலே வருகின்ற இவரது 'தேர்தல் வினியோகம்' என்ற பாடல் இதனை நன்கு விளக்கும்:

படிப்பகம்

www.padippakam.com

''வாக்குச் சீட்டுகள் மத்தாப்பு ஒப்பந்தம்
போக்கு சமரசமே!—இடி
நோக்கும் முழக்கத்தில் மாற்று அதிகாரம்
வார்க்கும் புதுமின்னலே!—மக்கள்
வசந்தம் புரட்சியிலே!

(தேர்தல் வினியோகம்)

இப்படிப் பல பாடல்களை எடுத்து விளக்கம் தந்து கொண்டே போகலாம். உள்ளடக்கத்துக்காகத்தான் இவற்றை எடுத்துக் காட்டுகிறேன். இதனை நீங்கள் மக்களுக்கு எடுத்துச் சென்று முழக்குங்கள்! அப்போது தெரியும் இத் தீப்பொறிகளின் சத்து!

*

தோழர் செவ்வண்ணன் பாடல்கள் பற்றிய அறிமுகம் வழங்குகையில் சில முக்கிய விவரங்களை மட்டும் குறித்தும் கொள்வது அவசியமாகக் கருதுகிறேன். அது வடிவம் பற்றியது. மக்கள் கலை இலக்கியக் கழகம் உருவத்திற்கும், உள்ளடக்கத்திற்கும் அய்க்கியத்தைச் சாதிக்க வேண்டு மென்று கூறுகிறது; பிரதானமாக, பண்டைப் பொது வுடைமைச் சமூகத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருப் பதும், விவசாயிகள் மத்தியில் காணப்படுவதுமான வளம் மிக்க பாடல் வடிவங்களை எடுத்துக்கொண்டு வெகு ஜனக் கலை, தேசியக்கலை இவற்றுக்கான வடிவங்களைப் பெற முயல வேண்டுமென்று கூறுகிறது: தவிர; சர்வதேசப் பாட்டாளி வர்க்க சோசலிசக் கலை இலக்கியத்திலிருந்தும், மேற்கத்திய மறுமலர்ச்சிக் கலைப் பாரம்பரியத்திலிருந்தும் கற்றுக்கொண்டு புதிய வடிவங்களைப் படைக்க வேண்டும் என்று கூறுகிறது. இவற்றிலிருந்து நாம் பெறுவதென்ன? இன்றைய இந்திய விவசாயப் புரட்சி எனும் உள்ளடக்கம் கருதி கோடிக்கணக்கான உழவர்களின் கலை வடிவங்களை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றில் இருக்கும் நிலப்பிரபுத்துவக் கசடுகளை நீக்கி விட்டு நாம் அவற்றைப் பயன் படுத்துவோம்! இதனை நாம் புதிய ஜனநாயகக்

படிப்பகம்

www.padippakam.com

கலைக்காரர்கள் பயன்படுத்துவதிலிருந்து கற்றுக் கொள்கிறோம் !

தோழர் செவ்வண்ணனின் பாடல்களிலே உள்ளடக்க உருவ அய்க்கியத்தைப் பார்க்க முடிகிற—ஒரு சில குறைகள் தவிர, தோழரின் சிறப்பம்சங்களைக் கூறும் போதே, எனது விமரிசனங்களை, கருத்துக்களை, ஆலோசனைகளை வழங்குவது அவரது வருங்காலப் படைப்பாக்க முயற்சிகளுக்கு நிச்சயம் பயன் சேர்க்கும் என்று கருதுகிறேன்.

இன்றைய இந்தியச் சமுதாயச் சீரழிவு பலவிதங்களில் வெளிப்படுகிறது. இவை அனைத்தையும் நுணுகிப் பார்க்கும் கண்கள் தோழர் செவ்வண்ணனுக்கு உண்டு. அதே சமயம் தோழரின் பாடல்களைப் பாடும் போது நெருடுவதெலலாம் ஒன்று தான். பாடல்கள் ஏன் கடினமாக இருக்கின்றன ? பாடும் போதே நெஞ்சைத் துளைத்து உணர்வுடன் கலந்து பின் சிந்திக்க வைக்கும் அளவிற்கு ஓர் சில பாடல்களே இருக்கின்றன, குறை எங்கே இருக்கிறது ? முடிந்த அளவு நான் காரணங்களை ஆய்ந்து பார்க்கிறேன்.

தோழரின் பாடல்கள் பொருட்செறிவுள்ளவை ; அநேக விவரங்களை உள்ளடக்கியவை; எளிய உழைக்கும் மக்களுக்கு அவசியம் தேவையான, ஆனால் ஒரே நேரத்தில் விளங்கிக் கொள்ளும் அளவு இலகுத் தன்மை இல்லாத விவரங்களை கொண்டவை. எனவே பாடு பொருளின் விவரங்களைபல பாடல்களுக்குப் பிரித்துக் கொண்டு செய்தால் சிறப்பாக அமையுமாகக் கருதுகிறேன்.

வடிவ ரீதியில் இன்னும் சில பிரச்சனைகளைத் தோழர் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். அது பாடலில் எந்த அளவு அறிதல் பூர்வமான விஷயங்களைப் பயன்படுத்துவது ; எந்த அளவு உணர்வு பூர்வமான விஷயங்களைப் பயன்படுத்துவது; இவை இரண்டுக்கும் உள்ள உறவினை எப்படிக் கையாள்வது ?

படிப்பகம்

www.padippakam.com

பாடல் என்ற வகையே அடிப்படையில் உழைப்புப் போக்கிலிருந்து விளைந்தாகும். ஏற்றம்பாட்டு, நடவுப்பாட்டு, உழவுப்பாட்டு, தறிப்பாட்டு, வண்ணாத்திப்பாட்டு! தாலாட்டு, பழங்குடி மக்களிடையே (வங்காளத்தில் உள்ள சந்தால் பழங்குடி மக்களிடையே உள்ள பாடல்களை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்,) வழங்கி வரும் எழுச்சிப் பாட்டு போன்ற அனைத்துக்கும் அடிப்படை அவர்களின் உழைப்பும், போராட்டமுமே. இவற்றிலும் மேல் நிலையில் இருப்பது உணர்வு அம்சமே ஆகும். சமுதாயத்தில் உழைப்பு பிரிவினை வளர்ச்சிபெற, வளர்ச்சிபெற உழைப்போடு சம்பந்தப்பட்டிருந்த பேச்சிலும், பாடலிலும் இருந்த துடிப்போசை, இன்னோசை (இனிமை) ஆகிய அம்சங்கள் உழைப்பிலிருந்து பிரிந்தவடிவங்களாக மாறிவிட்டன. ஆனால், அரை காலனிர அரைநிலப் பிரபுத்துவ இந்தியாவில் பின் தங்கிய நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையிலே ஈடுபடும் எண்பது விழுக்காடு உழவர்களின் வாழ்வோடும், மிகமிகப் பின் தங்கிய உற்பத்தி முறையிலே அடிமைகளாக வாழும் பழங்குடி மக்களின் வாழ்வோடும், இறுகப் பிணைந்துள்ள பாடலெனும் கலை வடிவிலே உணர்வு அம்சம் தான் மேலோங்கி உள்ளது, இன்னொருபுறம் உழைப்புப் பிரிவினை வளர்ச்சியை ஒட்டி, உணர்ச்சிக்செறிவும், அறிதல் அம்சமும் அதிகமாகக் கலந்த கவிதைத்துலை தனியே வளர்ந்தது. ஒட்டு மொத்தமாகக் கூறுவதானால், பெருவாரி உழைக்கும் மக்களுக்கு இன்னமும், ஆயுதம் பாடல்தான். அதில்தான் அவர்களின் உணக்வுத்துடிப்பு, வர்க்க கோப ஆவேசங்கள், தாபங்கள், ஆசைகள் வெளிப்படுகின்றன,

மேலே கூறியவற்றிலிருந்து மக்கள் பாடலுக்கான சில அடிப்படைகளை விளங்கிக் கொள்ள முடியுமெனக் கருதுகிறேன். பாடலுக்கு உணர்ச்சி அம்சமே உயிர். உழைக்கும் மக்களின், ஜனநாயக சக்திகளின் உணர்வுகளை,—சுருக்கமாக, புதிய ஜனநாயக சக்திகளின் உணர்வுகளை—மக்களின் வாழ்ந்து கண்ட உணர்வுகளை அழுத்தத்

படிப்பகம்

www.padippakam.com

துடன் நிலத்தைக் கீறுவதுபோல் பதிக்க வேண்டும் இதுவே சிறந்தபணி.

தோழர் செவ்வண்ணன் பாடல்களிலே அதிகபட்சமாக அறிதல் அம்சம் மேலோங்கிக் காணப்படுகிறது; உணர்வு அம்சம் கீழ் நிலையில் உள்ளது; பொருட் செறிவுக்காக விவரங்களை மேலேமேலே அடுக்கும் ?போக்கும் இருக்கிறது கூர்மையான உதாரணம் ஒன்றே ஒன்றை மட்டும் இங்கே கொடுக்கின்றேன்:

"பதியம் போடுறது பாராத நிலையா?
படுத்துக்கிடப்பது மான்தலை—இனி
அதிகம் தெரிஞ்சவன் ஆணவம்ாகாது!
ஆராய்ஞ்ச கைநாட்டு தூங்கிலே!"

(களைஎடுப்பு கும்மி)

மேற்படிபாடலில் கொடுக்கப்படும் 'மான்தலை' விவகாரத்தை தோழர் சீனப்பத்திரிகை ஒன்றின் கார்ட்டூனிலிருந்து எடுத்திருக்கிறார். இந்த விவரத்தை உருவகமாக எடுத்துச் காட்டுவது பாடலின் நோக்கத்தையே தோற்கடிப்பதாகும். இப்பாடல் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டுமானால், போராட்டமே வழி சமரசமல்ல என்ற கருத்தை விவசாயிகளுக்கு எடுத்துக்கூற வருகிறது. அப்படியானால் எளிய விவசாய மக்களுக்கு இந்தச் செறிவான உருவகம் புரியுமா? பாடலில் உணர்ச்சி அம்சம் எந்த அளவு உயர்ந்து நிற்கிறதே, அந்த அளவுக்கு அது மக்களை அதிகம் தன்பக்கம் இழுத்துப் போராட்டக் கருத்தை அளிக்கும். தோழருடைய பாடல்களையேஎடுத்துக்கொண்டு உதாரணம் காட்டலாம்.

"அரேபியர்வுக்குப் போகச் சொன்னாயே
எம் அம்மா என்னைக்
ஆளுயர வளர்த்துவிட்டு ஆசைமகனைப் பிரிந்து
வாழ—"

சொந்த நாட்டைவிட்டு அரேபியாவுக்குப் போய் அங்கே அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைச்

படிப்பகம்

www.padippakam.com

சேவகம் செய்வது சரியா அம்மா? இந்திய நாட்டையே சுரண்டல் காடாக்கி விட்டிருக்கும் ஏகாதிபத்திய நாம்களை அதன் ஏஜெண்டுகளான தரகு அதிகாரவர்க்க நிலபிரபுத் நுவத்தை முதலில் தூக்கிஎறிய வேண்டாமா?—என்று கேட் நம்போது, அரசியல் செறிவு. ஜனநாயகப் பற்றுடன் தாய்ப் ராசத்தை இழைத்து அறிவுறுத்தும் தோழரின் பாடல் முயற்சி வெற்றி பெறுகிறது.

உணர்ச்சி மயமாகப் பொங்கிப் 'புதியஜனநாயகப் போராளியாய் நூற்றுக்கணக்கான பாடல்களைப்பாடி மக்க ளுடன் வாழ்ந்து, மக்கவிடமிருந்து கற்று மக்களுக்கே கொண்டு சென்ற 'முன்னோடிகள் சுப்பாராவ் பாணிக்கிரகி, செரபண்டராஜு" ஆகியோரிடமிருந்தும், தற்போது போராட் டத்திலிருந்து கலை பிறக்கிறது என்று முழக்கமிட்டு வரும் தோழர்கர்த்தர் தோழர் வெங்கபண்டு பிரசாத் (ஜனநாட்டிய மண்டலி, ஆந்திரம்) ஆகியோரிடமிருந்தும் செவ்வண்ணன் கற்றுக்கொள்ளவேண்டும். கந்தர் விவசாயக் கூலிகள் வாழ்வு பற்றி எழுதிய பாடல் அவர்களது உழைப்போடு அய்க்கிய மாகிப்பாடப்படுவது பற்றி நேரில் ஒருமுறை உணர்ச்சி ததும்பச் சொல்லி அப்பாடலைப்பாடிக் காட்டினார். மேலும் ஓர் எடுத்துக்காட்டு மட்டும் கூறிவிட்டு மேலே செல்கிறேன்.

"புங்கமரத்தடியில் லட்சும்ம்மோ லட்சுமம்மோ—முகம்
பொலிவின்றி அமர்ந்திருப்ப தேதுக்கம்மோ
ஏதுக்கம்மோ

....

காலையில் நிலப்பிரபு கால்கையைத் தான்பிடித்து—நெய்
கழனி அறுக்கபோயி கட்டுகட்டி சுமை தூக்கி
கழனிச்சேற்றில் நீ நடந்து லட்சுமம்மோ, லட்சுமம்மோ
—உன்
கால்கைகள் ஓய்ந்ததோ லட்சுமம்மோ, லட்சுமம்மோ

....

பசியால்கத்தி உன் குழந்தை பாலின்றி துடிக்குது
சோளம் கூலிக்கறுத்து தட்டுகுத்தியே ரத்தம்கொட்டி

படிப்பகம்

www.padippakam.com

காலுவீங்கி கிடக்கிறாயா லட்சுமம்மோ, லட்சுமம்மோ
—அந்த
வாழ்வை எண்ணி கலங்குறாயோ லட்சுமம்மோ,
லட்சுமம்மோ'
(உழைக்கும் மக்கள் படையில்
சேரம்மா—கத்தாடாடல்

இவை போன்ற மாதிரிகள் செவ்வண்ணன் போன்ற தோழர்களுக்கு முன் உதாரணமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்த பிரச்சனை தோழரின் பாடல்களில் விவரங்களின் மிகுதியால் தெளிவுக்குப் பதிலாகச் சிக்கல் மிகுந்து உள்ளது. "ரத்தம் கொதிக்குதடா" பாடலில் துறைமுக ஆஸ்பத்திரி நிர்வாகிகள் துறைமுகத் தொழிலாளர்களைப் படுத்தும்பாட்டைக் கூறி வருகையில், திடீரென "அமெரிக்காவைத் திட்டிப்புட்டு—நாம ரசியாவவிடலாமா?" என்று எழுதியிருக்கிறார். இந்த கிட்டிப்புள் தாண்டுதல் கேட்பவருக்கு எளிதில் புரியாது. அதுமட்டுமின்றி எடுத்த பொருள் ஆஸ்பத்திரி தொழிலாளர்களைச் சுரண்டுவது எப்படி என்று அம்பலப்படுத்தும் நோக்கத்தோடு நின்றால் கூடச் சிறப்பாக இருந்திருக்கும், தோழர் செரபண்டராஜு கூறுகிறார்; ஓரிரண்டு சொற்கள் இங்கே அங்கே புரியாமல் போகலாம். "ஆனால் பாடலின் பொருள் தெளிவாக இருக்க வேண்டும்."

தோழரின் தொகுப்பில் வடிவம் சம்பந்தப்பட்ட இன்னொருகுறை—லூசுனைப்பாடுவதற்குப் பாகவதர் இசையைப்பயன் படுத்தியுள்ளது தான். 'நீலகருணாகரனே மணவாளா நீலகண்டனே' என்று பக்திப் பரவசத்தைப் பாடுவதற்கும் பாகவதர் எடுத்துக்கொண்ட கர்நாடத் இசைவடிவம் அது. நிலப்பிரபுத்துவ உச்சகட்டமாய் இசைத் துறையிலே வடிவ—உள்ளடக்க இணைப்பை அவர்கள் கண்டார்கள். நாம் வேறு வடிவங்களைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, இதுபோன்ற அவர்களின் மாதிரிகளைப் பயன்படுத்துவது சரியல்ல. தோழருக்கு எனது மாற்று ஆலோசனையை வழங்குகிறேன்; இதுபோன்ற வடிவத்தை

படிப்பகம்

www.padippakam.com

நாமும் பயன்படுத்தலாம்—எப்போது? எங்கு? நிலப்பிர புத்துவப் பிற்போக்கைக் கிண்டல் செய்துபாடும் போது நிலப்பிரபுத்துவத்தின் அடக்குமுறையை மக்களுக்கு எடுத்து விளக்க அதனைப்பயன் படுத்தலாம்.

தோழர் பழம்சாஸ்திரிய இசைவடிவங்களைக் கையாளும் போது இனி கவனமாக இருப்பது நல்லது. நாம் பழையன வற்றிலிருந்தும் கற்கிறோம்: அவற்றைச்சீரணித்து மட்டுமே, விமரிசித்து மட்டுமே எடுத்துக்கொள்வோம்—அப்படியே எடுத்துக் கொள்வது சரியல்ல இது கத்திமேல் நடக்கிற விஷயம் என்று மட்டுமே கூறி நிறுத்திக்கொள்கிறேன்.

மேறும் நான் விரிவாகச் சொல்வதைவிட தோழர் செரபண்டராஜு மக்களிடம் பாடல்களை ஓர் இயக்கமாக கொண்டு செய்வதற்காக என்ன செய்யவேண்டும் என்று கூறியதை இங்கே மேற்கோளாகக் காட்டுகிறேன். இது மக்கள் கலைஞர்கள் அனைவருக்குமே வழிகாட்டியாக இருக்கும்:

"தோழர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை:

★ மக்களுக்காகப் பாடல் எழுதும்போது மிகமிக எளிய மொழியையே பயன்படுத்துக! மக்களின் மொழியை உங்களுடையதாக்கிக் கொள்க!

★ உங்களுடைய பேச்சுக்களில், கட்டுரைகளில், மிக அவசியமாக அதிகபட்சம் மக்கள் பாடல்களையே ('நாட்டுப் பாடல்களை') பயன்படுத்துக!

★ மக்கள் இயக்கத்தின் முன்னணிப் படையாக இருக்கிறோம் என்ற உணர்வோடு, வசன கவிதைகளோடு பிற கவிதைகளோடு, பாடல்கள் எழுதுங்கள்! மேலும் பிரசுரங்கள் எழுதுங்கள்! இதில் தயக்கம் சிறிதும் காட்டாதீர்கள்! மக்களிடையேசெல்லுங்கள்! பரந்து விரிந்து செல்லுங்கள்! பாடுங்கள்!

★ உங்கள் வாசகர்கள் உழைக்கும் மக்களே!"

('மக்கள் பாடல்'—கட்டுரை)

படிப்பகம்

www.padippakam.com

தோழர் செவ்வண்ணனுக்கு—

இப்பாடல் தொகுப்பினை அறிமுகப் படுத்தி முடிக்கும் கட்டத்தில் சில விஷயங்கள் மேலே விவாதிக்கப்பட்ட குறைகள் என்று முழுதும் நீங்கும்? என்று கேட்கப்படலாம். நீங்கள் கவிதை அமசத்தைக் காட்டிலும் பாடல் அம்சங்கள் நோக்கித் தீவிரமாகத் திரும்புங்கள்! தோழர் கத்தர் கூறுவது போல "உங்களது பாடல்கள் உழைக்கும் மக்களின் நாவிலே அதன் சொல்லிலே, அவர்களது உழைப்புடன், அவர்களது போராட்டத்துடன் இணைந்து கலக்கும்போது" தன்னால் நீங்கிவிடும்! மக்களிடையே செல்லுவோம்! உங்கள் படைப்பு பற்றிய விமர்சனத்துக்கு மக்களிடம் அணுகிக் கேட்டுத் திருத்துங்கள். இதை ஓரளவு நீங்கள் நடைமுறைப்படுத்தி வருகிறீர்கள் என்பது நான் அறிந்ததுதான்! மக்கள்கலை இலக்கிய வாதிகளின் போர்ப்பாசறையாம் நமது மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் கொள்கையை, முழங்குவோம்! நமது அமைப்பை உறுதிவாய்ந்த எஃகுக்கோட்டையாகக் கட்டுவோம்.

அன்பார்ந்த உழைக்கும் மக்களே !

சர்வதேசப் பாட்டாளிகளின் தலைவன்,
மனிதகுல விடுதலைக்குத் தத்துவம் படைத்த வீரன்
மார்க்சினுடைய நூறாவது நினைவாண்டிலே,
இந்தியப் புதியஜனநாயகப்போராளி
முன்னோடித் தோழர் செரபண்டராஜுவின் வீர
நினைவஞ்சலியாக இன்று இதோ உங்கள்முன்னிலையிலே
இப்பாடல் தொகுப்பினைக் காணிக்கையாக்குகிறோம் !

'என்னையே ஒரு பாடலாகப்
புரட்சிக்கு அளிக்கிறேன்!'

—செரபண்டராஜு

"கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!"

தோழமையுடன்

சென்னை
14-3-1983

வீராச்சாமி
மக்கள் கலை இலக்கியக் கழகம், சென்னை

www.padippakam.com

துப்பாக்கியும் புல்லாங்குழலும்

தோழர்களே, நண்பர்களே.

இன்றுநாம் ஏற்றுக்கொண்டுள்ள புதியஜனநாயக அரசியல் கொள்கையை எளிய மக்கள் வடிவத்தில் இசைத்து முழங்குவோம். நான்கு நாய்களான நிலப்பிரபுத்துவம்; தரகு அதிகார முதலாளித்துவம்; ரசிய சமூக ஏகாதிபத்தியம்; அமெரிக்க ஏகாதிபத்தியம்—களைத் துரத்தியடிக்கத்தான் மக்கள் எனும் புதியமுயல்கள். இந்தியாவில் குறிப்பாக நிலப் பிரபுத்துவ நுகத்தடிகள், நொறுங்கும்மட்டும் கலை இலக்கியத்தளத்திலும் எதிர்ப்பு வடிவமாக மக்கள் பாடல் இருந்தேதீரும். இவ்விசயத்தில் உள்ளடக்கம், வடிவம் இரண்டுக்கும் நாம் வழங்குகிற சமூக மதிப்பும் இதுதான்.

நாம் சமூகத்திலிருந்தே கலையை அணுகுபவர்கள். ஸ்பெயின்நாட்டுப் போரில் தியாகியான புரட்சிகர அறிவாளி கிறிஸ்டோபர் காட்வெல் கூறினார்: "கலையைக் கலைக் குள்ளிருந்து நோக்கினால் சமூகத்திற்கு வெளியே இருப்போம். கலைக்கு வெளியே இருந்துநோக்கினால் சமூகத்திற்குள் உள்ளே இருப்போம்". பொருளாதார அஸ்திவாரத்தில் நிற்கும் அரசியல் கோபுரத்தின் உச்சிக்கலசம்தான் சித்தாந்தம். சித்தாந்த வடிவங்களில் ஒன்றுதான் கலை இலக்கியம். மூலம், சாரம், வளர்ச்சி என்பதின் சமூகத்தை நோக்கும் முழுப்பார்வை இதுதான்.

கடந்த காலத்தை நிகழ்காலத்தில் நின்று பரிசீலித்து எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்வது என்பதான இயங்கியல் பொருள்முதல்வாத அடிப்படையில் இங்கே புரட்சிகரவரலாற்றைப் படைப்பதுதான் மார்க்சிய லெனினிய மாசேதுங்சிந்தனை—செயல் பாட்டுக்காரர்களான நமது சித்தாந்தம்.

படிப்பகம்

www.padippakam.com

"சித்தாந்தத்துக்கு விளக்கம் வழங்குவது அல்ல கலை இலக்கியத்தின் வேலை" என்றார் தோழர் மாசேதுங். அதேவேளை சித்தாந்தத்தை மறைத்து அணுகுமுறையையும் வழிமுறையையும் புறக்கணித்து 'முடிவை' அடையச்செய்வதற்கான இயந்திர இயக்கத்தை நாம், ஆதரிப்பவர்களல்ல. இங்கு தான் 'கலை, கலைக்காக' வாதிகளுக்கும் நம்க்குமான வேறுபாடு—நமது சித்தாந்தம் தூக்கலாகத் தெரிகிறது.

அஸ்திபாரத்திலிருந்தே கலசத்தைப் பார்க்க முடியாது. கலசத்தைக் கோபுரத்தில் ஏறியே காண்போம். கலை இலக்கியத்தை அரசியலில் நின்றே காண்போம். "ஒரு சமுகத்தேவையைச்சிறந்த முறையில் சந்திப்பதற்கு உனது வர்க்கத்தின் தலைமையில் நீ இருக்கவேண்டும். அப்படி இருந்துகொண்டு அந்த வர்க்கத்தினரோடு எல்லாமுனைகளிலும் போராட்டத்தில் ஈடுபடவேண்டும். அரசியலற்ற கலை என்ற கட்டுக்கதையைத் தூள்தூளாக நொறுக்கி விடவேண்டும்" என்றார் ருசியப் புரட்சிக்கவிஞர் மாயகாவ்ஸ்கி. இது அரசியல் சித்தாந்தத்தை, அதன் தலைமையை வர்க்கப்போராட்டத்தைக் கலை இலக்கிய வாதிகளுக்கு வலியுறுத்துகிற அறிவுரை.

அப்படி பங்கேற்றவர்களால்தான் புரட்சிகரப் பாரம்பரியம் நம்க்குக் கிடைத்துவருகிறது. அதுதான் ஒருசெங்கொடியைப்போல் இன்னும் சுடர்விடுகிறது. பிற்போக்குப் புறநிலை, வெகு பலரை தடுமாற வைக்கிறது. புரட்சிகர அகநிலை, ஒருசிலரைத் தலைநிமிரவைக்கிறது. இவ்வகையில் உதாரணமான ஒருசெய்தி.

புற்றுநோய், சிலிநாட்டுக்கவிஞர் பாப்லோநெருடோவுக்கும் வந்தது. ஆந்திரப்புரட்சிக்கவி செரபண்டராஜுவுக்கும் வந்தது. 'உச்சிவெயில்' என்று ஒரு காலத்தில் புகழ்ந்த ஸ்டாலினுக்குள் பின்னால் "ஒரு தேவனும் இருந்தான். ஒரு சாத்தானும் இருந்தான்" என்று புலம்பிய நெருடோ, ரசியப்பிசாசுகளின் நாற்காலி அரசியலில் அமர்ந்து செத்தார். "போராட்டத்தின் திசையே எனது பாடலுக்குப் பிராணவாயு" என்று முழங்கிய ராஜு

படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகர அரசியலையே பற்றி நின்று தியாகியானார். நம்க்கு வழிகாட்டி, சிலியின் கவிஞரல்ல, செரபண்டராஜுவே தான். நெருடாவின் நண்பரான கியூபாவின் ரசிய எடுபிடி பிடில் காஸ்ட்ரோ 'அமைதிவழிப்புரட்சியிலே, அன்னை இந்திராவை கூட்டுச்சேரா மாநாட்டில் (83 மார்ச்) அணைத்துக் கொண்டான். ஆனால், **"கைவிரல் கூட நறுக்கப்படலாம். எனது முஷ்டியின் வலிமையை இழக்கமாட்டேன்"** என்ற புரட்சியாளன் செரபண்டராஜுவின் நண்பர்களாகிய நாம் நீண்ட மக்கள் யுத்தப்பாதையை உயிர்மூச்சாக அணைத்துக் கொண்டுள்ளோம்.

அப்படி **யாருக்காக** நமது ஆயுதம்?

இந்தியப்பாட்டாளிவர்க்கம், விவசாயப்பெரும்பான்மை, சிறுமுதலாளியவர்க்கம் அறிவாளிகள், மாணவர்கள்—இவர்களுக்குத்தான்.

அப்புறம் எப்படி இருக்க வேண்டும் கலையிலக்கிய ஆயுதம்?

"மக்களின் வாழ்க்கையில் கண்டெடுக்கப்படுகிற மூலப் பொருட்கள், அவர்களுக்குச் சேவை செய்கிற கலை இலக்கியத்தின் சித்தாந்தவடிவத்துக்குள் ஒழுங்குபடுத்தப் படுகிறது" என்றார் மாவோ.

இங்கே, குறிப்பாக, பாடல் வகையைப் பற்றிய வரலாற்றைப் பார்ப்போம்.

ஆந்திரத்தில் புரட்சிகர எழுத்தாளர் சங்கம் 70-இல் துவங்கிய அந்த ஆண்டிலேயே "கம்மம்" கருத்தரங்கில், வசன கவிதையிலிருந்து பாடல் எழுதுவது என்ற முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டது. அங்கு தெலுங்கானாவின் துப்பாக்கி மறுமுறை சிரிகா குளத்தில் உயர்த்தப்பட்டதைப் போலவே 50 களின் பேனா, 70களில் சுப்பாராவ்பாணிக்கிரகிகளால், சிவசாகர்களால், செரபண்டராஜுக்களால், 80களில் அடிலாபாத் ஆதிவாசிப் போராட்டங்களில் கத்தர்களால், உயர்த்தப்பட்டு வருகிறது. உயர்ந்தும் வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

45—50களின் நிஜாம நிலப்பிரபுத்துதத்தை எதிர்த்து எழுந்த தெலுங்கானாப் போராட்டத்தைத் தூரத்தில் வாழ்ந்தவங்கக்கவிஞர். ஹரிநாத்சட்டோபாத்தியா தெரிந்து விரிவாகப் பாடிய அளவுக்கு, அருகில் இருந்த தமிழ்ப் பெரும் புலவர்கள் 'புரட்சி'க் கவிஞர்கள், ஒருவரிகூட பாடாதது மட்டுமல்ல, இன, மொழி, ஜாதிப்பித்தில், சமரச போதை யில் ஆளும் வர்க்கத்தினரின் காலை நக்கிக் கிடந்தனர்.

65-70 களின் மேற்கு வங்கத்தின் தெராய்க் காடுகளில் ஒலித்த நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியின் 'வசந்தத்தின் இடி முழக்கம்,' 80-களில் தரும்புரி ஏலகிரி சவ்வாது மலைகளில் இப் போது கேட்டது. இன்னும் தமிழகம் முழுவதும் தொடர்ச்சி யாகக் கேட்கும். கேட்டு வருகிறது

ஆந்திரத்தில் 70களின் சிரிகாகுள உழவர் எழுச்சியின் தாக்கத்தில் விழித்துக் கொண்ட பாடல் வடிவம், தமிழகத் தில் 80களில் அமைப்பு ரீதியில் மக்களிடம் உலாவரத் துவங்கி யுள்ளது. இதுதான் இந்தியப் புரட்சிகரப் பாரம்பரியத்தின் பாடல்வகை வரலாறு ஆகும்.

இவ்வரலாற்றில் தமிழகத்தில் 'மக்களிடமிருந்து மக்களுக்கே' வழங்க புதிய ஜனநாயகத்தின் கூர்மை சிவக்க கலை இலக்கிய ஆயுதம் ஏந்தி வரும் மக்கள் கலை இலக் கியக்கழகம்—அதன் வழிகாட்டுதலில்—எனது பங்களிப்பு— இந்தப்பாடல் தொகுதி.

"கவிஞன் என்பவன் மேகங்களுக்கு இடையே மிதப்ப வனாக கற்பனை செய்து கொள்ளும் ஒரு பேடியல்ல. வாழ்க் கையோடு சம்பந்தப்பட்ட, அதை வழி நடத்திச் செல்லும் ஒரு பிரஜை" என்றார், இருபது ஆண்டு காலம் சிறைக் கம்பி களுக்கிடையே "ஒரு பாதியிதயத்தை மருத்துவர் சோதிக்க மறு பாதி இதயத்தை மஞ்சள் நதியில் சீனத்தின் செஞ்சேனை யோடு நீந்த"விட்ட துருக்கியப் புரட்சிக் கவிஞர். நசீம் இக்மத்! இந்தியாவின் ஒரு குடிமகன் என்ற வகையில் நேரடி மற்றும் மறைமுக அனுபவங்கள் எல்லோரையும் போலவே எனக்கும் கிட்டின.

படிப்பகம்

www.padippakam.com

"நம்பிக்கைகளைச் சிறைப் பிடிக்க முடியாது" என்றார் தோழர். செரபண்டராஜு. நடைமுறையிலிருந்தே சிந்தனை தோன்றுவதைப் போல அனுபவங்களிலிருந்து எனக்குள் வெடித்த நம்பிக்கைகள்தான் மக்கள்முன் ஒரு டைரியைப் போல், தொகுக்கப்பட்டுப் பாடல்களாக நீங்கள் காணுவது!

இதற்கு முந்திய கவிதைத் தொகுதியான "திசை தெரிந்த அம்புகள்"(79) மரபும் புதுக்கவிதையுமாக பாடலை இறுதியாகக் கொண்டிருந்தது. இத்தொகுதி விட்டதிலிருந்து துவங்குகிறது. அப்போது "வாளை விற்று யாழை வாங்கினேன்" என்ற கேரள 'முற்போக்கு'க் கவிஞரான வயலார் ரவிவர்மாவை "வாளின் வீணை" என்று தவறாகப் போற்றினேன். அரசியலை விற்று கலையை வாங்குகிறோம் என்பவர்களை அடையாளம் காணாதிருந்தேன். அடுத்தபடி வாளையும் வீணையையும் ஒன்றாகவே பார்த்தேன். பிரித்தலையும், இணைத்தலையும் இப்போது புரிந்துவருகிறேன்.

"கவிதை, கனவுப் பணிதான்"—காட்வெல்

"யுத்தம் என்பது ரத்தம் சிந்தும் அரசியல்!
அரசியல் என்பது ரத்தம் சிந்தாத யுத்தம்!"

—மாவோ

இவற்றிலிருந்து கலை என்பது ரத்தம் சிந்தாத அரசியலில் ஒரு பகுதி என்பதை என்னால் உணர முடிகிறது. எனக்கு "கவனம் செலுத்த வேண்டிய இலக்காக நாட்டுப்பாடல் நோக்கி" முடுக்கிவிட்ட, "திசைதெரிந்த அம்புகளில்" "ஒரு **வரலாற்றின் மறுபக்கத்தை**" அப்போது முன்னுரையாக வழங்கிய தோழர். இன்குலாப்புக்கும் இப்போது "**மறுபக்கத்தின்** வரலாற்றை" எனக்கு உணர்த்திய கலை இலக்கிய, விமர்சனத் தோழர்களுக்கும் நான் நன்றியுடையவன்.

அறிவும் உணர்ச்சியும் ஒற்றுமையில் முரண்பாடும், முரண்பாட்டில் ஒற்றுமையும் உள்ளவை. பௌதிக ரீதியில் உதாரணம்; மூளையும், இதயமும். நாமும் காரணத்தை மறைத்துவிட்டு மனிதாபிமானத்தைக் கொட்டுவதற்குத்

படிப்பகம்

www.padippakam.com

தயாரில்லை. மனிதாபிமானத்தை இறுக்கி வி காரணத்தைச் சுவாசிக்க தயாரில்லை. இரண்டுக்குமாக இருமுனைகளிலும் அறிவையும் உணர்ச்சியையும் உயர்த்தும் போராட்டமே, நம்து படைப்பு முயற்சி.

சீனத்தின் புத்திலக்கியப் பேராசான் லூசுன், தொலை நோக்குக் கருவியோடும் நுண்ணோக்குக் கருவியோடும் கண்டுமுழங்கிய "பழம் பாடத்துக்குப் புதுப் பெயர்ப்பு" எனும் புரட்சிகர கலையிலக்கியப் போர்த்தந்திரத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். மறைந்த தோழர் குத்தாலத்தின் 'வசந்தத்தின் வீணைகள்' கவிதைத் தொகுப்பிலே இந்த உத்திமுறையின் செல்வாக்கைக் கண்டு அவரது கவிதைகளின் தொகுப்பாளன் என்ற முறையில் என்னால் முடிந்த அளவு விவரித்து அதில் எழுதியுள்ளேன். கட்டுக் கதைகளையும், புராண இதிகாசங்களையும் புனையப்பட்ட வரலாறுகளையும் மக்களுக்கு மறுபடி சேவைசெய்ய வைக்கிற விதத்தில் இப்போர்த்தந்திரம் மொத்தத்தில் பழமைப் பிற் போக்குக் கலாச்சாரத்தையும் அடிமை ஏகாதிபத்திய கலாச் சாரத்தையும் குழிதோண்டிப் புதைக்க உதவும் என்று நம்பு கிறேன். குறிப்பில் நிலவுடமைக் கருவிகளான மேற்கத்திய, கிறிஸ்தவ ஜனநாயகத்தையும், மத்திய ஆசிய, இஸ்லாமிய ஜனநாயகத்தையும், கிழக்கத்திய இந்திய இந்து ஜனநாய கத்தையும் தோலுரித்துக் காட்டமுடியும் எனநம்புகிறேன். ஆன்மீக, மீட்சிவாதங்களுக்கு வழுக்குகிற அபாயங்களுக்கு மீறி "சோசலிசயதார்த்தத்தை" உயர்த்திப் பிடிக்க இந்த உத்திமுறையில் படைப்பாக்கம் செய்கிறேன். "புதிய முயல்கள்" என்ற தலைப்புகூட இவ்வகைப்பட்டதே.

இங்குள்ள பாடல்களுக்கு எப்படி எனது மூளையும் இதயமும் ஊற்றுக்கண் இல்லையோ அதுபோலவேதான் இதற்கான படைப்பு மெட்டுகளுக்கும் உரித்தாவேன்; மக்கள் என்ற மகத்தான களஞ்சியத்திலிருந்துதான் நான் உங்களுக்குப் பரிமாறுகிறேன்.

இப்போதைய "புதிய முயல்களில்" பழைய தவறுகள் பெரும்பாலும் இருக்காது என்றாலும், நவீனத் தவறுகள்

படிப்பகம்

www.padippakam.com

இருக்கலாம். இந்தப் பாடல்கள் மூலம் உங்களிடம் வருகிறேன். தவறுகளைத் தயவுதாட்சண்யமின்றி உணர்த்துங்கள், திருத்திக் கொள்ளுகிறேன். அடுத்த முறை தவறுகள் குறைந்த நிலையில் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன். அதுதான் சரியானது.

இராக, தாள,—மெட்டு விபரம், இசை ஒலிக்குறிப்பு, பொதுக்குறிப்பு, அடிக்குறிப்பு—நான்கும் ஒவ்வொரு பாடலுக்கும் தரப்பட்டுள்ளன. இவை பாடல் முன்னோடிகளின் பயன்பாட்டுக்குத்தான்.

காதல் பாடல்கள் என்று தனியே இல்லையே என்று 'குறைபடுபவர்கள்' இருந்தால் சிலவார்த்தைகள். வாழ்க்கையின் யதார்த்தக் கோட்பாட்டையும், இன்பநுகர்ச்சிக் கோட்பாட்டையும் வேறுபடுத்தியே ஒன்றிணைப்பவர்கள் நாம். வாழ்க்கையின் ஆதாரமே பாலுணர்வு என்றுவாதிட்ட 'பிராய்டு'கொள்கையை நூற்றாண்டு நினைவுநாள் கண்ட நம்து சித்தாந்தப் பேராசான் காரல் மார்க்ஸின் புரட்சிகரக் கோட்பாடு அன்றே வெட்டிச் சாய்த்துச் சமாதி கட்டியது. கம்யூனிஸ்டுகளாகிய நாம் காதலுக்கு விரோதிகளல்ல. வர்க்க அறிவும், வர்க்க உணர்வும் பிசகாமல் காதலிப்பவர்கள். ஆனால் மாவோ சொல்வதைப்போன்று "கம்யூனிஸம், ஒரு காதலல்ல எதிரிகளுடன் போராடும் ஆயுதம்." என்பதுதான் சிந்தனைக்கு நாம் வழங்குகிற பௌதிககுணம் அதனால்தான் நமது "காதல்" போராட்டத்திலே கனிகிறது. பெண்களுக்குச் சுதந்திரம் கோருகிறது. போகப்பொருளாக ஆக்கப்பட்டவர்களுக்குச் சமுக மதிப்பு வழங்குகிறது. ஆணாதிக்கத்தை எதிர்த்துக் கொண்டே பெண்களை புரட்சியில் அரவணைக்கிறது. அதனால்தான் நமது காதலிமார்களின் கண்களில், சிறையில் நாம் அடைபட்டுச் சித்திரவதை செய்யப்படும்பொழுதும் மக்கள் நலனுக்காக "ரகசியத்தை"க் காப்பாற்றும் சிவப்பு நட்சத்திரம் 'பட்டுத் தெறிக்கிறது'. இட்லரின் பாசிசச் சிறைகளில் அப்படித்தான் அரசியல் விழிப்போடும் வர்க்கக் கோபத்தோடும் புரட்சிகர 'ட்ராய்'

படிப்பகம்

www.padippakam.com

தம்பதிகளின் விழிகள் உறவாடின. அந்தக் காதல் இங்கே உண்டு.

இங்கே உள்ள 37 பாடல்கள், குறைந்த எண்ணிக்கைதான். எங்கள் அமைப்பில் ஒரே புரட்சிகர மணமுள்ள நூறுபூக்கள் மலர்ந்து கொண்டே இருக்கும். ம.க.இ.க. முதல் வெளியீடு ''வசந்தத்தின் இடிமுழக்கம்'' (பாடல்தொகுப்பு) 82-இல் கர்ஜித்தது. தமிழகத்தின் கலை இலக்கியக் களத்தில், செங்கொடியின் ஒளிகுன்றாத பதாகையை மக்களிடம் நாடகமாக, லாவணியாக, ஆடலாக, பாடலாக, ரத்தமும் சதையுமாகக் கொண்டு செல்வதால்தான் கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு முழுக்க ஒவ்வொரு தளவாடமாக இன்று எஃகுக் கோட்டையாக ம.க.இ.க. எழும்பமுடிகிறது. இதுவரை உதிரிஉதிரியாகக் கிடந்த, எதிரிகளை நோக்கி முணு முணுத்து நெருங்கப் பயந்த முயல்கள், ஒன்று கூடி எஃகுக் கோட்டையிலிருந்து கிளம்புவதால்தான், நாய்களை ஓடவைக் கின்ற புதிய முயல்கள் ஆக பாய்கின்றன. ஏனெனில் எங்கள் ஓசை திக்குதெரியாத காட்டில் சிக்கிக்கொண்டதால் வரும்'மனஓசை' யல்ல; மாறாக தீர்மானகரமான புரட்சிகரப் பாத்திரத்தை ஆற்றும் 'புதிய கலாச்சார' இடியோசை.

'மனிதாபிமான' எச்சில் வடிக்கிற இவர்கள் உதடுகளிலிருந்து எப்படிப்பட்ட சமரசக் கோழை ஒழுகுகிறது! இவர்கள்தான் நம்மைப்பார்த்து வரட்டுவாதிகள் என்று வர்ணம் பூசுகிறார்கள். உலகப்பாட்டாளி வர்க்க சோசலிச ரீதியில் சீனத்தின் லூசுனையும், இந்தியப்பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக ரீதியில் ஆந்திரத்தின் செரபண்டராஜுவையும் நாம் உயர்த்திப் பிடித்த பொழுது 'குண்டுசட்டிக்குள் ஸ்கூட்டர் ஓட்டுகிற' இந்த நவீனப் பண்டிதம்மணிகள் ஆளும் வர்க்கம் கொண்டாடிய 'பாரதியை அங்கீகரிக்கக் கூடாதா?' என்று முதலைக்கண்ணீர் விட்டனர். 'இலக்கு' அற்ற கும்பலோடு சேர்ந்து 70களில், 80களில் 'இலக்கியம்' என்று முன்னால் செல்லாத இவர்கள் பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டனர். ஆர்.எஸ்.எஸ்—க்கு ஆதிமூலமான 'ஆரிய

படிப்பகம்

www.padippakam.com

சமாஜம்' பாடிய நிலப்பிரபுத்துவ ஆதரவும், இன்றைய அஸாம் இனப் போராட்டங்களை அடக்கி வைக்க அன்றே தேசியவெறிப் பாடல்களால் பாரத அன்னைக்குத் தூபம் காட்டியபாரதியாருக்கு அங்கீகாரம் கோரும் இவர்கள் புரட்சி கரத்தை அங்கீகரிக்க மறுப்பதின் காரணம் தெரிகிறது. இந்தக் குட்டி முதலாளித்துவக் கொள்கையோடிகளை நாம் அங்கீ கரிக்கத் தேவையில்லை. இவர்கள் கூறும் பாரதியையும் புதிய ஜனநாயக அரசியல் தலைமையை அங்கீகரிக்காத எவரின் கலையையும் நாம் அங்கீகரிக்க வேண்டியதில்லை. புரட்சிகர வர்க்கங்களின் நலனுக்காக, புதிய ஜனநாயகம் என்ற சரியான காரணத்துக்காக முழு இதயத்தோடும் ஆன்மாவோடும் மக்களிடம் புதிய பண்பாட்டைப் பிரச்சாரப்படுத்தி வரும் கலை இலக்கியவாதிகளாகிய நாம் வென்றுவருவோம்.

போராட்டத்திலிருந்தே கலைபிறக்கிறது. புரட்சி கீதத்தையே இசைத்தாலும் புல்லாங்குழலுக்காக எங்கள் துப்பாக்கியில் தோட்டா இல்லாமல் இருக்காது. ஏனெனில் **"துப்பாக்கிக் குழலிலிருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கிறது"**

புரட்சிக்காக மடிந்த தியாகிகளும் அவர்களின் புதிய ஜனநாயகச் சுடரை ஏந்திப் போராடிக் கொண்டிருக்கும் தோழர்களும் இந்திய மக்களும் மட்டுமே இங்குள்ள ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு எழுத்துக்கும் உரிமையுடையவர்கள்.

இப்பாடல் ஆக்கத்திற்குத் துவக்கத்தில் வித்திட்ட கரகமேள ஆடல் பாடல் **கலைஞர்கள்**. (நெல்லை)

கல்லூரி நண்பர்கள்; (கோவை)
சின்னத்துமேளப் பாடலாசிரியர் **பச்சையப்பன்;** (மதுரை)
கரகப்பாடல்களைப் பாடியும் எழுதியும் தந்த நாதஸ்வரக்கோஷ்டி நண்பர் **மணி;** (மதுரை)
மக்கள் பாடலாக்கத்தில் எளிமைப் பதங்களுக்கு வழி காட்டும் எங்கள் ம.க.இ.க. கவிஞர் தோழர் **மாயாண்டி;**

படிப்பகம்

www.padippakam.com

மெட்டுக்களுக்குச் சங்கீத மொழியில் பெயர்சூட்டிய ம.க.இ.க. இசைக் கலைஞர் தோழர் **வீரமுத்து;**

விமர்சன உரை வழங்கிய "நிர்த்தாட்சண்ய மற்ற ஆசிரியரும் நேசமுள்ள நண்பரு"மான ம.க.இ.க. செயலர் தோழர். **வீராசாமி;**

உதவி செய்த ஒரு சரியான மார்க்ஸிஸ்டுக்கான சகல துறைகளிலும் தேர்ச்சிபெறும் முன்முயற்சியும் தியாகமுமுள்ள தோழர் **செம்முகிலன்.**

பாடல்தொகுப்பில், வெளியீட்டில் ஒத்துழைத்த ம.க.இ.க. தோழர்கள், நண்பர்கள்;

தொகுப்பாக்கிக் கொடுத்த அச்சுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

நீண்ட மக்கள் யுத்தம் ஏந்தும் இந்திய, தமிழக மக்களுக்குப் புரட்சிகர வாழ்த்துக்கள்.

"நானொரு தெருப்பாடகன். எனது குரலில் தேர்ச்சி இல்லை. நீங்கள் செவிகொடாத ஒருபாடலை உங்களுக்காக எனது குரல் இசைக்கிறது"

—நசீம்இக்மத்

தோழமையோடு,

செவ்வண்ணன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வீரவணக்கம்

தானனா தனே தன்னனனா—தன்னே
தானே தன்னே தானா தானே தானா

செங்கொடிக்கே என்றும் ஜெயமென்று—உங்கள்
தியாக ரத்தம் வெளிச்சம் காட்டும் தோழர்களே—வர்க்க
வெஞ்சினத்தில் மக்கள் தொடர்ஓட்டப்—புரட்சியை
வென்று தந்த தியாகிகளே வீரவணக்கம்!
...செங்கொடி

பாரீஸ் கம்யூன் பாட்டாளி வர்க்க வீரர்களே—நாஜிப்
பாசிசக் கடனைத் தீர்த்த உலகச் சோதரரே—நீண்ட
பயணச் சீனா; தெலுங்கானா ரத்த சாட்சிகளே
...செங்கொடி

வியத்நாம்; லாவோஸ்; கம்பூச்சியா; இந்தோசீனா—லத்தீன்
அமெரிக்கா; கியூபா; அர்ஜென்டினா; இலங்கைத்தோழா
—ஸ்பெயின்
தாய்லாந்து; பர்மா; மலேசியா; நீக்ரோப் புரட்சியாளா
...செங்கொடி

சிக்கா கோமுதல் போலந்து வரைதொழி லாளர்களே—ரசிய
பீரங்கி எருமையை எதிர்த்த ஆப்கன் முயல்களே
—முஜிபூர்
பங்க ளாதேஷ்; பாலஸ் தீனத் தோழர்களே
...செங்கொடி

சிப்பாய்க் கலகம் ஜாலியன் வாலபாக் ஜனங்களே!—பகவத்
சிங்குகள் இந்திய தேச வேட்கைப் புயல்களே!—தெலுங்
கானா; வங்க உழவர் எழுச்சி இடிமுழக்கங்களே
...செங்கொடி

படிப்பகம்

www.padippakam.com

பீகார் போஜ்பூர்; பஞ்சாப்; மராட்டிய தியாகிகளே—ஆந்திர
சிறிகா குளம்முதல் அடிலாபாத் ஆதி வாசிகளே—வட
கிழக்கு மணிப்பூர்; மிஜோராம் வீரத் தழும்புகளே!
...செங்கொடி

வெண்மணி; பெல்ச்சி வெந்த இந்திய உழவர்களே—இங்கே
வெர்கீஸ்; சார்லஸ்; அப்பு; சீராளன் விதைகளே—கேரள
ராஜன்; தமிழக பாலன் கண்ணின் மணிகளே
...செங்கொடி

இந்தியப் புதிய ஜனநா யாகத் தீப் பொறிகளே—உயிரை
எதிரி நனைத்தான்; எம்மில் கலந்த சுடர்களே!—உங்கள்
கந்தக நாக்கு காதில் முழங்கும்: 'வெற்றி மக்களுக்கே!'
...செங்கொடி

பாட்டாளிவர்க்கத் தியாகிகளுக்கும், தேசவேட்கைத் தியாகிகளுக்கும் பொதுவில் மக்கள் தியாகிகள் அனைவருக் குமான வீரவணக்கப் பாடல். இசை உதவிசெய்தவர் நண்பர் நீலமேகம்.

படிப்பகம்

www.padippakam.com

வெள்ளம் வந்து அரிக்குதடா !

ராகம் : கரஹரப்ரியா **தாளம் :** ஆதி

தானனனே தானனே—தன
தந்தானே தானனே
தந்தானே தானா—தன
தானானே தானா

வெள்ளம்வந்து அரிக்குதடா—இவன்
வேற பிரிக்கிறான்!
இவனோடும் சண்ட!—நமக்கு
இயற்கையோடும் சண்ட!

...வெள்ளம்

பள்ளுபறைச் சாதிக,
படுக்கஇடம் இல்லையே!
பஸ்ஸ்டாண்டு கட்டுறானாம்,
பாதசாரி கவர்மெண்ட்டு!
'தத்தனேரி' 1 சுடுகாடு போதுமா?—ஏழத்
தங்கிக்கிட சேரிகூட வேணாமா?

...வெள்ளம்

எத்தனையோ ஆறிருக்கு,
எம். ஜி. யாரு, பெரியாறு!
குடிசைய நம்பியாரு(?)
கொஞ்சமுன்னா இடிக்கிறாரு!
ஓட்டுப்பொறுக்க நாய்வருது சமயத்திலே—எதுவும்
ஊட்ட இடிக்கும் போதுமட்டும் வர்ரதில்லே

...வெள்ளம்

படிப்பகம்

www.padippakam.com

காலிபண்ணச் சொல்லலியே
கட்டடம் பங்களாவ!
கார்ப்பரேசன் குடிசைவாசி
கண்ணுல சுண்ணாம்பே!
வைகையிலே நல்லா வெள்ளம் வரட்டும்!—நாம
வாழனுன்னா கோபுரங்கள் விழட்டும்!
...வெள்ளம்

கண்ணு லதான்னு
கைக்குழந்த பேரு!
குடிசைய பிரிக்கையிலே
குழந்தஉசிர பிரிச்சான்!
தொட்டிலைய வெட்டிக்கொன்ன பயலுக்கு-நாம
தூங்குற நெனப்புதான் திமிருக்கு!
...உள்ளமிங்கு கொதிக்குதடா!
உரிமைவெள்ளம் பாயுதடா!
இழப்பதற்கு விலங்கு! —எதிரே
இருக்குதுபுது வுலகு!

---

79 இறுதியில் மதுரை வைகைநதியில் ஒரு பெரும் வெள்ளம் பெருக்கெடுத்தபொழுது நிவாரண வேலை என்று வெள்ளம் வடிந்த பிறகு கரையோரக் குடிசைகளைச்சகட்டு மேனிக்குப் பிரித்துப்போட்டு ஒரு குடிசைத் தொட்டிலை,

படிப்பகம்

www.padippakam.com

அந்தத் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த் லதா என்ற ஒருவயதுச் சிறுகுழந்தையை அரிவாள் கொண்டு உத்திரத்தை வெட்டுகிறேன் என்று உயிரைவெட்டிக்கொன்ற மாநக ராட்சிக் கொலைபாதகர்களின் 'மக்கள் பாதுகப்பு' அநியா யத்தை எதிர்த்து எழுதப்பட்டது. படைப்புமெட்டு.

(இருண்டகாலத்தில் டெல்லியில் துர்க்கமான்கேட் என்றபகுதியில் நகரை அழகுபடுத்துகிறோம் என்று ஆயிரக்கணக்கான குடிசைகளை புல்டோசர்களால் இர வோடு இரவாக இடித்துத்தள்ளிய அதிகாரக்கொடுமை போல இங்கே அக்டோபர் 82—இல் அதேமதுரையில் தல்லாகுளம் பகுதியில் 4000 குடிசைகளை ஈவிரக்கமற்ற முறையில் தரைமட்டமாக்கிய வருவாய்த் துறைஅதிகாரிகள் அங்குள்ள ஏழைக்குடிசைவாசிகளை நடுத்தெருவில் நிறுத்தி யுள்ளனர். பாசிசத்தால் வானத்தைக் கூரையாக்கி உள்ள அந்த மக்களையும் இப்பாடல் நினைவு கூறுகிறது.)

1. மதுரையிலுள்ள சுடுகாட்டின் பெயர்.

படிப்பகம்

www.padippakam.com

காக்கித் தொப்பிக்காரன்

ராகம் : கரஹரப்ரியா **தாளம் :** ஆதி

தானானே தான தன்னே தந்தானா—தன
தனனானே தானே தன்னே தந்தானா

காக்கித்தொப்பிக் காரன் கூட மாறிட்டான்—சிப்பாய்க்
கலகத்துக்கு அருத்தம் காண துணிஞ்சிட்டான் !
...இந்தக் காக்கி

ஏவலுக்கு வெச்சிருக்க நாய்களா?—இப்ப
எலும்புத்துண்டுக்(கு) அலையஎன்ன நோய்களா?
எசமான குரைக்கும்நாய் தெருவிலே—இவன்
இளிச்சவாயன் இல்லஅப்பா வழியிலே !
...இந்தக் காக்கி

சங்கஉரிம கேட்டான்ஒரு துணிவிலே,—புரட்சித்
சந்திப்புகள் மக்களெனும் கடலிலே !
எங்களவன் உரிமைக்கும் உலகிலே—நாம
எல்லாப்பேரும் கூடணுமே முடிவிலே
...இந்தக் காக்கி

துச்சமென்ன வேலியத்தள்ளும் வயலிலே—அது
தோட்டக்காரன் காலில்குத்தும் மறியலிலே !
பச்சைவேலி பற்றிக்கொள்ளும் புரட்சியிலே—இவன்
பசையுடுப்பு எம்மாத்திரம் வரிசையிலே !—இவன்
...சிவப்புத்தொப்பிக் காரன் ஆக...மாறிட்டான்-தடிய
திரும்பிப்பிடிச்சு அடிக்கும் தோழன் ஆயிட்டான்!

---

79 கடைசியில் தமிழகத்தில் நடந்த போலீசார் போராட்டத்துக்கு ஆதரவாக எழுதப்பட்டது. இதுவும் படைப்பு மெட்டிலான பாடல். (செப்டம்பர் 82இல் மராட்டிய மாநிலம் பம்பாயில் போராட்டம் செய்த போலீசாரை ராணுவம் சுட்டுக்கொன்ற நிகழ்ச்சிவரை இப்பாடல் தழுவிச்செல்கிறது.)

படிப்பகம்

www.padippakam.com

அய்யனாரு கோவிலிலே

ராகம் : கரஹரப்ரியா **தாளம் :** ஆதி

தானானே தானானே தானா—தன
தந்தனே தந்தனே தந்தனே தானா

அய்யனாரு கோவிலிலே
அசுவமேத யாகம்!—வேள்வி
அடுப்பெரிக்க ஒருரத்தம்
அரிஜனநெய் யாகும்!

...அய்யனாரு

சாவுமூட்டைக் களஞ்சியம்நம் சந்ததியின் நாளம்!—ஒரு
சாதிவழி சண்டையில்நம் மண்டைகளே கோரம்!
தேவகோட்டை வீதியிலே தேர்தல்வாய் வீரம்!—நம்
தெருவில்தான் செங்குருதி கங்கைஉரு வாகும்!

...அய்யனாரு

பெரியமருது சின்னமருது பேருக்கலங் காரம்—உஞ்சனை
'பெரியய்யா' [1] வீரந்தான் பேடிச்(கு)அடியாகும்!
'கரியமாணிக்' கங்கள் [2] நம் காலடியில் வீழும்!—நம்
கையலைகள் எழுந்தால்'நில்'க் கப்பல்கள் மூழ்கும்!

...அய்யனாரு

ஆண்டவனின் பிள்ளையென 'அறம்'போர்வை போட்டும்
—அந்த
ஆலயத்தைப் பிளந்தாக்கா அந்தரத்தம் காட்டும்!
மூண்டிருக்கும் வெறிநெருப்பு மாளிகைக்குத் தாவும்!
—இனி
முருங்கைமரம் ஏறாது வெண்மணிவே தாளம்!
...அய்யனாரு கோவிலிலே அசுவமேத யாகம்—ஒண்ணா
அண்ணாந்தா தெறிக்கும்இனி ஆளும்அதி காரம்!

படிப்பகம்

www.padippakam.com

79இல் தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம் தேவகோட்டைக்கு அருகிலுள்ள உஞ்சனையில் அய்யனாருகோவில் புரவி எடுப்பு அல்லது குதிரைஎடுப்பு விழாவில் அதிகார வர்க்க மேல்சாதிகுதிரை (அசுவம்) மிதித்த அரிஜனப் படுகொலையை எதிர்த்து எழுதப்பட்டது. படைப்பு மெட்டு.

1. அரிஜன வகுப்பைச்சேர்ந்த அஞ்சல்துறைப் பணியாளரான பெரியய்யா எதிரிகளைக் கடைசிவரை எதிர்த்து வெட்டுண்ட மடிந்த வீரர்

2. அங்கு ஜாதியக்கலவரத்துக்குக் காரணமான ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்.

படிப்பகம்

www.padippakam.com

புதுவசந்தம்!

ராகம் : கரஹரப்ரியா **தாளம் :** ஆதி

தன்னனே தன்னனா தானனே தானனா
தன்னனே தானனே தந்தானா—தன
தானனே தன்னனே தானானா

கண்ணிலொரு மின்னலெழ கைவளைகள் இடிமுழங்க
என்ன அது புதுவசந்தம் சிங்காரி,—புரட்சி
இப்பஜன நாயகமே இங்கேடி!

...கண்ணிலொரு

ஆயிரப்பூத் தோட்டமிட்டு அறுவடையைத் தீண்டி
வைத்த
நேசநிலம் உழவனுக்கே சிங்காரி—நெஞ்சை
நெருடுவது வெண்மணிகள் ஒப்பாரி!

...கண்ணிலொரு

நேத்தின்று நடந்ததல்ல, நெடுங்காலச் சண்டையடி!
ஆத்தொழுக்கு வர்க்கவெற்றி சிங்காரி—எடு
அனைத்(து)உரிமை மரவெட்டிக் கோடாரி!

...கண்ணிலொரு

போப்போற தரகுமரம் போர்வெயிலில் கருகட்டுமே!
காப்புவளை கழற்றிஎறி சிங்காரி—ஒங்
கால்கொலுசு குண்டுவெடி என்தோழி!

...கண்ணிலொரு

படிப்பகம்

www.padippakam.com

கெட்டப்பய ரசியாவும் கிறுக்குப்பய அமெரிக்காவும்
சட்டிகழு வியதையே சிங்காரி—புது
ஜார்முகத்தில் கரிபூசு 'தாய்'க்காரி
...கண்ணிலொரு

வாழக்கா நறுக்குகிற வாளரிவாள் அருகிருக்க
ஏழைக்கு வழிசொல்லு சிங்காரி—இனி
இழப்பதற்கு ஏதுமில்லே பங்காளி!
...கண்ணிலொரு

'பூங்கொடிகளைப் போர்க்கொடி' யாக்கிப் புது வசந்தம் காண அழைப்புவிடும் பாடல். படைப்புமெட்டு.

1. மார்க்சிம்கார்க்கியின் புரட்சிகரப் பாத்திரமான 'தாய்' உலக அரங்கிலும் நவின ஜார்களை எதிர்த்துப் போரிடு மாறு இங்கே வேண்டப் படுகிறாள்.

படிப்பகம்

www.padippakam.com

களையெடுப்பு கும்மி

ராகம் : ஹரிகாம்போஜி **தாளம் :** ஆதி

தானன தானே் தனன தானே
தானே தந்தனா தந்தானா—தனே

தோண்டிய புதையலைத் தொலைக்கவோ போகிறோம்?
துரோகத்தைப் பிடுங்கிக் களைஎடு!—வேலி
தாண்டிய பயிரைத் தலைவனென் றாலும்
தைரிய மாக உள் ளேநடு!

கலப்பையின் செங்கொடி கண்களில் மின்னுது!
கால்பட்ட நிலம்எம் கைகளுக்கே!—நம்ம
பிழைப்ப கெடுக்கப் பேச்சென்ன பேச்சு?
பெட்டைச் சம்ரசம் உங்களுக்கே!

திருச்செந்தூர் மொட்டைக்குத் தேதி சொல்லுவதா?
தேர்தல் ஆதரவா? சும்மா கிட!—நாம
அரிச்சந்ர கதையவிட அன்றாடங் காய்ச்சிகள்!
ஆதாயச் சலுகையா எம்மாந்தொலை!

'பதியம் போடுறது பாராத நிலையா?
படுத்துக் கிடப்பது மான்தலை!' 1—இனி
அதிகம் தெரிஞ்சவன் ஆணவ மாகாது!
ஆராய்ஞ்ச கைநாட்டு தூங்கலே!

பாக்கும் அறுவடைப் பரண்கள் போடாமல்
பச்சோந்திக் குகைகளில் என்னவேல?—நம்ம
போக்கும் நடத்தையும் போராட்டம் எடுக்கையில்
போகிற போக்கில் சின்னவேல!

படிப்பகம்

www.padippakam.com

மோதுற ஆளை முகம்பாத்து மோது!
    முதுகெலும்பு எங்கள் உழவர்படை!—திரை
கோதுற பேச்சு; கூட்டணி வேட்டை,
    தோதுப் படாது எழுந்துநட!

உண்மையின் பச்சை உழவனின் 'பச்சை[1]'
    ஒப்பிக்கும் கிளிப்பச்சை இல்லையய்யா—நாங்க
உழைப்பது பச்சை உண்மைதான் என்பதால்
    உரிமைக்குப் பச்சைக் கொடியேயய்யா!

செக்க ரிடுதே பக்கத்தில் கீழ்வானம்!
    செக்கொடித்த மாடு விடுதலை!—இனி
நிக்க நேரமில்லே 'நிலம்உழ வனுக்கே'
    நெடுக்க முழங்குது குரல்வளை!

---

80 தேர்தல்களில் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளோடு உறவு வைத்து தன் செல்வாக்கை நிலை நிறுத்தத் துவங்கிய தமிழக விவசாயசங்கத்தலைவர் நாராயணசாமி நாயுடுவுக்கு புத்திமதி கூறும் ஒரு விவசாயப் பெண் கூட்டத்தின் கும்மி கோலாட்ட வகையைச் சேர்ந்த பாடல்.

1. சினப்புனர் நிர்மாணம் ஜூலை 79 இதழில் ஜூவேவோ லியாங் வரைந்த 'பதியம் போடுதல்' என்ற தலைப்புள்ள கார்டூன் படத்தின் தாக்கத்தில் இவ்வரிகள். அப்படம், மானின் கொம்பைக் கொடியாக நினைத்து பதியம் போடுகிற ஒருவரைக் காட்டும். ஒரு செயலைச் செய்வதற்குமுன் ஆய்வு செய்யாமலிருக்கிறவர்களைக் கிண்டல் செய்வதாக அமைந்தது அக் கருத்துப் படம்.

2. விவசாயசங்கத்தினர் அணியும் பச்சைத்தலைப் பாகையைக் குறிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

தேர்தல் விநியோகம்

ராகம் : கரஹரப்ரியா **தாளம் :** ஆதி

தந்தன தனனே தானன தன்னே
தன்ன தானன்னே—தனே

வெட்கமே இல்லாத வேட்பாளன் வருகிறான்,
வெள்ளைக் கதருக்குள்ளே !—இவன்
வேஷக் கும்பிடுக்கும் வினயச் சிரிப்புக்கும்
வில்லங்கம் மொத்தத்திலே !—அடிச்ச
வெள்ளைநம் ரத்தத்திலே!

மனுசனைக் கேக்காமல் மனுத்தாக்கல் செய்தவன்
மண்டி யிடுகிறானே—ஆட்சி
மத்து கடைந்திட உத்திர வாதத்தை
மக்கள்மேல் சாய்க்கிறானே—'வந்த
மறுகணம் ஏய்க்கிறானே

பங்கீடு தொகுதி! பலமாத அரசியல் !
பதவிக்கு மும்முரமே—இவன்
பாசறை வைப்பதே காசு கறப்பது
பாஷை வெளிவேசமே—சீட்டுப்
பகடை பெரும்பேரமே !

எங்கே கிடைக்குமோ எலும்புத்துண்டு என்று
எச்சில் வடிக்கிறானே !—இவன்
இருக்கிற பந்திக்கு எப்போதும் நியாயம்
இங்கே அளக்கிறானே !—கட்சி
இருந்து பறக்கிறானே !

படிப்பகம்

www.padippakam.com

தங்கமே தங்கம் தாலிக்குத் தங்கம்!
தட்டிகள் தோரணமே!—நாம
திங்க உணவின்றித் தெருவில் கிடக்கிறோம்
திருட்டு சுயம்வரமே!—'தாலி'
தேர்தல் விநியோகமே!

'உறிஞ்சுற மின்சாரம் உறிஞ்சிக் குடித்தவன்
உல்லாச மேட்டூரிலே'[1]—கடன்
ஒன்பது கோடியை உடன்கட்டச் சொல்லி
ஒருவக்கீல் நோட்டீஸில்லே!—ஜப்தி
உழவன்மார் வீட்டுக்குள்ளே!

ஆப்கனைத் தின்ற ஆனைப்பசிக் காரன்
அடுத்ததை நோக்குறானே!—ரசியா
அமைதிசமா தானம் அந்நிய உதவின்னு
அணியிலே சேக்குறானே!—அமெரிக்காவும்
ஆயுத்தம் பாக்குறானே!

கோடிக் குமரிமுதல் கொதிக்கும் அஸாம்வரை
ஒற்றுமை இந்தியனாம்!—சவப்
பெட்டிகள் வெண்மணி பிப்ரா வரைக்கும்
சுற்றுலாப் பட்டியலாம்!—நாடு
எட்டி நடக்கிறதாம்!

அடகு வைப்பதில் யாரிடம் வைப்பது
ஆராய்ச்சி பண்ணனுமா?—இவன்
ஆதிக்கப் பல்லக்கு அச்சாணி வைப்பது
அய்ந்தாண்டுக் கொருதரமா?—அதுவும்
அப்ராணி முதுகெலும்பா?

படிப்பகம்

www.padippakam.com

வாக்குச் சீட்டுகள் மத்தாப்பு ஒப்பந்தம்!
போக்கு சமரசமே!—இடி
நோக்கும் முழக்கத்தில் மாற்று அதிகாரம்
வார்க்கும் புதுமின்னலே!—மக்கள்
வசந்தம் புரட்சியிலே!

80-களின் துவக்கத்தில், தாலிகொடுத்துத் தேர்தல் திருட்டுச்சுயம்வரம் நடத்திய அரசியல்பிரமுகர்களை அம்பலப்படுத்த வடிக்கப்பட்ட ஒருகாவடிச்சிந்து.

1. ஒன்பது கோடி ரூபாய் மின்சார வரி கட்டாமல் இருக்கிற மேட்டூர்அலுமினிய தொழிற்சாலை நிருவாகத்தைக் குறிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

வெண்மணி எலும்புகள்

ராகம் : ஹிந்துஸ்தான் தோடி தாளம் : ஆதி

தந்தன தானன தனதன தானன
தானேன தானன தந்தனே தானனா

வெண்மணி எலும்புகள் விழிக்கிற நெருப்புகள்!
பன்னிரண்டு ஆண்டுதள்ளிப் பழிதீர்க்கும்
குறிஞ்சிகள்!
... வெண்மணி

கூலிகேட்ட உழவர் தம்மைக்
கொளுத்திய வரலாறு,
திரும்புது பண்ணைஉடலில்
தியாகிகள் சின்னமருகில்!
விவசாயீ கொஞ்சம்பாரு!
விடிகிற வானம்ஜோரு!
...வெண்மணி

வலியோர் சிலரும்சேர்ந்து
மெலியோர் பலரைக்கொல்லும்
மகராஜா சரித்திரங்கள்,
மண்ணோடு புதையக்கண்டோம்!
கோபால கிருஷ்ணன் எங்கே!
கோகுலம் சொந்தம்செய்வோம்
...வெண்மணி

படிப்பகம்

www.padippakam.com

நாகையின் புயல்சின்னம்
நமக்கல்ல உழுத்தருக்கே;
நாமுழுத நிலமுழுதும்
நமக்கே நம்மலுக்கே!
தொழிலாளி தலைமைசக்தி!
விவசாயி திரண்டசக்தி!

...வெண்மணி

'ஏலகிரி மலையின்மேலே
எங்கள்தோழர் உயிர்ப்பலி!' 1
வெண்மணி வயலின்ஓரம்
வீணப்பிரபு பழிக்குப்பழி!
பாடுபட்ட கூலிகள்கோபம்,
பன்னிரண்டு ஆண்டுக்குறிஞ்சி!

...வெண்மணி

வடக்கே நெல்ச்சியென்றால்
தெற்கே வெண்மணியாம்!
வானமே சாட்சி, பண்ணை
வைத்த சொக்கப்பனை!
கங்கையே காவேரியே
நெருப்பாய்க் கொதியுங்கள்!

...வெண்மணி

அரியின் புத்திரரோ?
அடுப்புக்கு விறகுகளா?
பரிந்துரை போலிசு கோர்ட்டா?
பண்ணைமார் ஏவல்மேலா?
கைகளை உயர்த்திடுவோம்!
கட்டுகளை முறித்திடுவோம்!

புரட்சி ஓங்குக!
புரட்சி ஓங்குக!

★

படிப்பகம்

www.padippakam.com

68 டிசம்பரில் தஞ்சை மாவட்டம் கீழவெண்மணியில் 42 உழைக்கும் அரிஜன மக்களைக் குடிசையோடு கொளுத்திப் படுகொலை செய்வதில் காரணகர்த்தவான அரக்கன் கோபாலகிருஷ்ண நாயுடு என்ற நிலப்பிரபு 80 டிசம்பரில் கொலை செய்யப்பட்ட சேதி கேட்டு அவர் துப்பாக்கி லைசன்ஸ் வைத்திருந்தும் 'தனி மனிதருக்குப் பாதுகாப் பில்லையே' என்ற போது 'கொதித்து'... எழுந்த பாடல். படைப்பு மெட்டு.

1. உண்மையான மக்கள்தொண்டர்ளான புரட்சி யாளர்களைக் குறி வைத்து திருப்பத்தூர் தருமபுரி மாவட்ட ஏலகிரி, சவ்வாது மலைகளில் 'ரகசிய போலிஸ் 115' எம், ஜி. ஜார் நரவேட்டை ஆடிக்கொண்டிருந்த நேரத் தில்தான் மலையில் நம்து பிணமும் வயலில் அவனது பிணமும் விழுந்தன.

படிப்பகம்

www.padippakam.com

ஆலைத்தோழா எழுந்திரு!

ராகம் : மோஹனம்

தாளம் : ஆதி

தந்தானே தான தன்னே தந்தானா—தனே
தனனதனே தனன தன்னே தந்தானா—தனே
தானானே தான தன்னே தந்தானா

எழுந்திரடா ஆலைத் தோழா எழுந்திரு!—ஒன்
இதயம்பூத்த செஞ்சி வப்பில் கொடியெடு-இங்கே
ஏற்பதற்குத் தலைமை யுண்டு! ஆர்த்தெழு!

...எழு

நூற்றாண்டு கொண்டா டப்போ வுதுமில்லு!—நாம
ரோட்டோரம் நிக்கி றோமே ஏன் சொல்லு!—வெளி
நாட்டான்க தரகு வர்க்கத் தில்லுமுல்லு!

...எழு

சிப்பாய்க்குச் சட்டைப் பேண்டு நம்தானம்—சென்னை
தெருவீதி நம்ம் நெலைமை நிருவாணம்—பிறரைத்
திசைதிருப்ப நஷ்ட மென்ற பொய்வேசம்!

...எழு

வெள்ளம்வந்து அடிச்சாப் போச்சி எந்திரம்?—நம்மல
வீதிக்கு இழுத்து விட்ட நிருவாகம்!—இனி
வேலைக்குப் பொங்கும் தோழர், அலைவீசும்!

...எழு

வேலநிறுத்தம் எதுவு மில்லே பலவருசம்!—கதை
விடுறான்யா நஷ்டம் வந்து புடுங்குதாம்!—நாம
விடப்போவ தில்லே ரெண்டு துண்டுதான்!

...எழு

படிப்பகம்

www.padippakam.com

ஆட்குறைப்பு போனஸ் வெட்டு ஆதிக்கம்!—நாம
அதிகநேரம் உழைச்சும் மில்லு பாதிப்பாம்—இவன்
ஆதாயம் தேட நம்மல சோதிக்கான்!
...எழு

மந்திரிமார் சொன்ன பதிலும் சரியில்லே—உழைக்கும்
மக்கள்கஷ்டம் தீக்க எவனும் ரெடியில்லே—இவனுக
மாறிமாறி ஆட்சி வந்தும் விடியலே!
...எழு

'மாருதியோ ஆத்தா பிள்ளைச் சொத்தடா!—அவ
மனசுக்குத்தான் தேச வுடமைப் பித்தடா—பதி
மூனாயி ரம்பேர் கிரைக் கொத்தடா!'1
...எழு

உலகத்துத் தமிழை யெல்லாம் கூட்டுறான்!—தமிழன்
உழைச்சிவந்த மில்லு கேட்ட பூட்டுறான்!—இவன்
ஒருத்தன்மேல் ஒருத்தன் குற்றஞ் சாட்டுறான்!
...எழு

போலீசார் கூட்ட மெல்லாம் மில்லுபக்கம்!—ஒரு
பூவச்சுத்திக் குரங்குபோல எட்டுத்திக்கும்!—நாம்
பொறுத்திருந்த காலத்துக்கு இந்தவெக்கம்
...எழு

போனசுக்கே தொண்டை கத்திப் புண்ணுதான்—நமக்குப்
பொருளாதா ரப்போ ராட்டம் கண்ணுதான்!
—ஆனா
புரட்சியோ அரசி யல்மேல் நின்னுதான்!
...எழு

படிப்பகம்

www.padippakam.com

கிராமத்தில் புரட்சி வாசம் அடிக்குதே—'விலை'
கேட்டுவிவ சாயி கூட்டம் வெடிக்குதே—தோழா
கீழ்வானம் மெள்ள மெள்ள சிவக்குதே!

...எழு

பீ. என். சி ஆலைவாசல் பூட்டுக்கு—விடாப்
பிடியான புரட்சிச் சாவி தூக்கிக்கோ—நீ
பிளக்கப்போற விலங்கு கதவு பாத்துக்கோ!

...எழு

அதிகாரம் ஆலைச் சாவி நமக்குத்தான்—நாம
ஆண்டாண்டு இயக்கி வந்த திருகுதான்—இனி
அசைச்சாலே நொறுங்கும் எதிரிச் சருகுதான்!

...எழு

ஒண்ணுசேந்து போரா டுவோம் வெற்றி தான்—இந்த
உலகம்மாத்தும் சக்தி நம்ம சுத்திதான்—தோழா
உழைக்கும்வர்க்கத் தலைமை நம்ம சக்திதான்!
எழுந்திரடா ஆலைத் தோழா!

★

சென்னையில் பீ. என். சி. மில்நிர்வாகம் தொழிலாளர்களை வீதியில்நிறுத்திக் கதவை மூடிய 80களின்கொடுமையை எதிர்த்துப் போராடுமாறு தூண்டுவதற்கு எழுந்த பாடல். 81 'தமிழர் திருநாளில்' பிரச்சனை தீர்க்கப்படும் என்று கூறி ஒத்திப் போட்ட மத்திய மாநில அரசுகளின் பேடித்தனம் கண்டு அதே நாளில் முதன்முறை பாடப்பட்ட இப்பாடல், ஒருநாட்டுப்புற மெட்டிலிருந்து செதுக்கப்பட்டது.

1. சஞ்சய்காந்தியின் திவாலான மாருதி தொழிற்சாலையை எடுத்துக் கொண்ட மத்திய அரசு, பீ. என். சி. மில்லை ஏற்க மறுத்த பாரபட்சம்.

படிப்பகம்

www.padippakam.com

வடகிழக்கு மாநிலங்களான 'ஏழுசகோதரிகளின்' தேசியஇனவிடுதலையைக் குறித்து 'நம்ம' பாரத ஆத்தாவை முன்னிலைப் படுத்திப் பாடுவதாக அமைந்த ஏற்றப்பாடல்

1. மணிப்பூரில் அமைந்த 'மெய்த்தீ' மெய்த்தீகளுக்கே' என்ற விடுதலை முழக்கத்தைக் குறிக்கும்.

2. 60-களில் வடகிழக்குமாநிலங்களின் பிரச்சனை களைக் கண்டறிவதற்கு மத்திய அரசு ஆராயப்போட்ட இந்தக் கவுன்சில் 80-களில்தான் தெரிகிறது: அது ஆரப் போட்ட கவுன்சில் என்பது!

3. இந்தியஆதிக்கத்துக்கு முன்னால் இரண்டாம் உலகப்போர்வரை பர்மாவின் ஆதிக்கத்திலே அந்த ஏழு சகோதரிகளும் 'கண்ணீர்' விட்டனர்.

4. தற்போதைய ஜனாதிபதியான முன்னாளைய உள்துறைஅமைச்சர் ஜெயில்சிங், அஸாம்பிரச்சனைகளில் பேச்சுவார்த்தை நடத்துவதில் பெயர் பெற்ற அறிஞர். அவரின் ஞாபகார்த்தமே ஏழு சகோதரிகளுக்கும் 'ஜெயில்' ஆகியிருக்கிறது. அவருக்கு 'பதவியுயர்வும்' அண்மையில் வெளிநாட்டில் மருத்துவ உதவியும்' சேவைக்குக் கிடைத்த 'பரிசு'கள்.

படிப்பகம்

www.padippakam.com

புரட்சி மகனடா !

ராகம் : தோடி

தாளம் : ஆதி

தானன தனனா—தனே
தன்னன தானா—தனே
தானானே தன்னானே தானானா—தனே
தன்னானே தானானே தன்னானா

ஆதி திராவிடா—அட
அரியின் ஜனமடா—என்று
கரிசனம் காட்டுது பண்பாடு!—ஆனா
கடைசிவர எரிப்பதற்கு ஒன்வீடு !—இதுநாள்
மண்வர லாறு—இப்ப
மாத்தணும் பாரு !
...ஆதி திராவிடா

அருட்பா ஸ்வாமியும் அம்பேத் காரும்
அவதரிச்சி சீக்கு தீரலே!—சட்டம்
அம்பேத் காரே எழுதியும் மாறலே !
அடிப்படை உரிமையும் வந்து சேரலே
இந்துநிலப் பிரபு-அவன்—எழவுக்கு ஒருஅரசு !
இருப்பிடம்; துணி,யுணவு—அதுஇருக்குதடா மறவு !
எத்திஉத கதவ—நீ
எழுப்புஒரு உலக !
...ஆதி திராவிடா

சலுகைக முதலிடம், தாழ்ந்த சாதிக்கு!
தம்பட்டம் அடிக்கு(து)அர சாங்கம் !
கிடைத்தவன் நகரம் இருப்பவன் கொஞ்சம் !
கிராமத்தில் நம்மஆள் நடைப்பிணம் இன்னும் !

படிப்பகம்

www.padippakam.com

தொகுதி எம்.எல்.ஏக்கும்—அவன்—தொந்திபிரதானம்!
சாதிக்கு நமஷ்காரம்-வாக்குச்—சீட்டுக்கே வெளிவேஷம்!
சட்டசபை நம்பி—நம்ம
சரித்திரம் வெம்பி!
...ஆதி திராவிடா

'சங்கனாங் குளமும் குறிஞ்சான் குளமும்'[1]
தண்ணி பாய்ச்சியது ரத்தஆறு !—அது
சாதித் திரையில் வர்க்கச் சண்ட !
சாரத்த மறைக்குது சர்க்கார் மண்ட !
சன்மார்க்கப் பூட்டு—உடைக்க—சந்ததியைக் கூட்டு
வருணாச் சிரமம்,—உடைமை—வருக்கத்துக் கூத்து!
ஜாதியின் முகத்த—வர்க்கச்
சண்டையில் போத்து !
...ஆதி திராவிடா

வெண்மணி வயிலிலும் பெல்ச்சி வயிலிலும்
விறகா எரிச்சான் நம்மசதைய !—இது
இந்தியா முழுக்க எரியுற அடுப்பு !
ஏமாத்த முடியாது, ஏழைக நெருப்பு!
இல்லாதவன் உயிரு—அது—வானம்பார்த்த பயிரு !
எல்லாச்சனமும் எழுந்தால்—புதிய—இடிமுழக்க வவுறு !
ஒண்ணு சேருவோம்—நில
உடைமையைச் சாய்ப்போம் !

...ஆதி திராவிடா—புரட்சி
அன்னை மகனடா—நாம
ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்களடா—ஆமா
உண்மையிலே பாட்டாளி வர்க்கமடா !—புரட்சி
அன்னை மகனடா—ஜாதி
ஆயுதமே அல்லடா !

★

படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின், அன்றாட கணக்கற்ற பிள்ளைப் பேற்றைப்போல், மேட்டுவர்க்க ஜாதிஇந்துக்கள் தாழ்த்தப்பட்ட உழைப்பாளி மக்கள்மேல் தொடுக்கும் படுகொலைக் கணைகளை முறிக்க பாட்டாளிவர்க்கச்செங்கொடியின் ஒளியில் அடிப்படைவர்க்க மக்களைப் புரட்சிகரஆயுதம் தரிக்குமாறு வேண்டி எழுதப்பட்டபாடல். படைப்புமெட்டு.

1. சங்கனாங்குளத்தில் அரிஜன சகோதரிகள், ஆளும் வர்க்கத்தின் 'ஆண்மை'யாளர்களால் கற்பழிக்கப்பட்ட சம்பவமும், குறிஞ்சான்குளத்தில் நம்சகோதரர்களின் ரத்தத்தில் மேல்வர்க்க அரிஜன எதிர்ப்பு வெறி, வாய்க்கால் வெட்டிய சம்பவமும் இப்பாடல் எழுதப்பட்ட காலத்தில் தமிழகத்தில் தொடர்ந்து நடந்த கொலைவெறிக்கூத்துக்கள்.

படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளத் தோழனுக்கு

ராகம் : ஹிந்துஸ்தான் தோடி ஜன்னியம் **தாளம் :** ஆதி

தந்தானே தானானே தன்னே தானா—தனே
தானானே தந்தானே தனன தானா

தொழிலாளத் தோழனுக்குச் சொந்த மேதினம்!—மில்லு
துரைகளைநாம் பந்தாடும் சூறை மேதினம்!—எங்கள்
அழியாத செங்கொடிக்குத் தியாக மேதினம்!—எல்லா
அதிகாரம் பாட்டாளிப் பக்க மேதினம்!
...தொழிலாள

தொக்(கு)இல்லே, உழைப்பவனை நிமிர்த்து மேதினம்!
—ஆலைத்
தொழிலாளிக்(கு) எட்டுமணி நிறுத்த மேதினம்!—
அந்தச்
சிக்காகோ சர்வதேச கீத மேதினம்!—ஒரு
சிறுபொறியைப் பெருந்தீயாய்ச் கிளப்பு மேதினம்!
...தொழிலாள

சந்தான்னு கேட்டுத்தொழிற் சங்க யாசகம்!—கொடிச்
சாயம்போன பின்னாலே எதுக்கு நாடகம்?—இதோ
இந்தான்னு பண்டிகையா எங்கள் மேதினம்!—தரகு
ஏகபோகம் எல்லாத்தையும் கொளுத்து மேதினம்!
...தொழிலாள

படிப்பகம்

www.padippakam.com

'கவளச்சோறு கேக்கவில்லை, சோத்துப் பொட்டலம்!
(—கிழிஞ்ச)
கந்தல்கேக்க வில்லை,முழு ஆடை கட்டணும்'[1]—படி
அவலுக்காக இடிக்கவில்லை, உரலை வளைக்கணும்!—அந்த
ஆலைச்சாவி நமக்குன்னு உரிமை வளக்கணும்!
...தொழிலாள

திறக்காத பூட்டுக்குச் சாவி மாத்தணும்!—மக்கள்
சுத்தியல்தான் உடைக்கவழி! கதவு நெறிக்கணும்
—வர்க்கத்
திசைபார்க்கும் புரட்சிக்குத் தலைமை கொடுக்கணும்—நாம
திருகிவிட்ட தீப்பொறியாய் உலகம் எழுப்பணும்!
...தொழிலாள

★

மே 81-மக்கள் கலையிலக்கியக் கழகம், சென்னையில் நடத்திய நிகழ்ச்சிக்காக எழுதப்பட்ட மேதினப் பாடல். படைப்பு மெட்டு.

1. 'எங்கள் தேவை, துண்டுத்துணி அல்ல,
முழு ஆடை!
பருக்கைகள் அல்ல,
முழுச்சாப்பாடு' என்ற ஜெர்மானிய புரட்சிகரக் கவிஞனும். விமர்சனத்துக்குரிய யதார்த்த புது உத்தி நாடக ஆசானுமான பெட்டோல்ச் பிரக்ட்-இன் கவிதைத் தாக்கத்தில் இவ்வரிகள்.

படிப்பகம்

www.padippakam.com

வென்று வருவோம்

ஆக்கம் : மார்ட்டின் லூதர்கிங்

ராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

லாலே லலல்லே லாலே லலல்லே
லாலே லல்லே லால லாலே—லலே
லாலல்லா லலேலலாலா
லாலே லல்லே லாலே லாலே

வென்று வருவோம்! வென்று வருவோம்!
அன்று நாங்கள் வென்று வருவோம்!—எம்
நெஞ்சடியில் வெஞ்சினமாம்!
அன்று நாங்கள் வென்று வருவோம்!
...வென்று

நாங்கள் தனியல்ல, தோப்பு மரங்கள்!
இன்று நாங்கள் ஒன்றாய் எழுகிறோம்!—எம்
நெஞ்சடியில் வெஞ்சினமாம்!
அன்று நாங்கள் வென்று வருவோம்!
...வென்று

நாங்கள் அஞ்சிடோம்! நிமிர்ந்து நிற்கிறோம்!
இன்று நாங்கள் எதற்கும் அஞ்சிடோம்!
நெஞ்சடியில் வெஞ்சினமாம்!
அன்று நாங்கள் வென்று வருவோம்!
...வென்று

விடுதலை உண்மை! விலங்கு ஒடிப்போம்!
அடிமை நாங்கள் விலங்கு ஒடிப்போம்!—எம்
நெஞ்சடியில் வெஞ்சினமாம்!
அன்று நாங்கள் வென்று வருவோம்!
...வென்று வருவோம்!

நீக்ரோ விடுதலை இயக்கத்தின் புதல்வர்களின் பாடல். ஆங்கிலத்திலிருந்து மொழியாக்கமும் இசையாக்கமும் செய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

ஒருவாளை எடு என் தோழா!

ராகம் : நடைபைரவி

தாளம் : ஆதி

லல லால லால லலலா !—லலே
லால லலலா லாலா !
லலலால லால லலலா
லலேலால லால லலலாலாலா

ஒரு வாளை எடுஎன் தோழா !—போர்
வாளை எடுஎன் தோழா !
சொந்ததேசம் இரவும் பகலும்
சூறையாடப் படுதே வாஎன்தோழா

...வாளை எடு

நம் களத்தில் அறுத்த கதிர்கள்—அதைக்
கடத்தும் அந்நியர் கலங்கள் !
வெளிநாட்டான் கோதுமை ரொட்டி
வெந்தவாய்க்கு விழவே இல்லைதோழா !

...வாளை எடு

நம் சுரங்க நிலக்கரி எஃகு,—தினம்
ரசியா அமெரிக்கா திக்கு !
சர்வதேசத் திருடரை நினைத்தால்
சதைநாளும் கருங்கல் தூக்கும்தோழா !

...வாளை எடு

கீழ் வெண்மணி விறகாய் எரிக்க—நம்மைப்
பண்ணைமுத லாளி கொறிக்க
நெஞ்சுக்கூட்டைத் துப்பாக்கி அழுத்த
நிமுந்தேநாம் சொல்வோம்: புரட்சிவெல்க !

...வாளை எடு

படிப்பகம்

www.padippakam.com

பல ஏகாதி பத்தியங்கள் காலை—நக்கும்
எதிரிகள் கழுத்துக்கு மாலை!
முற்றுகைக்குச் சுரண்டல் மலைகள்;
முட்டித்தள்ள உழைக்கும் கைகள் தோழா!
...வாளை எடு

ஒரு விடியல் தாக முழக்கம்—நம்மை
விசையுடன் புரட்சியில் இயக்கும்!
தீரமான பாட்டாளிப் படையே
தேசமாந்த ரோடு விலங்கைமுறிக்கும்!
...வாளை எடுஎன் தோழா!—போர்
வாளை எடுஎன் தோழர்!

மேற்குவங்கப் பாடகரான பீபுல்சக்ரபதியால் வடிக்கப்பட்டு அங்குள்ள இசைக்குழுக்களால் மக்களைச் சென்றடைந்து வருகிற புதிய சனநாயக உள்ளடக்கத்தைக் கூர்மையாகக் கொண்ட இப்பாடல், தமிழகத்தைச் சார்ந்த மக்கள்கலை இலக்கியக்கழகத்தின் கொள்கைப்பாடல் வரிசையில் மொழியாக்கம் செய்யப்பட்டது. வங்கத்திலிருந்து ஆங்கிலத்துக்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குமாக பெயர்க்கப்பட்டது. இப்பாடலுக்கான மெட்டு ஆங்கிலமெட்டு என்பதால், இசைஒலிக்குறிப்பும் அதற்கேற்றபடி உள்ளது. மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர்கள், குறிப்பாக தோழர் வீராசாமி போன்றோரே இதன் மறைமுகமான படைப்பாளிகள். அவர்களுக்கே இப்பாடல் படைப்பு முயற்சியில் எனது புரட்சிகர நன்றி சேரும்.

படிப்பகம்

www.padippakam.com

இரு பறவைகள்

ஆக்கம்: மாவோ

தானனே தந்தனனே தானான தந்தனனே—தனே
தன்ன தானே தானே தன்னே
தன்னே தான
தானே தன்ன தானா

போராட்டச் சிறகுக்கும் புளுகுணி இறகுக்கும்—ஆம்.
புரட்சிப் பறவை; புரட்டல் குருவி
ரெண்டுக் கிடையில்
நடந்த பேச்சு தோழா!—இந்தச்
சிட்டுக் குருவி வெத்து வேட்டைப்
பொட்டு தெறிக்க
மக்கள் பறவை தோழா!

பாட்டாளிப் பறவைக்குப் பரந்த இறக்கைகள்:—நூறு
ஆயி ரமைல்கள் நீள உயர்ந்து
சீறும் புயலைச்
சிவக்க வைக்கும் தோழா—அது
மனித பூமி மாற்றம் பார்க்க
முதுகில் அமர்ந்த
வானங் கிழிக்கும் தோழா!

பீரங்கிக் குண்டுகளும் துப்பபாக்கி ரவைகளும்—அவை
விண்ணை இடிக்கும்! ம்ண்ணைத் தொளைக்கும்!
வீரப் பறவை
வென்று மீளும் தோழா—மாறாய்ச்
சிட்டுக் குருவி கற்ற வேதம்:
'செத்த உலகம்
புரட்சி நரக' மாண்டா!

3

படிப்பகம்

www.padippakam.com

கூட்டை விட்டோட குருவி பரபரக்க—பொய்க்
கொண்டை போட்ட குடுமி நழுவ
ஓடு காலிக்
கூட்டம் போல தாவ—'சிறு
பதரே எங்கே பறக்க எண்ணம்?'
பாட்டா ளிகளின
பறவை கேட்ட கேள்வி!

(குருவி சொன்ன பதில்)

'ஏழு கடல்தாண்டி இந்திர மலையேறி—நவ
ரத்தி னத்தின் முத்தி ரையில்
அத்தர் வாச
அரச மெத்தையைக் கவனி!—அங்கே
சமாதா னத்து நித்தி ரையாம்;
சல்லா பங்கள்;
சகல விருந்து கிடநீ!

புரட்டாசி மாசம்; பூரண நிலாவானம்—இலை
உதிர்கா லத்தில் 'ஒப்பந்த வெற்றி[1]'
உலக அமைதி
உண்டு பண்ண முந்தி!—அங்கே
உயரக் கிளம்ப உருளைக்கிழங்கும்
வயிறு நிறைக்க
மாட்டி றைச்சிப் பந்தி!'

இதுவரை கேட்ட இயக்கத்தின் செம்பறவை—அதன்
வெப்ப உதடு இப்ப சொன்னது,
'அற்பக் குருவீ,
நிறுத்து எழவுப் பேச்ச—இதோ
வசந்தம் நோக்கி இடிகள் நடக்கும்
உத்துப் பாரு,
உலகம் தலைகீ ழாச்சே!'

★

படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தில் 81ஜனவரியில் தோழர் எஸ்.வி. இராஜதுரையால் மொழியாக்கம் செய்யப்பட்டு மக்கள் கவிஞர். இன்குலாப்பால் வெளியிடப்பட்ட 'மாசேதுங் கவிதைகள்' என்ற நூல் ஏற்படுத்திய தாக்கத்தில், அதிலுள்ள ஒரு கவிதையான 'இருபறவைகள்—ஒரு உரையாடல்' என்பதுதான் இங்கே இசையாக்கம் செய்யப்படுகிறது.

படைப்பு மெட்டில் அமைக்கப்பட்டது. கிரேக்க இலக்கியத்தில் நெருப்புக்குள் வெந்து சாம்பலிலிருந்து சிறகு விரித்துக் கிளம்பும் பீனிக்ஸ்பறவையைப் போல் சீன இயக்கியத்தில் இறக்கைகளாலேயே புயலைக் கிளப்பும் இப்பெரும்பறவை, பாட்டாளி வர்க்கத்துக்கும், சிட்டுக் குருவி, சித்தாந்தப் புரட்டர்களுக்கும் உருவகப்படுத்தப் படுகின்றன.

1. ருசியாவில் குருச்சேவ்கும்பல் 62இல் 'அமைதி வழிப் புரட்சி' என்ற பாராளுமன்ற ஜனநாயக வாதத்தின் மூலம் 'உலக சமாதானம்' தேடி நாடு பிடிக்கும் வேட்டைக்குக் கிளம்பிய பொழுது, இந்தத் திரிபுவாதக் கூட்டம், 63இல் அமெரிக்கா இங்கிலாந்து இவற்றுடன் செய்து கொண்ட அணு ஆயுத சோதனையைத் தடை செய்யும் 'மும்முனை ஒப்பந்தம்' தான் 'வெற்றி' யாக குறிக்கப் படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

புதிய முயல்கள்

ராகம் : ஹரிகாம்போஜி **தாளம் :** ஆதி

தானனே தன்னே தானேனா—தானானா
தானனே தான தானானா

நாயைத்துரத்தும் முயலைப் பாரேண்டா
—தோழன்மாரே
நடந்தஇடம் பாஞ்சா லங்குறிச்சி !
ஆயிரம்நாய் பாக்கு றோமடா—தோழன்மாரே
ஆளச்சுரண்டும் அண்டை நாய்கடா !

கீழ வெண்மணி பீகார் பெல்ச்சி
கிராம முதுகெலும்பு !—அதில்
கெட்டிச் சம்மணம் போட்டுட் காந்த
கிழட்டு நிலவுடம் !
பண்ணையார் மூட்டும் உடன்கட்ட—தோழன்மாரே
பஞ்சைக்குக் கொள்ளி நாய்கடா !
அண்ணன்மார் தரகு வர்க்கங்க—தோழன்மாரே
அவுங்ககருங் காலி நாய்கடா !

முப்பத்து மூனு வருசம் போயும்
முழுப்பூ சணிக்காய—அதை
மூடி மறைச்சு மூவர் ணக்கொடி
மொளகா அரைக்குதே !

படிப்பகம்

www.padippakam.com

செக்கிழுத்து வந்த சுதந்திரம்—தோழன்மாரே
ஜீரணி யாத புண்ணாக்கு !
கொக்கொண்ணு லண்டன் போனதும்—தோழன்மாரே
கொள்ளயடிக்க நாலு நாய்கடா !

வறும்க் கோடு உயரு தன்றி
வாழ்க்க உயரலே !—மக்கள்
வானம் பாத்த வாக்குச் சீட்டால்
வயிறு நிறையலே !

அஞ்சாண்டுக் கொருக்க நிப்பானே—தோழன்மாரே
அரசியல் வியாதி நாய்கடா !
கொஞ்சோண்டு ஒட்டுத் துண்டுக்கும்—தோழன்மாரே
குலைச்சி யலையும்சொறி நாய்கடா !

முருங்கை மரத்து வேதா ளங்கள்
மோட்சம் பேசுதே !—கொடிய
குண்டாந் தடிகள் கோர்ட்டுச் சட்டம்
குடைகள் ஒழுகுதே !

பாகல்பூர் கண்ணு திருடன்க—தோழன்மாரே
பசையுடுப்பு காக்கி நாய்கடா !
ஆதாயம் கூலிக் காகவே—தோழன்மாரே
ஆயுதம் சுமந்த பிண்டம்டா !

அடக்கு முறைகள் ; சிறைக்கொ டுமைகள்
அளவு மீறுதே!—சில
விஷவி தைகள் மலர்ந்த பூவை
வேட்டை ஆடுதே !

படிப்பகம்

www.padippakam.com

நாயைத் துரத்தும் முயலைப் பாரேண்டா!
—தோழன்மாரே

நாம்புது முயல்கள் ஆவோம்டா !
பாயுறவன் காகிதப் புலியே—மக்கள் சக்தி
பகைமுறிக்கும் இரும்புக் கோட்டடா !

★

கவிஞரான தோழர் மாவோவின் 'கோமோஜோவுக்குப் பதில்' என்ற கவிதையின் 'பேயைக் குரங்கு அடக்குவது' என்பதின் தாக்கம்தான் இப்பாடல் பிறப்பு. இங்கே தமிழக வரலாற்றில் பாஞ்சால மன்னன் முயல் வேட்டைக்குச் சென்றபோது அவன் கூட்டிச் சென்ற நாயை, முயல்கள் ஒன்றுசேர்ந்து துரத்தியது கண்டுதான் அங்கு கோட்டையை நிறுவியதாக பழங்கதை கூறுகிறது. இதன் அடிப்படையில் 'பழம்பாடத்துக்குப் புதுப் பெயர்ப்பு'தான் 'புதிய முயல்கள்'! 'விஞ்ஞானத்தை வளர்க்கப் போறேண்டி' என்ற சிர்திருத்தக் கலைவாணர் என். எஸ். கேயின் திரைப்பட மெட்டுதான் இங்கே விளிம்பு திருத்தப்பட்டுப்பயன்படுத்தப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

வெளிச்சக்குருதி

ராகம் : சங்கராபரணம்

தாளம் : ஆதி

தன்னானே தானேனா தான தன்னனே—தனே
தனன தானேனா

பீகாரின் மாநிலத்தில் பகல்பூர் ஊரு—ஜெயில்
பாசிசம் பாரு !—கண்ணு
புடுங்கப்பட்ட கைதிகள் முப்பத்தொரு பேரு,—அவங்க
பட்டபெரும் பாடு !—அதப்
பாடலில் கேளு !

கூலிகேட்ட விவசாயத் தோழனையெல்லாம்—கொள்ளக்
காரன்னு சொல்லி—சிறைக்
குள்ளேயே அகிம்சைக்கத்தி கண்ணாப் பரேசன்—இத
மண்ணுப தேசம் !—செத்த
மனிதாபி மானம் !

நாடுமுழுக்க நடக்குதய்யா வர்க்க யுத்தமே.—அத
மறைக்க நித்தமும்—நாக்கு
நரம்புகெட்டுப் புளுகுதய்யா சாதிச் சண்டையாம்—இன
தேச விரோதமாம்-கொள்ளத்
திருட்டுக் குற்றமாம் !

கண்ணபொத்தி இருக்கு, காந்திக் குரங்குப் பொம்மையே
—அறிவுக்
குருடர் உண்மைய

படிப்பகம்

www.padippakam.com

கண்டுவிட்ட வெக்கக்கேட்ட மறைக்கிற ஜோரு—
—செய்த
மாய்மாலம் யாரு—மக்கள்
மண்டல்ல 'பாரு'

பூவேல கண்ணில்போட்ட கோணி யூசியே—சாக்குக்
கோணி யூசியே—அந்தப்
போலீசு தையல்காரன் அதிகாரக் கையிலே —பகல்பூர்
அநியாயச் செயலே !—நீதி
அரைக்கம்ப கொடியே !

கண்தானம் பேசிவரும் ராம ராஜியம் !—அதன்
தண்டல் நாயகம்.—தடி
கையெடுத்த ஆதிக்கக் கார்த்திகை தீபம் !—பகல்பூர்
கைதிகள் கோரம்!—வன்முறை
கண்கண்ட தேசம் !

வெள்ளக்கொக்கு விஷம்கொடுத்த இஷ்ட ஆயுதமே—'ஆ'
கஷ்டு 'தேவதையே'—வயல்
'வெள்ளாம விதைகொடுக்கும் வெள்ளக்கோவணம்,
—உனக்கு
வேட்டைக் கொக்குகளா,—விழிகள்
விருந்து மூட்டைகளா?

ஆங்கிலேய காக்கிச்சட்டக் கறுப்புத் துரைகளே—பாசிசக்
காலக் கழுவியே—சல்யூட்
அடிக்கையிலே கழன்றதுஅந்த வெள்ளப்
பொத்தானே—எங்கள்
விழியின் பொத்தானே!—அடே
வீணப் பயல்களே !

படிப்பகம்

www.padippakam.com

கொள்ளைக்காரன் பட்டம்சூட்டி உப்புக் கண்டமா?—கூலி
உழவன் கண்களா?—உண்மை
கொள்ளக்காரன் பீகார்வயல் கரைக்கு எசமானன் !
—சட்ட
சபைக்கு முதலாளி!—'பூமி'
தான' எதிராளி !

கல்வாரி ஏசுவுக்கும் காடி தந்தாங்க—சிலுவக்
கீழே தந்தாங்க—இந்தியக்
காவலாளி அமிலத்தைக் கண்ணில் விட்டானே—ஊசிக்
கத்தி விட்டானே—கொல
காரப் பாவிகளே !

'ஆகஷ்டிலே நீதிகேட்டு மனுக்கள் போட்டோம்!'[2] —அத
உடப்பிலே போட்டான் !—இப்ப
ஆண்டிறுதி வெளிச்சத்துக்கு வந்த(து)இந்த குருதி!
—சிறை
வாசிகள் அவதி !—குருடா
வாக்கப்பட்ட கைதி !

சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டுப் பண்டிகை !—அதுக்கு
அகிம்சை நன்கொடை !—இந்தச்
சண்டாளன் கண்ணைக்கொத்தித் துரும்பை எடுக்
கிறான்—உத்திரத்
தூணைப் பிடுங்குவோம் !—அவன்
தோலை உடுத்துவோம் !

ஆட்சித்துறை நீதித்துறை செக்கு மாடுகள்,—உனக்கே
சிக்கும் மாடுகள் !—நாளை

படிப்பகம்

www.padippakam.com

அதிகாரம் மக்களுக்கு ! சுக்கு நூறுநீ !—ஆணி
அக்கு வேறுநீ !—இனி
மக்கள் தீர்ப்பு நீ !

மனுசஅபி மானத்தின் மயிருக் காலையும்—பொசுக்க
அமில தாரையா?—உன்னை
மக்கள்விழி பழிவாங்க கிழக்கிலே இருந்து—துரத்தும்
மேற்கின் விளிம்பு !—மீண்டும்
கிழக்கே உயரும் !

நரபலிக்கும் இதுபோலே நேர்ச்சை கேட்டதில்லே—காக்கி
நிறத்துப் பேய்களே !—எங்கள்
நீலமுட்டையைக் கருக்கலைத்த கடனைத் திருப்பு
வோம்—பாசிச
இருட்டுக் கிணற்றிலே—நாங்கள்
இறங்கித் தூறெடுப்போம் !

கண்கொத்திப் பாம்புகளின் நாஜி ஒலிம்பிக்கு !—ஆப்கன்
'நாயும் குரைக்குதே' 3—ஒற்றைக்
'கண்ணனுக்கு ராசாவாக ஆசை நச்சரித்தால்' 4
—குருடாய்
ஆட்கள் அச்சடித்தால்—விழியின்
அகிலம் எச்சரிக்கும் !

டெல்லிநகர் ஊர்வலத்தில் பாரா தவனுக்கு—போலிசு
'பாரா கொடுத்தது—கொடும்
கல்மனம்!குண் டாந்தடிகள் 'ஐந்தர் மந்தரிலே
—வரவேற்க
கற்பூரத் தட்டு—வருசமும்
'கண்ணீர்ப் புகையே!' 5

படிப்பகம்

www.padippakam.com

போலீசு போராட்டத்தில் மக்கள் ஆதரவு—பெற்ற
மண்டைத் தொப்பிகள்—ராணுவம்
பொசுக்கவந்த போதெல்லாம் அருகில் வந்தானே
—வாய்ப்புண்
ஆறு முன்னாலே—இப்பக்
காரம் தின்னானே

சிறைக்கொட்டடி தாழ்வாரங்கள் கசாப்புக்குச் சந்தை !
—தேசத்
தியாகிகள் கொள்ளை !—ஒரு
தெலிங்கானா உதட்டைப்பொசுக்கி நேரு'மகா'
ராசா !—இப்ப
ரசாம்கள் லேசா—கருக்கிய
பகல்பூர் ரோசா !!

பூட்சுகால்கள் மிதிச்சாலும் புதைஞ்சிட மாட்டோம் !
—உண்மைப்
புதையல் தூக்குவோம் !—மக்கள்
போராட்ட நெற்றிக்கண் திறக்கிற பொழுது—விழித்
திருடர்கள் புளுகு—நடுத்
தெருவிலே அழுகும் !

பிரகாச மார்பைச்சுற்றி இருளின் சங்கிலிகள் —விழிமேல்
இழைத்த சாட்டைகள் !—ஒரு
பிரவாகம் கண்ணில்வழிந்த வெளிச்சக் குருதியே
—பாதை
விரிப்புத் தியாகமே !—பாத்து
விரைந்து நடங்களே!

படிப்பகம்

www.padippakam.com

கண்ணால அழக்கொடாது ! கண்களைப் புடுங்கு
—பொறுத்த
கைகளை நறுக்கு !—நாங்கள்
காணப்போகும் புது உலகம் இதய அடியிலே—ஒன்றாய்
இணைந்த முடிவிலே—இதோ
எங்கள் எதிரிலே !!

ஊனமுற்றோர் ஆண்டான 81 இல் வெளிக்கொண்டு வரபட்ட பீகாரிலுள்ள பகல்பூர் சிறைச்சாலையில் நடந்த பாசிசத்தின் உச்சக்கட்டமாக அங்குள்ள போலீஸ் குருடர்கள் 79-80 ஆம் வருடங்களில் சிறைக் கைதிகளைத் தண்டிப் பதற்கு அவர்களின் கண்களில் திராவகத்தையூற்றி கோணி யூசிகளால் கருமணிகளைக் குத்திக் குதறிய அக்கிரமத்தின் போது வழிந்தது ரத்தமல்ல, வெளிச்சம். அந்த 31 கைதி களின் வெளிச்சத்தில் அதைப்போன்ற சிறைக்கொட்டடிகளில் தியாகிகள் வடித்த குருதியில் நமது பாதை புரட்சிகர வெளிச் சத்தில் தொடரட்டும்.

இப்பாடலுக்கான மெட்டு, மக்களிடமிருந்து கிடைத்த செதுக்கப்பட்ட நாட்டுப்புற ராகம்.

1. எங்கள் கிராமத்தில் ஒருமுறை வெள்ளையனிடம் வேலை பார்த்த ஒரு ரைட்டர், வயலில் பயிர்நடவு செய்து கொண் டிருந்த ஒரு ஏழை விவசாயின் வெள்ளை வேஷ்டியைக் கொக்கென்று நினைத்து வேட்டைத்துப்பாக்கியால் சுட்டு விட்டாராம் இங்கேயும் கண்களைப் பறிகொடுத்தவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகளே.

படிப்பகம்

www.padippakam.com

2. 80 ஆகஸ்டில் இப்படிப்பட்ட சிறையில் நடக்கும் சித்திர வதைகள் பற்றி கைதிகளிடமிருந்து மனுக்கள் அனுப்பப் பட்டும் 'மேலிடம்' கவனிக்காததாலே கண்கொத்திப் பாம்புகள் கைவரிசையை காட்டியுள்ளன! (81ம் ஆண்டு சர்வ தேச ஊனமுற்றோர் ஆண்டாக கொண்டாடப் பட்டது.)

3. போராட்டம் நடத்திய தொழிலாளர்களின் மேல் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு வருத்தப்பட்டுக் கொண்டா னாம் போலந்து முன்னாள் 'கம்யூனிஸ்டு' தலைவன்! ரசிய சமூகஏகாதிபத்தியத்தின் புதிய 'நாஜி' ஒலிம்பிக்கில்கூட அடக்கு முறையைக்கண்டு அவற்றின் ஏவல் நாயான போலந்துதலைமை தனக்குள்ளாவது இதயத்தில் குரைத் திருக்கிறது. ஆனால் அதுகூட இங்கில்லை.

4. 'குருடர்கள் தேசத்தில் ஒற்றைக் கண்ணன்தான் அரசன்' என்ற ஆங்கிலப் பழமொழிக்கு நடைமுறையில் சாத்திய மாக்க அராஜக நடவடிக்கை எடுத்த போலீஸ் அக்கிரமம்.

5. பகல்பூர் அரக்கத்தனத்துக்கு ஒரு வருடம் முன்பு டெல்லி யில் கோட்டையை நோக்கித் தங்கள் குறைகளைத் தெரி விக்கத் திரண்டு சென்ற விழியற்றோரைக் கலைக்க ஜந்தர் மந்தர் என்ற இடத்தில் போலீஸ் குண்டாம் தடிகளால் அடித்தும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசியும் தனது படு ஈவிரக்கமற்ற அகிம்சா தருமத்தைக் காட்டியது.

படிப்பகம்

www.padippakam.com

நிப்பானி

ராகம் கரஹரப்ரியா — தாளம் ஆதி

தன தன்னே தானா தன்னே தானா தன்னா—தனே
தானே தன்னே தானே தன்னே தன்னா

கரு நாட கத்தில் பெல்காம் என்ற ஜில்லா—சிறு
நடுத் தரவிவ சாயி கள்தான் எல்லாம்! —அதோ
புகையி லைத்தோட் டத்தோ ழர்கள் முதுகில்- நிதம்
போக சிகரெட் உறிஞ்சும் பண்ணை வர்க்கம்!

அங்கே நிப்பா னியிலே நடந்த திந்த நிகழ்ச்சி!—விலை
நிறுத்த கள்ளத் தராசைப் பிடுங்க எழுச்சி—போலீஸ்
துப்பாக் கிரவை பன்னி ருவரைத் துளைாச்சும்
—ஒண்றைத்
துணிஞ்ச பின்னே தூக்கு மரமும் இகழ்ச்சி!

நாலு ஏக்க ருக்குச் சொந்த மான உழவன்—பயிர்
ஏகப் பட்ட கடனை வாங்கி நடுவான்—அந்த
புகையி லைக்கு மூனு மாத கருப்பம்,—பொறந்த
புள்ளய வாங்க வியாபா ரிகளின் சருப்பம்!

நாம் நட்ட பயிரில் நஞ்சிக் களைகள் வெடிக்கும்—எட்டு
நாளைக் (கு) ஒரு தடவை எடுத்தும் முளைக்கும்!
—நீரு
விட்ட பாத்தி நெறைய செலவு கொடுக்கும்—ஆனா
வியாபா ரிக்கே தொந்திக் கலயம் பெருக்கும்!

படிப்பகம்

www.padippakam.com

புகை இலையை நிறுக்கும் கருவி யிலேஏ மாற்று!—அதை
எடுத்துச் செஞ்ச வனுக்கு லஞ்சம்கை மாற்று!
—பயிரைத்
தரம்பி ரித்துச் சொல்லு வதிலே ஊழல்—அதுக்குத்
தலையா ரிக்கு காசு: ஒத்து ஊதல்!

நமது ரத்த வேர்வ சிவப்பு நட்சத் திரங்கள்—பட்டு
நட்ட செடி ஜொ லிப்ப தந்த நிலங்கள்—இதில்
அளக்கும் எடையில் புகையி லையின் செடிகள்—தரகு
அண்டப் புளுகன் மிதித்துத் தள்ளும் கொடிகள்

நாம அறுத்த கதிர அள்ளிக் கட்டும் 'பிரபு',—கூலி
அளந்த படிக்கு அப்போ தேயே மிதிப்பான்—புகை
இலைக்குச் சாக்குக் கட்டி அள்ளும் வணிகன்—பனி
இரண்டு மாதத் தவணை போட்டு வதைப்பான்

சிறு விவசா யிகள் வயிற்றில் அடித்த பணத்தில்—மச்சு
வீடு கட்டி அனுப விக்கும் பிணங்கள்—நாலு
ஏக்கர் உழவன் பத்து வருசம் ஓட்ட—அவன்
ஏற்ற கடனு பத்தா யிரமாம் நோட்டு!

இந்த நிலைமை யில்தான் நிப்பா ணியிலே சுரண்டல்—விலை
நிர்ணயம் பண்ண உரிமை கோரும் உழவன்!—அரசு
தலையிட் டால்தான் முடியும் என்ற சனங்க—தனிச்
சந்தைக் காரன் ஆதிக் கத்தைப் புதைக்க

மக ராஷ்ட்டு ராவில் வெங்கா யத்துக்கு விலையை
—உயர்த்த
மக்கள் வெள்ளம் கர்நா டகாவின் வழியே—அது
புகையி லைக்கு விலையை ஏத்தக் கோரி—ஒரு
பூகம் பமாக வெடித்த இடம்நிப் பாணி

படிப்பகம்

www.padippakam.com

விலை ஏழை பத்து ரூபா வுக்கு மாற்ற—மக்கள்
எத்த னைமுறை அடக்கப் பட்டார் நாட்டில்!
—கொள்
முதலை நிறுத்தி மிரட்டப் பட்டார் வீட்டில்
—மக்கள்
முதலை வாயை மூட எழுந்தார் ரோட்டில்!

எழு பத்தி ரெண்டில் வெடித்த துவேபோ ராட்டம்!
—அது
பரந்த மக்கள் எழுச்சி யில்லே தோற்றோம்!—மறு
படிக்கு எழுபத் தாறில் நடந்த கிளர்ச்சி—வியா
பாரி பொருளை வாங்க மறுத்த பயிற்சி!

அப்புறம் இறுதி முறையில் அரசு வந்த நிகழ்ச்சி—முன்பு
இருந்த விலையை இறக்கி வைத்த அதிர்ச்சி!
—இப்படி
இருந்து மீள முடியா மலேயே தவிச்சோம்!—நாம்
இப்பத் தானே விபரம் தெரிஞ்சி முழிச்சோம்

பீடித் தொழிலா ளிக்குச் சங்கம் வந்த பின்னே—அதைத்
துவக்கி வெச்ச சுபாசு ஜோசி அங்கே!—அதிக
கூலி கேட்டு நடந்த கிளர்ச்சிக் கடுத்து—இங்கே
கூடிக் கேக்க கொதிச்சு வந்த 'சரத்து'!

விவ சாயச் சங்கம் இங்கி ருப்பது போல—அந்த
சரத்து ஜோசி 'சேத்கரி சங்கம்' அங்கே!—வணிகப்
பிரபு மார்கள் பிடித்த சிகரெட் துண்டை—நாம்
பெய்த ரத்தம் அணைக்க எழுந்த தின்று!

படிப்பகம்

www.padippakam.com

ஒரு நாளு நூறாய்ப் பூக்கள் மலர்ந்த கூட்டம்!—அது
நாய மான கோரிக் கைகொண் டாட்டம்!—மார்ச்சு
ஏழுக் குள்ளே தீக்க முடியா விட்டால்—ஒரு
எரிம லையே மறியல் எனும்போ ராட்டம்

பேச்சு வார்த்த நடக்கும் மறுபு றத்தில் வெடிப்பு—ஒரு
வர்க்கப் புண்ணு ஆறா (து) இருந்த கிடப்பு
—குறைஞ்ச
மார்க்கட் விலையை மாற்ற மறுத்த வணிகம்
—இனிநாம்
மறியல் இன்றி மார்க்க மில்லே எழுந்தோம்

நம்ம பிரச்ச னையின் உதட்டைக் கடித்த பற்கள்
—பெரும்
பான்மை கள்அதி காரம் தடுத்த கற்கள்—அத
முட்டி மோதிப் புரட்டிப் போட படைகள்—அங்கே
மூண்ட தையா பெங்களூர்—பூனாக் கிடையில்!

நிப் பானி நகருக் கிரண்டு மைல்கள் தள்ளி—அந்த
பங்களூர் பூனா நெடுஞ்சா லையிலே தர்ணா
—அதிகம்
வேணும் புகையி லைக்கு விலைதான் என்று
—ரோட்டை
மடக்கி யமந்த மக்கள் இரும்புக் குன்று!

அம்ப தறுப தான கிராம மக்கள் வெள்ளம்—புதுச்
சத்தியாக் கிரக வாய்க்கா லிலே துள்ளும்—இரவில்
இருப்ப திருட்டு என்றால் அதைமு றிக்க—கிளர்ச்சி
இசைக்கு முக்கள் வாத்தியங்கள் ஜொலிக்க

4

படிப்பகம்

www.padippakam.com

நாற்ப தாயிரம் பேரு பங்கு ஏற்ற வேள!—அதோ
தார்ப்பூச் சுருக்க தேசிய நெடுஞ் சால!—அந்த
பூனா பெங்களூர் நிப்பா னியெனும் ரோடு—ஒரு
புரட்சி உழவர் புகையி லையின் சூடு!

பெண்டு பிள்ள குட்டி யோடு ரோட்டில் மறியல்—மக்கள்
பிரியப் பட்ட கிளர்ச்சிக் காண விடியல்—இரவில்
வெல்லும் கனவு வெற்றி இசைமு ழக்கம்!—பகலில்
விவாத மேடை உழவர் இடிமு ழக்கம்!

இரவு முரசு தாரை தம்பட்டை புரட்சி கீதம்—கூட்டம்
முண்டிக் கொண்டு மறியல் விழாவில் சேரும்
—இருட்டில்
அரிசி பருப்பு அனைத்தும் களத்தில் தேறும்—ஒரு
ஆர்ப்பாட் டத்து அடுப்பு சிவந்து வேகும்!

மா வட்டம் முழுக்க வெற்றி கொண்ட தர்ணா
—போக்கு
வரத்த திருப்பி விட்ட மக்கள் தர்ணா—வணிகர்
கொட்டம் அடக்க, போகும் பொருளைத் தடுத்து!
—இனி
வெட்ட வெளிச்சம் வெற்றி நமக்கு அடுத்து!

இதைக் கண்டு பஸ்சு லாரி திரும்பி ஓடும்—அரசு
களத்த பாத்து குலைந டுங்கிச் சாகும்—அந்த
குண்டு ராவு பழியை டெல்லி போட—இந்தக்
குட்டை வுடைக்க மக்கள் இன்னும் கூட

நம்ம பிரதி நிதியை அழைச்சான் முதல மைச்சன்—நல்லா
பேசிப் புட்டு டெல்லியச் சொன்னது குறச்சல்
—இப்படி

படிப்பகம்

www.padippakam.com

அரசும் போலிசும் குழம்பிக் கிட்ட பொழுது
—கிளர்ச்சி
அண்ட மாவட் டத்தில் பரந்த விழுது!

நூத்தி நாற்பத்து நாலு தடையுத் திரவு சட்டம்—மறியல்
நடவ டிக்கய தடுக்க அரசு திட்டம்!—நம்மல
மோப்பம் பிடித்து காக்கிச் சட்ட இருக்க—போர்
மூர்க்கம் பிடித்த மக்கள் எதிர்த்து நிற்க

சரத்து ஜோசி நாட்டுப் புறத்தி லேபிரச் சாரம்—மக்கள்
சூறக் காத்து வந்தால் போல நாளும்—ஏப்ரல்
மூனு வாக்கில் பேர ணியோர்வெள் ளோட்டம்
—மக்கள்
மொத்தம் சேந்து விலைய கூட்ட கோஷம்!

முழு வெற்றி பெற்ற உழவர் பேரணி அழைப்பு—அதனால்
வியாபா ரிமாரு கூலிப் பேரணி அமைப்பு—அந்த
வெள்ளை சிகரெட் பயல்க ளுக்கு எரிச்சல்
—அதனால்
விவசா யிகளின் தலைவர் வீட்டை உடைக்க

நிப் பானி எழுச்சி பாணி நகர மாக—அரசுப்
படைகள் உடல்மின் சாரம் பாய்ந்து போக
—கன்னடச்
சீமை யில்வ ரும்புது வருசப் பிறப்பு—எண்பத்
தொன்றாம் வருசம் உரிமை கேட்டு துடிப்பு

புது வருசம் உகடி ஏப்ரல் அய்ந்தில் பிறக்க—மக்கள்
மறியல் நெருப்பு தேசிய சாலைய உருக்க—மறுநாள்
காலை போலீஸ் தலைவ ரைத்தான் பிடிக்க—ரத்தக்
களரிக் காக துப்பாக்கி ரவைகள் வெடிக்க

படிப்பகம்

www.padippakam.com

காலை ஒன்பது மணிக்கு அய்யா யிரம்பேர் கைது—வேனில்
உட்கார வைத்தால் மக்கள் வெள்ளம் வருது
—மறைந்து

இருந்து வாலிய கொன்ற இராமன் போல—மத்திய
இரும்புத் தொப்பிப் படைநிக் குதொரு மூல!

கைது பண்ண தாலே கோபம் கொண்ட சனங்க—ஒரு
பத்தா யிரமா வந்து குவிந்து இருக்க—உடனே
சின்ன புத்தி சிப்பாய்க் கூட்டத்த கலைக்க—கவசத்
தடிகளோடு கலையச் சொல்லி நெருக்க

புகை இலைகள் வெடித்து கீத்து விட்டால் போல
—பொங்கி

எழுந்த படைய பிடிக்க முடியலே வேனு—மா நிலப்
போலீசுப் பயல்க பொருமி நின்னு முழிக்க
—ரோட்டில்

புரட்சி வீரர் கோஷம் விண்ணைத் துளைக்க

ஒரு போராட்டக் கல்லு புறப்பட் டதய்யா பறந்து
—நின்ன

போலீச திகாரி மண்டை யத்தான் பொளகக்-உடனே
காவல் நாய்க ஆவேசந்தான் பெருக—தடிய
கன்னா பின்னா வென்று சுழற்றத் துணிய

தந்தானே தன்னே தன்னன தானே
தானே தன்ன தானா

பத்தரை மணிக்கு மத்தியப் போலீசு
லத்தி கொண்டு சுழற்ற—தோழரே
சுத்தி வந்து விரட்ட—ஒரு

படிப்பகம்

www.padippakam.com

எச்சரிப் பின்றி எதுக்கப் பட்டவர்
எல்லாத் தையும் அடிக்க—கண்மூக்கு
எதுவு பின்றி நொறுக்க

பெண்டு மிள்ளைகளைத் தண்டு கிழங்களைப்
பேத மின்றி யடிக்க—தோழரே
பிரம்புத் தடிக சுழல—அதைக்

கண்டு ஓடுமுன் கண்ணீர்ப் புகைக்குண்டு
கண்ணில் வந்து வெடிக்க—மக்கள்
கதறி ஓட்டம் பிடிக்க

ஓட்டம் பிடித்தும் கூட்டம் மறுபுறம்
உயிரை ஏந்தி எதிர்க்க—தோழரே
ஒன்றாய்க் குரல்கொ டுக்க—அதைக்

கோட்டான் போலீசு நோட்டம் விட்டதால்
மாட்டிய குண்டு ரவைக—நம்ம
மார்பை வந்து துளைக்க

சுட்டது காற்றில் மட்டு மென்றுபலர்
சுட்ட பின்பும் நினைக்க—தோழரே
சூழ்ச்சி யறியா திருக்க—குண்டு

பட்டவர் உழவர் பன்னிரு வீரர்
பட்டா ளஉடல் சரிய—அப்பதான்
பார்த்த மக்கள் பதற

கொள் முதல் விலையைக் கூட்டித் தரச்சொல்லிக்
கேட்ட துக்கு விலையா?—தோழரே
கேட்பா ரற்ற முடிவா?—இங்கே

படிப்பகம்

www.padippakam.com

உள்ளூர் வியாபாரி ஊதிக் கொழுக்க
உழவர் கள்நாம் பலியா?—தோழரே
உயரும் கரங்கள் உயிரா?

கட்டிய தாலிக் கயிற்றை அற்றெறிந்த
காக்கிச் சட்டைப் பயல்க—தோழரே
கண்ணு புடுங்கிப் பயல்க—பிள்ளை

குட்டிக ளோடு நட்ட நடுவீதி
உட்காந் திருந்த சனங்கள்—தோழரே
உற்ற துணைஇ—ழக்க

ஒருதாய் வயிற்று இருவீர இளைஞரை
உயிரோடு எமன்ப றிக்க—தோழரே
உள்ளம் பரி தவிக்க—இனி

தருவிக்க முடியாத் தியாகத் தம்பியைத்
தானறி யாத அண்ணன்—தோழரே
சிறைக்கா வலிலே இன்னும்

ஏழு ரூபாயை பத்து ரூபாவாய்
ஏற்றச் சொன்ன துக்கே—தோழரே
இழந்த உயிர்பா ருங்க—புகை

இலைக்குப் பாய்ச்சிய இரத்ததா னத்துக்கு
இருநூற் றம்பது பேரு—தோழரே
எங்க மக்கள் காயம்!

புகையிலை ரத்தம் போலீசு குடித்ததும்
புத்தி வந்த அமச்சன்—புதுசா
போட்டா னய்யா சலுக!—அரசு

படிப்பகம்

www.padippakam.com

விலையைக் கட்டுக்குள் விற்க வைக்கும்மாம்!
வேட தாரிப் பசுப்பு—தோழரே
வெற்றி இதுந—ம்க்கு!

வணிக அங்காடி மனுநீதிக் கடைக்கு
வாக்கரி—ரூபா கோடி—தோழரே
வாக்கு றுதிஇப் போது!—இதைக்

கணித்துச் சொல்ல காலம் பிடித்தது,
கவர்மெண் டின்அகம் பாவம்—தோழரே
களத்திலே வெற்றி கானம்!

குண்டடி பட்ட கோபத்தை விட, கண்
கூடா நிக்கு அரசு!—பதில்
கூற வில்லை எதுவும்!—இங்கே

திண்டாடும் சனங்க தேசம் சரிசெய்ய
தேவை மக்கள் அரசு—தோழரே
தேடு வோம்ஓர் முடிவு!

பார்த்த இளைஞர் படைகள் கொதித்து
பாரதப் பிரத மருக்கு—தோழரே
படைத்த மனுகே ளுங்க—'அரசே

வார்த்தைக் கொருமுறை உழவர் நாடென
வம்ப ளக்க வேண்டாம்!—குண்டு
வந்து பாய்ச்ச வேண்டாம்!'

கூலி விவசாயி காணிகூட இன்றிக்
காஞ்சிக் கிடக்கு றான்பார்!—அவன்
கட்டு பிரிக்க ணும்பார்!—தொழி

படிப்பகம்

www.padippakam.com

லாளி தலைமையில் உழவர் திரள்வதே
ஆயு தப்போர்ப் பாட்டு,—புரட்சி
அனைத்து வர்க்கக் கூட்டு!

உண்டு நமக்கு, ஒருஜன நாயகம்!
உழவர் பரந்த பங்கு!—தோழரே
உடைக்க விலங்கி ரண்டு!—அதைக்

கண்டு கொண்டுஇரு கைகளால் எதிர்ப்போம்!
பண்ணைத் திரைகி ழிப்போம்—ஏகாதி
பத்தி யங்கள் ஒழிப்போம்.

★

கருநாடக மா நிலத்தில் நிப்பானி என்ற ஊரில் புகையிலை பயிர்செய்யும் சிறுவிவசாயிகள் கொள்முதல் விலையை உயர்த்தச் சொல்லிப் போராடியபொழுது 6 ஏப். 81 இல் பன்னிரண்டு விவசாயத் தொழிலாளிகளை சுட்டுக் கொன்ற ஆளும்வர்க்க அதிகாரக் கூத்தை அம்பலப்படுத்துவதற்காக எழுதப்பட்டபாடல் 'சன்டே' 26 ஏப் 81, மற்றும் 'இண்டியா டுடே' இதழ்களிடமிருந்து இதற்கான வரலாறு பெறப்பட்டது. முதற்பகுதிக்கு படைப்புமெட்டும் போராட்டப்பகுதிக்கு (துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட களம்) சின்னத்துமேள (கரகாட்டம்) 'சரஸ்வதி பள்ளிக்கூட விபத்து' மெட்டும் பயன்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

லூசுன் நூற்றாண்டு விழாப் பாடல்

ராகம் : கல்யாணி **தாளம் :** ஆதி

தானே தானா தானனே தானே
தன்ன தானே தானேனோ

புதிய சீனத் தேசப் பண்பின்
புரட்சிப் பேனாத் தளபதியே (2)
மக்களைக் குழந்தைகள் என்று
மதித்த லூசுனே$_1$—உன்
மானுட நேசம் எங்களுக்குப்
புரட்சிப் பாடமே!
மருத்துவ நாடித் துடிப்புக்
கருவியைத் தூக்கி எறிந்து (2)
மனதை அறிய பேனா முனையைப்
பிடித்த லூசுனே!—புது
மக்கள் சீனம் மலர வந்த
ஞானி லூசுனே—விஞ்
ஞானி லூசுனே!

'இந்த நாட்டைச் சுரண்டும் நாய்கள்
இங்கில் லாமல் தூக்கி யெறிவோம் (2)
தூக்கி எறிந்த சாக்கடையில்
தொடர்ந்து குரைக்குமே!—நம்மைக்
கவ்விப் பிடிக்க எழுமுன்னால்
காலை உடைப்போமே!

படிப்பகம்

www.padippakam.com

இல்லை எதிரி என்றிருந்தால்
    எப்ப என்றே காத்துக் கிடக்கும் (2)
கொல்லைப் புறத்து நாய்கள் கூட்டம்
    குதறும் அப்பனே!—சேற்றை
அள்ளி முகத்தில் அடிக்கும் தன்னால்
    ஆன மட்டுமே!—அடி
    சாகு மட்டுமே!,
மக்கள் தலைவர் மாவோ சொன்னார்:
    'தேசம் தேவை லூசுன்சிந்தை!' (2)
திக்கு என்ன என்றால் வளையா
    தேக்கு நெஞ்சமே!—'அரசியல்
தெளிவு; போர்க்குணம்; தியாகம்,[3]
    திரண்ட லூசுனே!
இல்லையொரு சமரச வளைவு;
    இடைவிடாத புரட்சி இயல்பு (2)
சரணடை யாமல் சமரில் நின்ற
    இளைய இரத்தமே!—மக்கள்
சக்தி இனியும் சரித்திரம் படைக்கும்!
    எங்கள் இதயமே!
இமயம் நாங்கள் எதிரிக்குப் பணியோம்!
    எருது போல மக்களுக்(கு) உழைப்போம்
மக்களைக் குழந்தைகள் என்று
    மதித்த லூசுனே!—உன்
மானுட நேசம் எங்களுக்குப்
    புரட்சிப் பாடமே! (2)

★

படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகரப் போராளியும், நவீன சீனத்தின் ஞானியும், மக்கள் கலையிலக்கியத்தின் உலகப் பாட்டாளி வர்க்கத் தலைமைப் பேனாக்காரனுமான தோழர் லூசுன் நூற்றாண்டு விழா (1881-1981) நினைவில் வடிக்கப்பட்ட இப்பாடல், அவர் வகுத்தளித்த புதிய கலையிலக்கியப் போர்த் தந்திரமான 'பழம் பாடத்துக்குப் புதுப்பெயர்ப்பு, என்ற படியே வடிவ ரீதியில் தமிழகத்தின் தியாகராஜ பாகவதர் பாடிய 'நீலகண்டனே' என்ற திரைப்பட மெட்டைச் செதுக்கி அமைக்கப்பட்டது.

1. 'புருவக்குழியை நோக்கி ஆயிரம் நகக்கண்கள் இருந்தாலும் நிமிர்ந்து மீறிவந்து (மக்கள்) குழந்தைகளுக்கு முதுகு பணிய வந்த எருது' — என்ற 'யேனான் கருத்தரங்கு உரை'யில் உலகப் பாட்டாளிவர்க்கத் தலைவர்மாவோவால் வலியுறுத்தப்பட்ட லூசுனின் கவிதை வரிகள். இங்கே மக்களைக் குழந்தைகளாக்கி நேசித்துப் பணிந்த லூசுன் எடுத்துக் கொள்ளப்படுகிறார்.

2. 'ஒருவர் நாயை அடித்துக் கொண்டே இருக்க வேண்டும், அது குட்டையில் விழுந்த விட்ட பின்பும்! அவ்வாறு செய்யாவிட்டால் அடிபட்ட நாய் உங்களைக் கடிப்பதற்குப் பாயலாம். அல்லது உங்கள் மேல் குறைந்தது சாக்கடை நீரையாவது எடுத்து வீசலாம்' — லூசுன்.

3. சீனத்தின் வடக்கு ஷென்சி பொதுப் பள்ளிக் கூடத்தில் லூசுனைப்பற்றி மாவோ ஆற்றிய உரையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜெரோசென் என்பவரால் தொகுக்கப்பட்ட 'மாவோ கட்டுரைகள்' என்ற புத்தகத்தில் புரட்சிகரக் கலையிலக்கிய முன்னோடியான லூசுன் இவ்வாறு போற்றப்படுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

செங்கொடி

ராகம் : மோகனம் **தாளம் :** ஆதி

தன்ன தான தனன தானா
தனன தானனா—தனே

எங்கள் சிந்தை ரத்த நாளம்
எழுந்த செங்கொடி—இனி
எங்கள் வர்க்கச் செங்கோல் ஏந்த
எடுத்த செங்கொடி
...எங்கள் சிந்தை

சூரி யன்;செந் தாம் ரைபோல்
சிவந்த போதிலும்—எம்
தோழர் சிந்தும் தியாக ரத்தம்
தோய்ந்த செங்கொடி!
...எங்கள் சிந்தை

அடிமை விலங்கை பழமைக் கனத்தை
அறுத்து எறிகிறோம்!—புது
மக்கள் தலைமைப் புரட்சி என்னும்
ம்டியில் விடிகிறோம் !
...எங்கள் சிந்தை

ஆலைத் தோழன்; அடுத்து உழவன்
ஆர்க்கும் வீரர்கள்!—ஓர்
அணியில் சேர ஆளும் வர்க்கம்
அடித்து வீழ்த்துவோம்!
...எங்கள் சிந்தை

படிப்பகம்

www.padippakam.com

நீண்ட பயணம் மக்கள் பாதை
ஆயு தப்புரட்சி!—அதைத்
தீண்டத் துடிக்கும் துரோகப் பாம்பைத்
தோண்டிப் புதைக்கிறோம்!

...எங்கள் சிந்தை

பாட்டா ளிஅதி கார ஆட்சி
படைக்கும் மக்களே!—ஒரு
பச்சை ரத்தப் பாசி சத்தைப்
பாடை கட்டுவோம்!

...எங்கள் சிந்தை

✱

இதுபுரட்சியாளர்களின் தியாகத்தில் பூத்த செங்கொடிக்கான பாடல். 'தெலுங்கானாவில் பிடித்த துப்பாக்கியைத்தான் மறுபடி உயர்த்துகிறோம்' என்று பிரகடனம் செய்து புரட்சிகரக் கலையிலக்கியம் ஏந்தும் ஆந்திர மக்கள் கலையிலக்கியவாதிகளான 'கத்தார்' குழுவினர். சென்னையில் நிகழ்த்திய நிகழ்ச்சியைக் கண்டு அதன் தாக்கமே இப்பாடலும், அவர்களுடைய வீரப் பயணநடை மெட்டுமே இதற்கான இசையும் ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com

மீனாட்சி புரம் வண்டிக்காரன் பாடல்

தானே தானனனே தந்தானே தானே
தன்னன்னே தன்னானே தனன்னே தனதானே

பெல்ச்சி வெண்மணி தீப்பிடிச்ச வேளை
பெரியவா காஞ்சிலே மாநாடா போட்டான்?
நிலத்திமிங் கலங்களலாம் நெருப்புவெச்ச திலிருந்து
நீறுபூசும் இந்துதர்மம், மாறும்போ(து) அலறுது?
...தானே

வெள்ளைக் காரனுக சிலுவைநுகத் தடிக்கு
விழாம் மாடுபத்த ராம்ராஜ்ய சாட்டை!
உள்ளூர் பிரபுக்கு ஊதுவத்தி, குடிசை!
ஊருமேய விட்டதெந்த உடமைவர்க்க மதம்டா?
...தானே

ஆளுற வர்க்கத்துத் துணிவெளுக்க வந்த
ஆதி சங்கரன்கள் புதிஞ்சிவெச்ச அழுக்கு!
(அதை)
இருமுடி யின்னுதலை சுமந்துகினு போறே!
வருணா சிரமமென்னும் வண்டிமாடு வேறே!
அட...தானே

மதஅபினை வெச்சியின்னும் ஏஜண்டுத்தனம் பண்ணி
மறைமுகமாப் பாதிரிமார் வெள்ளைப்பயங் கரங்கள்
பள்ளிக் கூடங்க கட்டுறேன்னு சொல்லி
பாதியிடம் பட்டிதொட்டி வர்த்திக்கான் திண்டு!
உட்டுப் புட்டேநீ சுதந்திரம்வாங் கிட்டே!
ஊருபயல்களை ரஜனிசை விட்டுட்டே!
...தானே

படிப்பகம்

www.padippakam.com

வெக்கக் கேடய்யா வெளியசொல்லிப் பாரு!
விளங்காம போனதுக்கு மதம்வஸ் தாது!
மக்கள்தலைவன் சாவதெல்லாம் பீரங்கி மேடு,
மகாத்துமா செத்தஇடம் பிரார்த்தனக்கூடம்!
அய்யோ— தானே
தொழிற்புரட்சி யின்னுநடந் ததேஇங்கி லாந்தில்!
தோன்றி யதுபுது மதம்புரட்டஸ் ஸ்டாண்டு
(இங்கே இப்ப)
பாசிச மழைமேகம் பயிரையெல்லாம் நசுக்க
பன்றி—மாடுசண்டை என்னடா கேடு?
...தானே
அர்த்தம் உள்ளதுன்னான் 'அரசவைக்' கவிஞன்!
அல்லா மதமுன்னு மாறிப்புட்டான் மனுன்!
அரிசன மக்களுக்கு அம்பேத்காரு சொன்னார்
'அரச மரமல்ல, போதிமரம் மோட்சம்'
வர்க்க முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு மார்க்கம்
வட்டமிட விழுதல்ல, வெட்டுவிஷ விருட்சம்!
...தானே
ஒட்ட கத்தையும் ஒட்டிவந்தான் ஆள
ஒருபய லாவது கேட்டதுண்டா பேரை?
புட்டபுர்த்தி சாயிபாபா 'புண்ணிய' மண்ணே
புரட்சிநடந்த தெலிங்கானா புகட்டுவது என்ன?
நிஜாம்பிரபு சுரண்டலுக்குத் தெக்காண தீரம்
சர்க்கரை ரோஜாவில் விஷம்மறைத்த இஸ்லாம்!
நேரு'இந்து' ராணுவம் நேராக உதவ,
நிஜாம துலுக்கன்னு நெனைச்சியா அப்போது?
...தானே

படிப்பகம்

www.padippakam.com

உடைமை வர்க்கத்துக்(கு) எதிர்ப்பங்கே வந்து,
உழவர் புரட்சியிலே முஸ்லிம்மதம் பந்து!
எந்தமதம் ஆளும்வர்க்க ஏவலுக்கு மதமோ
எழுச்சிகொண்ட மக்களுக்கு எல்லாமும் பறக்கும்
...தானே

(அப்பொழுது, நாற்பத்தேழில்)
சைவமதம் 'ஜாக்'மதத்தோ(டு) உடன்பாடு பண்ண,
அய்யப்பன் மேரிபிள்ளை ஆங்கிலோ 'இந்து'
(இப்பொழுது)
குல்லாவு கவசமுன்னு மாட்டிக்கிட ஆசை!
குர்ரான் சமாதியில் மசூதிகட்ட ஆசை!
எல்லாப் படலுமே ஒண்ணுண்ணு தெரிஞ்சும்
'அல்லா வுக்கும்இனி குல்லாப்போட ஆசை!'[1]
...தானே

(அங்கே)
பூமி சூரியனைச் சுத்திவருது என்றான்—(உயிர்)
போகுற முன்புஉயில் போப்புக்கெழுதிப்போனான்
(அப்படி)
'கோபரு நிக்கொசு'[2]க்குக் கொடுமைமேல கொடுமை
கொடுத்தது வெள்ளயங்கி பிஷப்பு நில வுடைமை
...தானே

(அந்தச்)
சிலுவப் பயல்கநம்ம கழுத்துமேல இறுக்க
சிவபெருமான் தற்கொலைக்கு விஷமெடுத்துக் குடிக்க
(இன்று)
மயக்கத்தில் மதம்புரண்டு படுத்ததும் பூஜை—(இந்து)
மாகாளி முஸ்லிம்போல் மாரடிக்க ஆசை!
... தானே

படிப்பகம்

www.padippakam.com

டெல்லியி லிருந்து சாமியாரு வர்றானே!
பள்ளி வாசலப் பாக்குனுனே வர்றானே!
ஓட்டுப் பொறுக்கிக் கூட்டமுண்டி வருதே!
ஊட்ட நக்கியே வழிச்சிப்புட்டும் வருதே!

... தானே

பாக்கியத் தாயிஇங்க பாத்திமா ஆனா
பாவத்தைக் கழுவதா—மிரவருணி, கங்கை!
அடிமை ஆத்தும தாகத்தை மறைக்க
ஆர்.எஸ்.எஸ். கண்ணீரு இனிஎங்கே பலிக்க?

... தானே

முட்டாத் துலுக்கன்னு ஒருபிரிவச் சொல்றான்
மூஞ்ச பாரு 'அறிவாளி' இந்து; கிறிஸ்து பயலுக?
துட்டுகொடுக்க வெளிநாடு முட்டாள்களின் உறவு!
தூங்குமூஞ்சி 'கடவுள்க' சர்வதேசத் தரகன்!

... தானே

(அய். எம். எப்)

கடன்வாங் கியேஇங்க கவர்மண்ட்டு நடக்க
'காசுவாங்கி மதமாற்றம்' குற்றமென்ன சுமத்த?
மதங்களே கடைதிறந்த சாராய மண்டி
மயங்கிக் கிடப்பவன் புரண்டுபடுத்தா போண்டி!

... தானே

காலங் காலமா கரைஞ்சதுதான் மிச்சம்!
கஃபாவிலும் சிலுவையிலும் லிங்கத்திலும் ரத்தம்!
"பண்ணைக் கொடுமைக்கு சிவன்கிறிஸ்து அல்லா
பரிகாரம் சிறுகல்லு போட்டதுண்டா?—இல்லே!'[3]

...தானே

படிப்பகம்

www.padippakam.com

பணத்துக்காகவே சாதிமாறும் சனங்க !
பசியிலே 'எம். ஜி. ஆர். சமபந்தி' சனங்க !
சாதிப் பிரிவாலே ரணம்பட்ட சனங்க !
சமயங்கள் பெருகியும் சாந்தமுறாத சனங்க !
வர்க்க உணர்வின்றி வாழ்ந்துவந்த சனங்க'—(இனி)
வட்டி முதலையெலாம் தீக்கப்போற சனங்க !
...தானே

எந்தஒரு மதம்மாற எவருக்கும் உரிமை !
எதிர்ப்பதற்கும் மக்களான எங்களுக்கு உரிமை !
அந்தமதம் இந்தமதம் அதிகாரத் தனங்க !
ஆனைப்பாகன் விஞ்ஞானம் அடக்கும்பார் மதங்க !
... தானே

ராமராஜய நிலவுடம ஏத்தும்விஷ ஊசி !
இந்துவெறி அபினிக்கு எதிரிமுக ராசி !
மீனாட்சி புரத்தில் நடந்தமத மாற்றம்,
மேட்டுக் குடிக்குமல்ல மதத்துக்கும் ஆட்டம் !

★

81ல் நெல்லை மாவட்டம் மீனாட்சிபுரத்தில் அரிஜன மக்கள் இஸ்லாம் மதத்துக்கு மாறிய நிகழ்ச்சி, இந்திய மண்ணின் செல்லாக்காசாகிக் கொண்டிருக்கும் ராமராஜிய வெறிக்கு முகத்தில் விழுந்த குத்து. அதைப்பற்றிய பாடலான இது, வண்டிக்காரன் மெட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலத்திய 82 இல் நடந்த மண்டைக்காடு, புளியங் குடி, பாலக்கோடு போன்ற தமிழகப்பகுதிகளில் நடந்த மதக்

படிப்பகம்

www.padippakam.com

கலவரங்களில் 'இந்து' நிலப்பிரபுத்துவத்தின் ஆர்.எஸ்.எஸ் கைக்கூலிகளால், காக்கி நாய்களால் கொல்லப்பட்டவர் களுக்கு காணிக்கை இப்பாடல்.

1. குலேபகாவலி என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற 'அல்லாவுக்கும் குல்லாப் போடுறான்' என்ற மக்கள்கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்வரியிலிருந்து பெறப்பட்டது.

2. பூமிதான் பிரபஞ்சத்தின் மையம் என்ற பழங்கருத்துக்கு எதிராக 15-16 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிரேக்கவானியல் வல்லுநரான கோப்பர்நிக்கொசு சூரியனைச் சுற்றித்தான் பூமியும், பிறவும் வலம் வருகின்றன என்று நிரூபித்தவர். போப்பாண்டவருக்குப் பயந்து அவருக்கே சமர்ப்பித்து மடிந்தவர்.

3, 'கடவுள்களும் தேவதைகளும் உண்மையில் பரிதாபத்துக்குரிய பொருட்கள்! அவர்களை நீங்கள் நூற்றாண்டுக்கணக்காய் வழிபட்டிருக்கிறீர்கள். அவர்கள் எந்த ஒரு உள்ளூர் கொடுங்கோலர்களையோ தீய பிரபுக்களையோ தூக்கி எறியவே இல்லை'—தோழர் மாவோ.

படிப்பகம்

www.padippakam.com

குதூப்மினார்

ராகம் : கரஹரப்ரியா **தாளம் :** ஆதி

தானே தானனா தந்தானே தானனா—தனே
தானானே தனனானே தந்தனே தானனா

இருண்ட கோபுரம் இந்தியத் திருநாடு!—அதில்
ஏறியவன் மிதிப்பதே ஏழைகள் படும்பாடு!
...இருண்ட

இங்கே
மூச்சு வாங்கவும் வானத்தில் துளைகள் :
நம்மை
முன்னேற்றும் கட்சிகளோ இருளின் கைப்பிடிகள்
...இருண்ட

நாம்
பாகல்பூர் தேசத்துப்பிள்ளைகள்!—அதனால்
பாதை விளக்குக்கும் ஆதிக்கக் கணைகள்!
நம்மை
இருட்டாக் கிடுபவன் வெளியூர் துரைகள்;
இங்கேயே நசுக்குவது பண்ணை (நுகத்)தடிகள்
...இருண்ட

பாசிச மேகங்கள் கோபுரக் கலசம்!—வெள்ளைப்
பயங்கரமே கலசத்தின் கவசம்!
இனி
இருட்டை மிதிக்க ஒளிகொண்டு போவோம்!
இங்கே
கிணற்றை இறைக்க(செங்)கொடிகொண்டு போவோம்!
...இருண்ட

படிப்பகம்

www.padippakam.com

இந்தப்
படிகளிலே (கோட்டைச் சனநாயகத்தின்)
ரத்தக் கறைகள்!—சூரியன்
பகலிலும் விழிக்கையில்தான்
வெட்ட வெளிச்சம்!

...இருண்ட

இனிமேல்
விளக்குப் படிகள்வைத்தே காலடி வைப்போம்!
மின்னல் விழிகளால்—(பாசிச)
மேகத்தைக் கிழிப்போம்!
...எழுகிற படிக்கட்டே இந்தியப் புதுநாடு!—இனி
ஏணியல்ல நம்முதுகு,
எழுந்துவிட்ட பிற்பாடு!

...எழுகிற படிக்கட்டே
இந்தியப் புதுநாடு!

81ல் டெல்லிக்கு அருகிலுள்ள சுற்றுலாக் கேந்திரமான குதுப்மினாரின், காற்றுத்துளைகள், விளக்குகள் தவிர வெளிச்சத்துக்கு ஜன்னலே இல்லாத இருநூறு அடி உயரமுள்ள கோபுரத்தில், ஏறிச் சென்றிருந்த முந்நூறுபேர் கொண்ட மக்கள்கூட்டத்தில் அதிகாரத்தின் கைகளால் மின்சார விளக்குகள் அணைக்கப்பட்டு இருட்டோடு புரண்டும், மோதியும், இடித்தும் மிதித்தும் தவறி விழுந்தும் சிறுவரும் பெரியவருமாக 45பேர் மாண்டுபோன ஒரு புராதனச் சின்னத்தின் நவீனவரலாற்றுக் கொடுமைதந்த தாக்கமே இந்தப் பாடல். அடைப்புக்குள் இருப்பதை விலக்கினால் இசையும், இல்லையெனில் வசனமுமான ஒரு படைப்பு மெட்டு.

படிப்பகம்

www.padippakam.com

பாரதத்து பூமியிலே

ராகம் : மோஹனம் **தாளம் :** ஆதி

தானானே தன்னேனா
தன்னானே தானேனா

பாரதத்துப் பூமியிலே
பாசிசத்து அடக்குமுறை
...பாரதத்து பூமியிலே

வெண்மணி; பெல்ச்சிகள் வெந்துவந்த புண்ணுமேல (2)
கண்ணக்கொத்தும் பகல்பூர் $_1$
கண்டதிந்தத் திருநாடு !
...பாரதத்து பூமியிலே

வாரணாசி$_2$ கால்முறிப்பு: மதுரைவீரன் கைமுறிப்பு$_3$(2)
ஆராரோ கொள்ளக்காரன்
ஆளுறவன் வியாக்கியானம் !
...பாரதத்து பூமியிலே

பொண்ணுபூவக் கற்பழிக்கும் பூட்சுகாலு போலிசுகாரன்(2)
ஆண்மையையே வெட்டிவிடும்$_4$
அலிப்பய கவர்மெண்டு !
...பாரதத்து பூமியிலே

துப்பாக்கி முனையிலேயே சுதந்திரத்து வெள்ளிவிழா (2)
சொல்லுறது காந்திதேசம் !
சுட்டுத்தள்ள எங்கரத்தம் !
...பாரத்தது பூமியிலே

படிப்பகம்

www.padippakam.com

திருப்பத்தூர் தரும்புரி தியாகிம்மாரைக் கொன்றுபோட்டு(2)
தேசம்விற்ற பயல்களுக்குத்
திருவுருவத் தபால்தல ![5]

...பாரதத்து பூமியிலே

ஒண்ணாவதத் தடுப்பதற்கு வுட்டசண்ட சாதிம்தம்(2)
தெருச்சண்டய மறைப்பதற்குத்
தேசஒத்துமைச் சுப்ரபாதம்

...பாரதத்து பூமியிலே

ரயில்பெட்டிக் கவுந்தாக்கூட லட்சம்பேர் செத்தாக்கூட[6] (2)
ஒருத்தனுக்கும் உறைக்கவில்ல.
உட்காரத்தான் செங்கோட்ட,

...பாரதத்து பூமியிலே

சாராயம் விஷமுன்னாலும்,[7] சர்க்கஸ்திடல் எரிஞ்சாலும்[8] (2)
ஏராளம் சாவுன்னாலும்
எமன்வீட்டு எருமப்பய !

...பாரதத்து பூமியிலே

பக்கத்துநாட்டக் குறைசொல்ல பாரதிவிழா பாரததேசம் 2
திக்குன்னுப் பட்டாப்போதும்
தேசியவெறி திறந்துவிட்டான் !

...பாரதத்து பூமியிலே

அஸாமுக்குள் பேச்சுவார்த்த, அடிதடிக்கு
இரும்புத்தொப்பி (2)
புத்தாண்டுக்கு வாழ்த்துச்சேதி,
போடுறது கறுப்புச்சட்டம் !

...பாரதத்து பூமியிலே

படிப்பகம்

www.padippakam.com

போலந்து எமர்ஜென்சி—'போற்றி'ரெண்டு கம்யூனிஸ்டும்(2)
கறுப்புச்சட்டம் எதிர்ப்பதற்கும்
கைநீட்டி ஓட்டுக்கேப்பான் !
...பாரதத்து பூமியிலே

போர்த்திக்க பசுத்தோலு ! புத்துப்பாம்பு பிரசுனேவு (2)
புதுஇட்லர் ஜாருமாரு
புண்ணியதேசக் காவலாளு !
...பாரதத்து பூமியிலே

கோபுரத்தில் பாசிசத்தின் கும்மிருட்டு தள்ளுதையா (2)
குழந்தைகளின் பிணத்தைக்கண்டு
குதூப்மினார், சொல்லுதையா !
...பாரத்து பூமியிலே

உழைக்கும்சனம் மாநாட்டுக்கு10 ஓசியிலே வந்தாங்கன்னு(2)
சிறைபிடிக்க நடுத்தெருவு !
சீமைசுத்த நம்மபணம் !
...பாரதத்து பூமியிலே

அய்யாயிரம் கோடிரூபா ஆரக்கேட்டு அய்.எம்.எப். கடன்?(2)
அடகுவெக்கும் தரகுவர்க்க
ஆதிக்கத்தில் நம்க்குக்சுமை !
...பாரதத்து பூமியிலே

உத்திரப் பிரதேசம் உடைமைவர்க்க அராஜகம் ! (2)
துப்பாக்கி எடுத்தவன்க
துரைவர்க்க ரவுடிப்பய !
...பாரதத்து பூமியிலே

படிப்பகம்

www.padippakam.com

தீயோலி$_{11}$ கிராமத்துல திமிர்பிடிச்ச சாதிரவுடி (2)
இரவைபாய்ஞ்ச அரிசனங்க
இருபத்து நாலுபிணம் !

...பாரதத்து பூமியிலே

ஆறுவார காலத்துக்குள் அடுத்தடுத்துப் படுகொலை (2)
சாதுபூர்$_{12}$ குக்கிராமச்
சரித்திரத்தில் இத்தடவை!

...பாரதத்து பூமியிலே

சுட்டுப்போட்ட தீயோலி சொந்தசாதிக் குதவியதால்(2)
திட்டம்போட்டு சாதுபூரில்
தேவிடியாப்பய அக்கிரமம்!

...பாரதத்து பூமியிலே

காவல்நாய் வேஷத்துக்குக் காக்கிச்சட்ட மாட்டிக்கிட்டு(2)
பாவப்பட்ட ஏழகளைப்
பத்துபேரச் சுட்டுப்புட்டான்!

...பாரதத்து பூமியிலே

பீங்கான்வளையல் குடிசத்தொழில் பெண்கள்மட்டும்
இருக்கையிலே (2)
ஆங்காரம் பிடிச்சபய
ஆக்கியது பத்துபிணம்

...பாரதத்து பூமியிலே

எண்ணெய்வாங்க ஆண்கள்செல்ல இரவுஉணவைப்
பெண்கள்செய்ய(2)
கடுகுச்சட்டி கொதிக்கையிலே
கைவளையல் ரத்தக்கறை

...பாரதத்து பூமியிலே

படிப்பகம்

சூழ்ச்சியறியாதபிள்ள$_{13}$ சொன்னதிக்கில் வெறிக்கூட்டம்(2)
அவன்ஆத்தா அண்ணனையும்
அநியாயமாக கொன்னுபோட்டான்
...பாரதத்து பூமியிலே

சட்டம்,கோர்ட்டு, போலீசு சாவசமாய் வந்ததய்யா (2)
சர்க்கார கவுத்தத்தான்
சதியிதுன்னு சொல்லுதையா
...பாரதத்து பூமியிலே

எத்தனையோ கொலவிழுந்தும் ஏழசனம் தலவிழுந்தும்(2)
செத்ததுக்கே சலுகப்பணம்;
சாகடிக்க அரசுபலம்
...பாரதத்து பூமியிலே

பழிபோடப் பாக்குதிந்த பண்ணைவர்க்க அதிகாரம்(2)
பாலுக்கல்ல, பூனைக்கே
பாதுகாவல் அரசாங்கம்!
...பாரதத்து பூமியிலே

கொள்ளையன்னு குத்தம்சொல்லிக் கூடுவிட்டுப்
பாயுதய்யா(2)
குக்கிராம அரிசனங்க
குடிசஎரிப்பு தொடருதய்யா!
...பாரதத்து பூமியிலே

உஞ்சனை நாராயண்பூர் உத்திரப்பிர தேசம்வரை(2)
அரிசனைப் பலிகேக்கும்
அன்னைஇந்தி—ராதேசம்!
...பாரதத்து பூமியிலே

www.padippakam.com

ஊர்ரவுடிய ஏவிப்புட்டு உல்லாச மந்திரிக(2)
உண்மைக்குற்ற வாளி,பதவி
உயர்வுபெறும் நீதிசபை!

...பாரதத்து பூமியிலே

கிராமத்துல சுட்டுப்போட்டுக் கேட்பாரற்ற நிலவுடம(2)
சலுகப்பணம் பெற்றுநம்ம சாதிமந்திரி நகரத்துல

...பாரதத்து பூமியிலே

ஒடுக்கப்பட்ட ஜனம் அனைத்தும் ஒரணியில் சேர
வேண்டும்(2)

உண்டு,இல்ல சனநாயகம்
ஒருகை பார்க்கவேண்டும்!

...பாரதத்து பூமியிலே
பாசிசத்து அடக்குமுறை
நேரெதிர்த்து நிப்பீரே,
நீரதன் புதல்வர்களே!

★

பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்ட பாசிசஅடக்குமுறைகளைத் தொகுத்துத் தருவதற்கான முயற்சியில் 81 டிசம்பர் இறுதியில் புனையப்பட்ட பாடல். இந்திய உழைக்கும் மக்கள் மீது திணிக்கப்பட்ட பாசிசக் கொலை வாளின் ரத்தச்சொட்டுக்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு செய்யப்பட்டது. விடுபட்டவை ஏ ரா ள ம். இதற்கான மெட்டு, விடுதிநண்பர்கள் பாடிய ஒரு கேளிக்கைப்பாடலின் நாட்டுப்புற இசை. முதலில் துண்டுதுண்டான சம்பவங்களும்,

படிப்பகம்

www.padippakam.com

பின்பு உத்திரப்பிரதேசம் தீயோலி, சாதுபூரில் அதிகார வர்க்க ரவுடிகளால் நடத்தப்பட்ட அரிசனப்படுகொலையைக் குறிப்பாகவும் கொண்டபாடல். ஆன்லுக்கர் 16-31/82 இதழ், இறுதிப்பகுதிக்கு செய்தி வழங்கியது.

1. 79-80இல் பீகாரின் பகல்பூர் சிறையில் அரசுதரப்பிலே ஒப்புக்கொள்ளும் கணக்குப்போக நூற்றுக்கணக்கான கைதிகளின் கண்கள் மிருகத்தனமாக குத்திக் கிழிக்கப் பட்டன.

2, 3. விவேகானந்தர் 'பெருமான்' உலாவிய வாரணாசியின் சிறையில்தான் இருபதுக்கு மேற்பட்ட சிறைக் கைதிகளின் கால்கள் போலீசாரால் உடைக்கப் பட்டன. மற்றுமொரு சிறையில் கைதிகளின் கைகள் முறிக்கப்பட்டன 'சண்டே' என்ற ஆங்கில மாதமிருமுறை இதழில் 80-ம் வருடங்களில் படங்களோடு வெளிவந்த உண்மை இது.

4. வடமாநிலங்களின் சிறைச்சாலை ஒன்றில் கைதிகளின் ஆண்மை உறுப்புக்கள்கூட போலீஸ் அலிகளால் சிதைக்கப்பட்டன.

5. சஞ்சய்காந்தி போன்ற 'இந்திய விடுதலைக்கு' அரும்பாடு பட்ட தியாகிகளுக்கு தபால்தலை வெளியிடும் திட்டம் ஒருபுறம். உண்மையானமக்கள் தியாகிகளை தருமபுரி வடஆற்காடு மாவட்டங்களில் கொன்று போட்டுக் கொண்டிருந்த நேரம்.

6. பீகாரிலுள்ள சபர்மதி ஆற்றுப் பாலத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் ஆயிரக் கணக்கான உயிர்கள், சாகடிக்கப் பட்ட கொடுமை தமிழகத்தில் வாணியம்பாடி ரயில்விபத்

படிப்பகம்

www.padippakam.com

தில் நூற்றுக்கணக்கானோர் உயிர்பறிக்கப்பட்ட கோரச் சம்பவம்.

7, 8. பெங்களூரில் விஷச்சாராயம் குடித்து அய்ம்பது பேருக்குமேல் உயிர்மாண்ட கொடுமை (அண்மையில் செப் 82இல் கேரளாவில் ஓணம்பண்டிகையில் அதே கள்ளச் சாராயவிஷத்தால் இறந்தவர்களும், கண்கள்இழந்தவர்களும் பரிதாபமாக முன்னதைவிட அதிகமாக பாதிக்கப்பட்ட நிகழ்ச்சி நடந்துள்ளது) பெங்களூர் சென்டரல் ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள சர்க்கஸ் அரங்கில் நடந்த தீ விபத்தில் நூற்றுக்கணக்கான சிறு குழந்தைகள் மடிந்த கொடுமை (அதேபோல் 79 இல் தூத்துக்குடியில் திரைப் படக் கொட்டகை தீவைக்கப்பட்டு முந்நூறுக்கும் மேற்பட்ட பெண்களும் குழந்தைகளுமாக வெந்து கருகிச்செத்த நிகழ்ச்சி ஏற்கனவே நினைவில் இருக்கும்.)

9. டெல்லிக்கு அருகிலுள்ள குதூப்மினார் என்ற புராதனக் காட்சியகமான கோபுரத்தில் பார்க்கச் சென்ற சிறுவரும்பெரியவருமாக நாற்பத்தைந்துபேர் இருட்டுக்குள் வழிதடுமாறி மரணமான கொடுமை.

10. 81இல் 'தமிழக மக்கள் முன்னணி' நடத்திய மாநாட்டுக்கு வந்த மக்களை ரயிலுக்கு டிக்கட் எடுக்காத ஓசிப் பயணிகள் என்று பட்டஞ்சூட்டி எழும்பூர் ரயில் நிலையத்தில், சென்னையில் சிறைபிடித்த கொடுமை.

11. 81 நவம்பரில் 18-ம் தேதி உத்திரப்பிரதேச தீயோலி கிராமத்தில் 24பேரை அரிசனமக்களை மேல்சாதி நிலபிரபுக்கள் ரவுடிகளை வைத்து சுட்டுக் கொன்ற கொடுமை.

படிப்பகம்

www.padippakam.com

12. அதேமாநிலத்தில் சாதுபூர் கிராமத்தில் 81 டிசம்பர் 10இல் 10பேரை நிலப்பிரபுக்கள் கைக்கூலிகளால் சுட்டுக் கொன்று போட்ட பயங்கரம்.

13. சாதுபூர் அரிசனப் படுகொலையின்போது குதிரையில் துப்பாக்கி தூக்கி வந்த வெறியர்களுக்கு 'நாகர்சிங்' என்ற பன்னிரண்டு வயது சிறுவன் இன்னதென அறியாமல் குப்பத்தின் திசையைக் காட்டினான். வீடுதிரும்பினால் குண்டடிபட்டு செத்தக் கிடந்தவர்களில் பெற்றதாயும், கூடப்பிறந்த அண்ணனும் இருக்கக் கண்ட நெஞ்சைக் குலுக்கும் கொடுமை.

படிப்பகம்

www.padippakam.com

மாணவங்க நாங்க !

தன்னேன தானா—தனனா
, தானேன தானா

மாணவங்க நாங்க—புதுசா
ஆனவங்க நாங்க!

ஆப்கானில் பத்துவயது மாணவனும் சூரன்
அடிமைவிலங்க முறித்தெறிய அவன்படை வீரன்!
கேப்பானா துவக்கப்பள்ளி ஒரிசாநிரு வாகம்?
கிளர்ச்சியின்னு கருங்கல்ல தலையில்சுமத்தும் கோரம்! 1
—குழந்தை-தலையில்சுமத்தும் கோரம்
...மாணவங்க.

திண்டுபாத்து வகுப்பறைகள் திறக்கவேண் டாமே! 2
சிறைச்சாலை ஒண்ணிருக்கே! திறப்பது தானே!
மண்டுப்பய அராஜகம்புதுக் கல்லூரி வாசல்!
மாணவரும் ஆசானும் போராட்ட நேசம்!

...மாணவங்க.

ரசீதுக்கும் பசீருக்கும் நாஜிஇட்லர் காப்பி! 3
நாம்அடிச்சா மட்டும்அரங்க நாயகத்துக்குக் 'காப்பி'
மசுருக்கும் பெறாதுஇவன் உபதேசத் தொழுக!
மாணவனைச் சுரண்டவா சிறுபான்மைச் சலுக?
...மாணவங்க.

கருங்கல்ல மெருகேத்த தொழிற்சாலை வருகுதாம்!
கல்விகற்கும் பூக்களுக்கு ரத்தஆறு கசியுதாம்! 4

படிப்பகம்

www.padippakam.com

பலசாலி அடிப்பதற்குப் பாதுகாப்பு சட்டம்!
பச்சையப்பன் படிக்கட்டில் பைந்தமிழா? ரத்தம்!
...மாணவங்க

நிலவுடைமை, கல்லூரி நிலத்திலேயே இறுக்குதே!
நிருவாகம் கொழுப்பதற்கு அரசாங்கம் இருக்குதே!
சுலபத்தில் பாதிரிக்கும் ஹாஜிக்கும் துட்டு!
திருடனுக்குக் 'கல்வித்தந்தை' செட்டிக்கொரு
'வாழ்வு'
...மாணவங்க

பொணத்துக்கும் வரிப்பணத்தைச் சுரண்டும்அரசாங்கம்!
பீஸ்வாங்கமுளைச்சகையி சரஸ்வதிக்கு நீளம்!
அனைத்துக்கும் அய். எம். எப்கடன் அடக்குமுறை கத்தும்!
அவுத்துவிட்ட காக்கிநாய் காம்ப்பவுண்டச் சுத்தும்!
—கல்லூரி-காம்ப்பவுண்டச் சுத்தும்!
...மாணவங்க

நாட்டச்சுரண்டும் படிப்பத்தான் நாம கற்பது!
நாடிருக்கும் நிலையில்தான் நாம இருப்பது
ஏட்டுச்சுரைக் காயளவன் தலையில் உடைப்பது?
எங்ககல்வி ஜனநாயகம் இனிமே படிப்பது!
...மாணவங்க

சோவியத்துப் புர்ட்சியிலும் சீனத்துப் புரட்சியிலும்
தோள்கொடுத்த மாணவங்க, வாளெடுத்த பங்கு!
காவியத்து வில்லிஅந்தக் காஷ்மீரச் சிறுக்கி,
கறுப்புமிசா ரெண்டுதுண்டு காலத்துக்கும் இங்கு!
...மாணவங்க

படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளி உழவனுக்கு நாங்கள் தோழர்கள்!
துரைத்தனத்தைப் புதைக்கமுன் னணியின் வீரர்கள்!
இந்தியப் பாசிசன்னாலும் ஏகாதி பத்தியன்னாலும்
எங்களுக்கே வெற்றி அஸாம் மாணவங்க நாங்க!
...மாணவங்க நாங்க!

புதுவிதம்
ஆனவங்க

✱

---

82 பிப்ரவரி முதல் வாரத்தில் சென்னையில் நடந்த அனைத்துக் கல்லூரி மாணவர்களின் போராட்டத்தை அடக்க போலீசாரின் மிருகத்தனமான தாக்குதலை எதிர்த்து எழுந்த பாடல். படைப்புமெட்டு.

1. சில ஆண்டுகளுக்குமுன் ஒரிசா மாநிலத்தின் துவக்கப்பள்ளி ஒன்றில் நிருவாகத்தின் அட்டூழியத்தை எதிர்த்தார்கள் என்பதற்காக சின்னஞ்சிறுவர்கள் தலையில் கருங்கல் சுமத்தி போலீசார் சித்ரவதைசெய்தனர்! பத்திரிகையில் படமாகவே வந்த கொடுமை.

2. சென்னை எஸ். அய். இ. டி பெண்கள்கல்லூரி கடந்த சில வருடங்களாக திறந்துவெளி வகுப்பறையில் நடந்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

3. ரசீதும், பசீரும்: முறையே புதுக்கல்லூரி, எஸ். அய். இ. டி. கல்லூரிகளின் நிருவாகிகள்.

4, 'கருங்கல்லுக்கு மெருகேற்றும் தொழிற்சாலை சென்னையில் அமைக்கப்படும்' என்ற தமிழக அமைச்சர் ஒருவரின் அறிவிப்பும் 'பச்சையப்பன் கல்லூரியில் ரத்த ஆறு' என்ற செய்தியும் பத்திரிக்கை ஒன்றின் ஒரே பக்கத்தில் வரக்கண்டது.

5. இதையொட்டிய காலத்தில் அண்ணாமலை செட்டியார்களின் கல்விக்கு வாங்கிய வட்டிக்காக பெரும்விழா சென்னையில் எடுக்கப்பட்டது,

படிப்பகம்

www.padippakam.com

ரத்தம் கொதிக்குதடா !

ராகம் : சங்கரா பரணம் **தாளம் :** ஆதி

தன்னன தானேனா—தனனே
தானனே தன்னேனா

ரத்தம் கொதிக்குதடா—தோழா
ரத்தம் கொதிக்குதடா
அர்த்த சாமத்திலும் அதிகாரி செய்வதைச்
செத்த நினைத்துவிட்டால்—தோழா
ரத்தம் கொதிக்குதடா

...ரத்தம்

நெத்தியில் வழியும் ரத்தத்தைப் பாத்தாலும்
வெத்துமெடிக்கல் கார்டு கேக்குறான் !—பாவிப்பய
வெத்து மெடிக்கல் கார்டு கேக்குறான் !

...ரத்தம்

துறைமுக ஆஸ்பத்திரிய—கட்டித்
தோட்டம் போட்டவன் தோழன்—அவன்
நிறைமாச சம்சாரம் நிக்கிறா கேட்டிலே !
நீபோங் கறான்வந்த டாக்டர்!—கருவ
நிக்க வெக்கிறான் ரோட்டில் !

...ரத்தம்

முன்னால உட்காந்த—பயல்க
வெள்ளக் காலருன்னா மருந்து !—கண்ணு
வெந்து வருறான் வெல்டிங் வேலையில் !
காக்கி டவுசரா சுண்ணாம்பு !—நம்ம
கவர்மண்டு டாக்டர் களிம்பு !

...ரத்தம்

படிப்பகம்

www.padippakam.com

ஊனமுற்றோர் விழாவில்—ஏறி
உதடு கிழியக் கத்துறான்—அந்த
மச்சிவீட்டுக் காரி மச்சத்தில் சிகிச்சை !
காலொடிஞ்ச பெண்கள் நமக்கு !—அவன்
கவனிச்ச கதைஏ(து) இருக்கு ?

...ரத்தம்

நம்புண்ணக் கழுவ—அந்த
டாக்டருக்கு சோப்பு !—அதுல
சும்மா பொரமோசன் சோப்புப் போடுறான் !
தினுசுல ஸ்டெத்தஸ் கோப்பு !—மக்கள்
தெரிஞ்சா தூக்கு ரோப்பு !

...ரத்தம்

அமெரிக்காவத் திட்டிப்புட்டு—நாம
ரசியாவ விடலாமா—ஊழல்
அப்பன்மார் எஞ்சினியர் ஆஸ்பத்திரி டாக்டரிலும்
ஆதாயம் பாக்குற சுவரு—திருடன்
அதிகாரிக் கும்று பெயரு !

...ரத்தம் கொதிக்குதடா !—தோழா
ரத்தம் கொதிக்குதடா !— இந்தச்
சித்தப் பிரம்மப் பயல்க ளுக்குப்
புத்தி புகட்டலாம் தோழா!—நாம
பொறுத்த துவெகு நாளா !
மொத்தமா போவோம் நாம்தோழா—புது
ரத்தமா போவோம் வாதோழா !

★

படிப்பகம்

www.padippakam.com

82 ஏப்பரலில் துறைமுக மருத்துவமனைக்கு முகத்தில் விஷப்பரு உடைந்து முழுக்க ரத்தப்பசை கெட்டி அவசர சிகிச்சைக்குச் சென்ற ஒருவரை டாக்டர் கேட்ட கேள்வி : 'மெடிக்கல் கார்டு எங்கே ?' குறிப்பான கோபாவேசத்தை எங்கள் தொழிலாளர்களின் பொதுக்கோபஆக்கினையாக மாற்றியதின் விளைவே இப்பாடல். படைப்பு மெட்டு.

1. இது அங்குள்ள ஆங்கர்கேட் ஆஸ்பத்திரியைக் குறிக்கும். மொத்தமுள்ள இரண்டு மருத்துவ மனைகளில் பாமரத்தொழிலாளிகளை மாற்றி மாற்றி அலைக்கழிப்பது டாக்டர்களின் வழக்கம்.

படிப்பகம்

www.padippakam.com

அரசியலை ஆணையில் வைப்போம்!

ராகம் : மோஹனம் தாளம் : ரூபகம்

தானேன தந்தான தனனேன தந்தான தானா

அதிகாரம் நமக்கென்று
அரசியலை ஆணையிலே வையடா — அத
ஆளும் வர்க்கம் வந்து கேட்டா
அப்பவே அங்கேயே உதைடா — வர்க்க
அகநிலையை நெருப்பாக்கிச் சுடுடா!
— தோழா — அதிகாரம்...

அய்யாயிரம் கோடிக்கு
அடகுவெக்க எண்பது கோடி, ஏண்டா? — நாம
அமெரிக்கக் கடன்வாங்கி
ரசியாவுக்(கு) உயிர்கொடுக்க வாடா? — அது
நடக்காது, பாசிசத்து மூடா!
— தோழா — அதிகாரம்...

மணிப்பூர்முன் மிஜோக்கள்முன்
மக்கள் படை முன்(பு) எதிரி தூசி! — அவன்
மக்குப்பய தேசவெறி
மாட்டிகிட்டு முழிக்கிற வேசி! — வர்க்க
மானத்துக்கு சுய நிர்ணயம் ஆசி!
— தோழா — அதிகாரம்...

படிப்பகம்

www.padippakam.com

தருமபுரி திருப்பத்தூர்
தமிழகத்துப் புரட்சியாளர் கொலையா?—அடே
தொப்பித்தலை பாசிசமே,
தூக்குமேட போடவருது படையே,—மக்கள்
தோள்தட்டும் ஜனநாயக அலையே!
— தோழா—அதிகாரம்...

பாதுகாப்புச் சட்டங்களும்
பாசிசத்து விலங்குகளும் நூறு!—கடன்
பட்டியலும் வரிச்சுமையும்!
பாட்டாளிக்(கு) இல்ல பிடி சோறு!—மக்கள்
படையினிமே பொறுக்காது பாரு!
— தோழா—அதிகாரம்...

★

---

82 மே தினத்துக்காக எழுதப்பட்ட, எளிய சந்தம்! இசை, ம க இ க இசைக்குழு வழங்கிய மெட்டு.

படிப்பகம்

www.padippakam.com

தோழர்களே நண்பர்களே

(தருமபுரி பாலன் கதை)

தன்னான தனன தன்னே தன்னேன தான தன்னே
தானான தான தன்னே தன்னான தனன தன்னே
தன்னே தான தன்னா—தனே
தனன தன்னே தானா

தோழர்களே நண்பர்களே துணிவுள்ள மானிடரே
வாழனுன்னு உந்தப்பட்ட வர்க்கப்போ ராட்டக்கதை!
தரும புரியின் தோழன்,—கதைத்
தலைவன் தியாகி பாலன்!

காஞ்சிபோன மேற்பரப்பு; கம்லைக்கல்லும் கொதிகொதிப்பு
தாங்காத பசிக்கோரம், தருமபுரி வடாற்காடு!
பிஞ்சைக் கொளுத்தும் வறும,—நிலப்
பிரபுத் துவத்துக் கொடும!

கந்துவட்டிக் காரனுக்கும் காலம்பூராக் குத்தகைக்கும்
நொந்தசனம் பொறுக்காம நுகத்தடியை உடைத்தெறிய
ஆளு சேந்து முழக்க—பண்ணை
ஆதிக்கத் தலைகள் முழிக்க

தெருவோரம் நின்னிருக்கும் தீண்டாமைக் கொடுமைக்கும்
முழுங்குற முதலைகளாம் மோசடிப்பத் திரங்களுக்கும்
அசலைப் பிடுங்கத் திரண்டார்—மக்கள்
ஆர்ப்ப ரிக்கல் ஆனார்!

எழுபத்தேழாம் வருசத்திலே எழுந்ததங்கே இளைஞர்படை
விடுதலைக்கு அழைக்கவும் விலங்கைநொறுக்க முழக்கவும்
'அரசியல் கைதி அனைவரை—அரசே
விடுவி' என்றொரு ஊர்வலம்!

படிப்பகம்

www.padippakam.com

சிறுபொறிக பெருநெருப்பா சேர்ந்தெழுந்து பற்றியது!
தருமபுரிப் பகுதியிலே தெலுங்கானாக் கொளுத்தியது!
ஆயுத பாணி யாக—மக்கள்
அதிகா ரத்தை நோக்க

இளைஞர்அணி; மக்கள்திரள் எழுச்சிமிகு போராட்டங்கள்
நிலப்பண்ணைப் பிரபுக்கும் நீலிக்கண்ணீர் ஜாருக்கும்
கண்ணு றுத்திடல் ஆச்சு!—பாசிசக்
காக்கி நாய்க போச்சி!

எண்பது ஆகஸ்டிலே என்னரும் தோழர்களை,
தின்னது இரைதேடித் திருப்பத்தூர் வெடிகுண்டு!
தனிப்போ—லீசு படைக்கு—விஷம்
தலைக்கேறும் கலகப் பகுதி!

வாலிபர் சங்கத்தையும் விவசாய சங்கத்தையும்
ஆலம்ரம் வெட்டவெறும் காக்கிநாய்ப் பிரம்புக!
அதிகாரப் பல்லு குத்த—தொப்பி
அரசு மல்லு கட்ட

சீராளன் வரலாற்றில் சிவப்புநட் சத்திரங்கள்!
போராளி பாலன்வரை புரட்சித்தியாகக் கண்மணிகள்!
மிசாவில் மடிந்த சீராளன்—பாசிச
மேகம் மறைத்த நம்பாலன்!

சென்னையின் கல்லூரியில் செவிகொடுத்துப் படிக்கையில்
இந்திய வசந்தத்தின் இடிமுழக்கம் தான்கேட்டான்!
மின்னல் பட்டான் எழுபதில்!—பாலன்
மேன்மை தரிச்சான் எண்பதில்!

படிப்பகம்

www.padippakam.com

திக்குசந்தில் பாட்டாளிச் சித்தாந்தம் தான்பரப்ப
மக்களிடம் நேசம்வைத்து மக்களோடு ஒன்றிணைந்து
புரட்சி கொள்ள அழைச்சான்!—மக்கள்
புரிந்து கொள்ள உழைச்சான்!

பட்டி தொட்டி பரப்பியும் தீண்டாமை துரத்தியும்
வட்டித்துயர் விரட்டியும் வாழ மக்களைத் திரட்டியும்
விவ்சாய மக்களின் தோழன்!—ஒரு
வீர மரபு பாலன்!

கொல்வது நிலப்பிரபா? குண்டாந்தடி போலீசா?
நல்ல தலைப்பிலே நடந்தது ஒரு பட்டிமன்றம்!
முடித்தான் செப்டம்பர் மூனு!—பாலனை
மோப்பம் பிடித்தது வேனு!

எண்பதுசெப் டம்பர்ஆறில் விவ்சாயிகள்; வாலிபர் சங்கம்
ஏற்பாடு செய்தகூட்டம் இடம்'சீரியம் பட்டி'க்கிராமம்!
முன்னால் மக்கள்கூட்டம்!—இடி
முழக்கம் செய்தான் பாலன்!

பத்துமணி சுமாரிருக்கும்; படையொன்று வந்ததய்யா!
மொத்தம் நூறிருக்கும், யுத்தக்கள ஆயுதபோலிஸ்!
மேடைய விட்டு இறங்க—பாலன்
மேலுச் சட்டைய இழுக்க

அக்கம்பக்கம் மக்களை அடிப்பதற்குச் சைகையிது!
திக்குதிசை தடுமாறி தேசமக்கள் பதறிஓட
துப்பாக்கி ரவைக சத்தம்,—தொலை
தூரத் துக்கும் ரத்தம்!

படிப்பகம்

www.padippakam.com

புரட்சிப் புயலைஒரு புதியசெந் தாரகையைப்
பறிச்சிக் கொண்டுசென்றான் பாலக்கோடு காவல்நிலையம்!
மாறி மாறி யடிக்க—பாலன்
மயக்கத் தோடு கிடக்க

பாலக்கோடு நிலையத்திலே பாலன்காலை உடைத்துவிட்டு
ஆளைக்கொல்ல விசாரணை; ஆஸ்பத்திரி தருமபுரி!
மருத்துவ மனைக்கு வெளியே—பெரும்
மக்கள் வெள்ளம் வழிய

வெண்மணி சாம்பலைப்போல் வியர்த்துக்கிடந் தான்பாலன்!
கண்மணியில் வேல்பாய்ச்சும் காக்கியிரும்பு ஜாரரசு
சென்னை கொண்டு போக—பாட்டாளி
சிறுத்தை பாலன் சாக

பாசிசம் சீழ்பிடித்துப் பச்சையாய் அழுகிவிட
வேசையின் பிள்ளைகளால் வீரன்காலில் ரணங்கெட்ட
எட்டாம் தேதி பயணம்!—பனி
இரண்டாம் தேதி மரணம்!

மருத்துவம் பார்த்தவரும் மற்றுமுள்ள நர்சுகளும்
ஒருத்தரை ஒருத்தர் உற்றுமுகம் பார்த்திடவே
வீர உரைதான் ஆற்ற—பாலன்
விழுகை யிலும்தீ மூட்ட

காலூன்றும் பொழுதினிலே காலொடிக்கப் பட்டுவிட்டான்!
வேலெந்தும் பாதையிலே வெளிச்சக்குருதி ஆகிவிட்டான்!
சிகிச்சை யின்றி மரித்தான்!—பாலன்
செந்தா ரகையாய்ச் சிரித்தான்!

படிப்பகம்

www.padippakam.com

கொன்றுபோட்ட பிணத்தைக்கூட கொடுக்கப்பயந்த
அரசாங்கம்,
எங்கள்பாலன் புதைத்த இடம் எமன்முளைக்கும் தனக்கென்று
குலைநடுங்குற எதிரியே,—வெடி
குண்டும்லி பாலன் கல்லறையே!

நியாயங்கெட்டு எழுந்தாலே நிலப்பிரபை எதிர்த்தாலே
நாட்டுசனம் திரண்டாலே நக்சலைட் நாமம்சூட்டி
துப்பாக்கி விசைய அழுத்த—தியாகத்
தோழரை அதுவா துளைக்க?

சேவைசெய்ய மக்களுக்குச் சிறையிலிருந்து தப்பியவன்;
ஆர்வமுடன் நாட்டுப்புறம் ஆயுதப்பயிர் வளர்த்தமகன்,
விட்டால் புயலை எழுப்புவான்!—பாலன்
வீழ்ந்தும் நம்மூச்சில் கிளம்புவான்!

சாவின் கடைசிமட்டும் சமரனவன் போராடினான்!
நோவின் காலைக்கொண்டு நுகத்தடிய துண்டாடினான்!
பண்ணை; செட்டிகள் பதைக்க—வீர்க்கப்
பதாகைய பாலன் பிடிக்க

என்னஏது செய்வதென ஒன்றுமறியா மக்களிடம்
கன்னமிடப் போனது காவல்துறைத் திருடன்கள்!
கொள்கைக் காரன் நாமாம்!—வட்டிக்
கொடுமை மட்டும் சரியாம்!

எண்பதுஆகஸ்டுமுதல் எம்பத்தொன்று ஜூன்வரை
பண்ணது படுகொலை, பத்தொன்பது தோழர்களை!
போலிசு கொலைய கேளு!—தியாகப்
போராளி பட்டியல் பாரு!

படிப்பகம்

www.padippakam.com

தானனே தன்னே தன்னன தானே
தானே தன்ன தானா

செல்வம்; ராஜப்பா, சுப்ரம்ணி; பெருமாள்;
சண்முகம்; நம்ம் பாலன்;—குருவிக்கார
கனகராஜ்; சின்ன துரையே;—பேட்ட

நொண்டிப் பெரும்மாள்; ஜெயபால்; மனோகரன்;
கண்ணா ம்ணி; ஓர் அன்பு;—சரவணன்;
தனபால்; சின்னத் தம்பி;—நடராஜன்;
தருமன்; ம்ச்சக் காளை!

(முந்தைய மெட்டு)

வெட்டவெளி சுட்டுத்தள்ளவும் விழும்பிணத்த குத்தவும்
கெட்ட(து)அந்த தேவாரக் கீர்த்தனையை கிழித்தெறிவோம்!
வெட்டி னாலும் சிதைஞ்சிடோம்!—சுட்டு
வீழ்த்தி னாலும் பணிஞ்சிடோம்;

போராட்டக் கங்கிலே புடம்போட்ட தோழர்களின்
வீரமா மரணத்திலே வெளுத்துவாங்கும் புரட்சி அது,
நடக்கும் நம்மைச் சுற்றி;—விஞ்
ஞானம் வர்க்க வெற்றி!

பாலன்கள் கண்ணாமணி பாட்டாளிப் பறவைகளை
வேடன்கள் சுடலாம்நீதி விசாரணை கிடையாது
வெண்மணி நாயுடு மரணம்!—போலீஸ்
விடாது குரைக்கும் தருமம்!

ஏலகிரி மலைவரைக்கும் ஏறியது பாசிசப்பாம்பு!
இதுவரைக்கும் இரத்தசாட்சி இருபத்தஞ்சு தோழர்கள்!
பாட்டாளி கொடிதா ழாது—அடேஅது
பாசிசப் பாம்பை விடாது!

படிப்பகம்

www.padippakam.com

வடாற்காடு தருமபுரி வரப்புக்குள்ளே ரத்தஆறு!
விடாமப் பாசிசத்து வெறிப்பய மழமேகம்!
சட்டம் மீறிச் சுட்டு—அதோடு
சதிவ ழக்கும் போட்டு!

துப்பறிய மக்களுரிமை தூதுக்கழ கம்செல்ல
அப்பாவிக அவரையும் அடிச்சிதிருப்பி அனுப்ப
கொலைகா ரனுக்குப் பரிசு,—தொப்பிக்
கோமா ளிக்கு அரிப்பு!

ஏவுறது நிலவுடமை; எய்தஅம்பு அரசாங்கம்!
சாவாத போராட்டத்தில் சரித்திரத்தைத் திருப்புவோம்!
பாசிச அடக்கு முறைக்கு—மக்கள்
படைக்க—வசங்கள் தரிப்போம்!

திருப்பத்தூர் தருமபுரி செங்குருதிக் கரையுடைத்து
சேலம்தஞ்சை மாவட்டத்தில் சேனையைப்போல் மக்களெழ
அதிகார வர்க்கம் நடுங்க—புரட்சி
அலைகள் ஓய்வ தில்லே!

தோண்டத்தோண்ட கொப்புளிக்கும் தோழர்களின் தியாக
ஊற்று!

மாண்டஎம் பாலன்மார் மீண்டுமீண்டும் தீவளர்க்க
முற்போக்கு இளைஞர் படையில்,—அதோ
முகம்தெ ரிவது பாலன்!

நிலவுடமைக் களஞ்சியமும் நிதம்திருடும் கப்பல்களும்
உடைபடும் இதுவுறுதி, உழைக்கும்வர்க்கம் எழுந்தாச்சி!
சுத்தியல் அரிவாள் பக்கம்—மக்கள்
துணைக்கு அனைத்து வர்க்கம்!

படிப்பகம்

www.padippakam.com

காயம்பட்ட எம்சனங்க கண்ணீரில் கழுவஅல்ல!
கண்கண்ட போராட்டக் கைவேல் எடுக்குறாங்க!
வெண்மணி நெருப்பு அணையலே!—நம்ம
வெற்றி முயற்சி பணியலே!

இரண்டாண்டு கழிஞ்சபின்பும் இப்பநடந்த மேநாளிலும்
திரண்டுபோன தரும்புரியில் தீக்குச்சிகள் நடந்ததென
கைது செய்து மிரட்டல்!—சென்னையிலும்
காக்கிச் சட்டைக அதட்டல்!

பண்ணைநுகத் தடிகளுக்கும் பலநாட்டுக் கொடிகளுக்கும்
மண்ணைக் குத்தகைக்கு மறதியாக விட்டமக்கள்
கையில் செங்கொடி தூக்க—விடி
காலையைப் போல தாக்க

வெட்டுற சவக்குழிக்கு வேண்டியது பாசிசமே!
பொட்டிலேயே அடிக்கும்பார் புதியஜன நாயகமே!
புரட்சி வர்க்கங்கள் சேர—மண்டைய
போடப் போவது வேற!

நெடும்பயணம்; ஆயுதங்கள் நீண்டபடை. நாம்போக
கடிவாளம் அற்றகுதிரைக்குக் கையாலே லகான்போட
புரட்சித் தோழர் ரத்தம்,—ஒவ்வொரு
சொட்டுக்கும் எதிரி மொத்தம்!

பாட்டாளி யுத்தகாண்ட பாலபருவம் தரும்புரி!
நாட்டிலினி புதியஜன நாயகமே நமதுகுறி!
துளைக்க எதிரி வரைக்கும்—பாலன்
தோழர் புரட்சி வணக்கம்!

★

படிப்பகம்

www.padippakam.com

தமிழக அரசால் 12-9-80இல் மூர்க்கத்தனமாக கொல்லப்பட்ட புரட்சியின் தீப்பொறியும் மக்களின் சிவப்புத் தியாகியுமான தோழர் தருமபுரி பாலனுக்கு இப்பாடல் புரட்சிகர அஞ்சலி. 'சமான்' ஜுன் 82 இதழ் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் 10-1-84, நாளேட்டின் கட்டுரையின் மொழியாக்கம் (மதுரை சிவில் உரிமைக் கழகம் வெளியிட்டது) இவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட இப்பாடல் சின்னத்து மேள (கரகாட்டம்) 'மணிக்குரவன் மெட்டில்' அமைக்கப்பட்டது. மதுரைப் பகுதியிலும் தமிழ்நாடு முழுக்கவும் அரியலூர் ரயில்விபத்து, தேவர்பாட்டு மரணகீதம் போன்றவை இம்மெட்டில்தான் பாடப்படுகின்றன. தியாகிகளின் பெயர்ப் பட்டியலாக இடம் பெறும் பகுதி 'சரஸ்வதி பள்ளிக்கூடவிபத்து' மெட்டில் அமைக்கப்பட்டது.

1. 'பாசிசம் ஒரு கடிவாளமற்ற குதிரை'—கியார்கி டிமிட்ரோவ், 82இல் நூற்றாண்டு கண்ட பல்கேரியப் புரட்சிகர மாவீரன். இங்கே மேற்கண்ட வெறிபிடித்த குதிரைக்கு லகான்போட்டு இறுக்குகிற கைகள், மக்களாக உருவகிக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

வடகிழக்கு மக்கள் படைப்பாடல்

லல்லே லாலா—லலே—லாலே லல்லா

நெஞ்ச மெங்கும்—புரட்சி
நெருப்பு வெள்ளம்!—இந்திய
வடகிழக்(கு) ஓரம்,—மக்கள்
படையே வெல்லும்!

...நெஞ்சமெங்கும்

அஸாம் மரத்தில்,—ஊறும்
காகி தத்தில்,—கப்பல்
அவசரச் சட்டம்!—கொல்லக்
கலவரப் பகுதி!

...நெஞ்ச மெங்கும்

சுரங்கத் தோழர்—வெட்டும்
உழைப்புக் கனிகள்—பாரத
தேசிய மூட்டம்—அதிலே
திருட்டுப் போகும்!

...நெஞ்ச மெங்கும்

பெட்ரோல் நதியே—அஸாம்
பிரம்ம புத்திரா—கொள்ளைத்
தேசப் படத்தை—எண்ணெய்க்
கிணற்றில் துவைப்போம்!

...நெஞ்ச மெங்கும்

7

படிப்பகம்

www.padippakam.com

தேயிலைச் செடியில்—மக்கள்
ரத்தம் பருகும்—இந்திய
சமஷ்டி வாத—ஆணி
வேரை எரிப்போம்!
...நெஞ்ச மெங்கும்

ஷில்லாங் மலையில்—விளைந்த
யூரே னியம்!—அணு
குண்டுக்(கு) எடுக்கும்—ஏகாதி
பத்தியம் உடைப்போம்!
...நெஞ்ச மெங்கும்

எஞ்சின் இரைப்பை,—எங்கள்
நிலக்கரிச் சோறு!—ஊரான்
இயந்திர சுவாசம்,—எங்கள்
எரிவாயுக் காற்று!
...நெஞ்ச மெங்கும்

சிக்கிம மிதிச்சி—இப்போ
சிட்டகாங் நசுக்கும்—பாரதக்
கொள்ளிவாய்ப் பேயின்—அதன்
குரல்வளை நெரிப்போம்!
...நெஞ்ச மெங்கும்

மேக லாயா,—அவள்
மேலாடை பறித்து—இந்திரா
பரத நாட்டியம்—செய்திப்
படத்தைக் கிழிப்போம்!
...நெஞ்ச மெங்கும்

படிப்பகம்

www.padippakam.com

அசோகச் சக்கரம்,—முய்வா
அய்சக் படையால்—உருண்டு
நாகலாந்து மக்கள்—புதை
மணலில் சிக்க!

...நெஞ்ச மெங்கும்

அருணா சலத்தில்—எங்கள்
ஆதி வாசி—உள்துறை
அமைச்சரைக் கண்டு—வேட்டை
அம்பொடு நிற்க

...நெஞ்ச மெங்கும்

கொரில்லாக் குயில்கள்—மிஜோ
வீராங் கணைகள்!—'இந்தியத்'
தோழிகள் அல்ல—துடைக்கும்
தோட்டிப் புயல்கள்!

...நெஞ்ச மெங்கும்

காஷ்மீர் ஏரி—பிரிவினைக்
கனலாய் மாற—திரி
புராக்கள் எல்லாம்—தனி
கூடுகேக் காதா?

...நெஞ்ச மெங்கும்

அமெரிக்க சதியால்—அணு
உளவுக் கருவி!—இம்ய
நந்தா தேவி,—கங்கை,
விஷத்தின் அருவி!

...நெஞ்ச மெங்கும்

படிப்பகம்

www.padippakam.com

பிரஷ்னேவ்ப் பாம்பின்—ரசியப்
பிரிய தர்சினி—நடத்திய
வங்கப் போரால்—பிரச்சனை
வந்தது அகதி!

...நெஞ்சமெங்கும்

பாக்கிஸ் தானை—ஒழிக்கப்
படைக்குச் செலவு!—எங்கள்
அடிப்படை வசதி—கொடுக்க
ஆகல முடிவு!

...நெஞ்சமெங்கும்

ஆனந்த பவனம்,—மிசா
ஆயிரம் பூக்கும்!—பாசிச
மத்திய அரசு,—எங்கள்
மக்களைக் கொல்லும்!

...நெஞ்சமெங்கும்

பூகோளப் படியும்—தனிப்பண்
பாட்டின் படியும்—இன
விடுதலை கேட்டோம்!—அதில்
வெற்றியே காண்போம்!

...நெஞ்சமெங்கும்

கூட்டு இந்தியா—ஒரு
வான வில்லே!—ஏழு
சகோ தரிகள்—இன்று
கொரில்லா மின்னல்!

...நெஞ்சமெங்கும்

படிப்பகம்

www.padippakam.com

வர்க்கப் போரே,—இன
விடுதலைப் போராம்!—புதிய
ஜனநா யகமும்—அதற்கு
ஒரே ஊராம்!

...நெஞ்ச மெங்கும்

மெய்த்தி மெய்த்தீ—மணிப்பூர்
மக்கள் படைத்தீ!—அதை
அடக்க நினைத்தால்—இந்தியா
அனைத்தும் புரட்சி!

...நெஞ்ச மெங்கும்—புரட்சி
நெருப்பு வெள்ளம்!

✱

இந்திய வடகிழக்கு எல்லையில், மத்திய அரசின் பாசிசக் கூட்டுத்துவவாதக் கொடுமையால், அஸாம், அருணாசல பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர், மிஜோராம், திரிபுரா, மேகலாயா எனும் ஏழுசகோதரிகளின் இனவிடுதலைக்கு நவீன 'பட்டீல்கள்' போடும் வேகத்தடுப்புகளை மீறிப்பொங்கி வரும் மிஜோராம், மணிப்பூர் மக்கள் படையின் குளம்படி யோசையே இப்பாடல். ஆங்கிலத் திரைப்படம் ஒன்றின் எழுத்துப் பாடல்மெட்டு, சீர்திருத்தப்பட்டுப் பயன்படுத்தப் படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

மதம் ஒரு அபினி[1]

ராகம் : மத்தியமாவதி   தாளம் : ரூபகம்

தானானே தானே தனனானே தானே
தனனான தானானே தந்தானே தானே

மக்களுக்கு விஷமே, மதம்ஒரு அபினி!
சமூகஉணர்வு இடத்தஅது சாப்புட்டத கவனி!—ஆதியில்
சமூகஉணர்வு இடத்தஅது சாப்புட்டத கவனி!
...மக்களுக்கு

அல்லான்னு கோமேனி;ஜியா முல்லாக்கள் உதைக்கிறான்!
அல்லேலுாயா பாலங்கிஸ்டு[2] அரபுமக்கள
வதைக்கிறான்!
ஆதிசிவன் கழுத்துப்பாம்பா ஆர்.எஸ் எஸ் கடிக்கிறான்!
அன்றாடம் தரும்கர்த்தாப் பண்டாரம் கொளுத்துறான்!
—குடிசய—பண்டாரம் கொளுத்துறான்!
...மக்களுக்கு

நாகூரான் வியாபாரம் நஞ்சுசக்கர ரோஜா!
நயவஞ்சக மெழுகுஉப்பு வேளாங்கண்ணி மாதா!
மூகாம்பிக சுண்டலிலே மண்டக்காட்டு ரத்தம்!
முகமூடி நிலவுடம உண்டியல்பக்கம் சுத்தும்!
—முருகன்—உண்டியல்பக்கம் சுத்தும்!
உஞ்சனையில் குதிரையேறி ஊர்வலத்த துவக்கினான்!
உள்ளூரு அரிசனன 'ஓம்ஓம்'ன்னு நசுக்கினான்!
மண்டக்காட்டில் மீனவரை மரணக்கடல் வீசினான்!
மறுபடியும் புளியங்குடி முருங்கமரம் ஏறினான்!
—வேதாளம்—முருங்கமரம் ஏறினான்!
...மக்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com

பாலக்கோடு, பட்டாபிராம், பச்சைரத்தம் தீவைப்பு!
    பண்ணைவர்க்க மதரதத்தில் அச்சாணி நம்எலும்பு!
ஆட்சிஅதி காரங்களும் ஆர்.எஸ்.எஸ் மடியிலே!
    அடிப்படைய தகர்த்தாத்தான் அமைதிவரும் முடிவிலே
        —புயலுக்கு—அமைதிவரும் முடிவிலே
            ...மக்களுக்கு

அரசுக்கு உரைக்கிறோம்: மதம் தனிப்பட்ட பிரச்சன!
    அனைவர்க்கும் வைக்கிறோம்: மதம் பொதுப்பட்ட
        பிரச்சன!
கண்டிசன் எடுபடாது! மதம்மாறுவ(து) உரிமை!
    கைதொழுத உரிமைபோல் காலுடைக்க உரிமை![3]
        —மதத்த—காலுடைக்க உரிமை
            ...மக்களுக்கு

வேலப்பிரிவு, ஆட்சிபலம் மதத்திலும் ஏற,
    வீணப்பய சாதிமுறை இந்தியாவா மாற[4]
சாதிசமயம் நிலவுடமச் சாக்கடையாய் நாறி,
    சமுதாயம் கிடக்குதய்யா, மூஞ்சில்துப்புகாறி!
        —எதிரி—மூஞ்சில்துப்பு காறி!
            ...மக்களுக்கு

மதத்தோடு சண்டைபோட்டா மதத்துக்கே மீட்சி!
    மரமண்ட நாத்திகத்தால் மதத்துக்(கு)அரசாட்சி!
நாத்திகமோ மார்க்சியத்தில் ஆனாஆவனாப் பாடம்!
    நம்பொறுப்பு, முடிக்கஅது மட்டும்மல்ல, பாரம்[5]
        —சுவடி—மட்டும்மல்ல, பாரம்!
            ...மக்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com

பிரச்சாரம் அழிக்காது, சாதிசமயப் பாசி!
பிரம்போடு அரசியல்போர் நடத்தாதே! யோசி!
விஞ்ஞான வாளைஎடு, வெட்டுமதப் பாம்பு!
விழுதவெட்ட நிலவுடம் வேரவெட்டு காம்பு!
—அடி—வேரவெட்டு காம்பு!
...மக்களுக்கு

சொர்க்கத்த நரகமதம் சும்ப(து)அடுத்த உலகம்!
சோசலிசம், இப்பிறவிச் சொர்க்கத்தையே நிறுவும்,
விஞ்ஞான, தேசப்பற்றே புதியஜன நாயகம்!
விலங்குகள் நிலவுடம்; ஏகாதி பத்தியம்!
—சமுக—ஏகாதி பத்தியம்!
...மக்களுக்கு

சுட்டவனும் இந்து! சுடப் பட்டவனும் இந்து!
சுரண்டல்காரன் கையில்தான் சாதிசமயப் பந்து!
கெட்டபயல நினைச்சிநாம கிடக்குறதா நொந்து?
கிளம்பிவாங்க இங்கமைப்போம் ஜனநாயகச் சிந்து!
—புதிய—ஜனநாயகச் சிந்து!

மக்களுக்கு அறிவே. விஞ்ஞான மருந்து!
வர்க்கவுணர்வ செலுத்தினாத்தான்
புதுவுலக விருந்து!—பாட்டாளி
வர்க்கவுணர்வ செலுத்தினாத்தான் புதுவுலக விருந்து!

★

தமிழகத்தில் 'மீனாட்சிபுர' மதமாற்றத்துக்குப் பின்பு
இன்னும் எதிர்வர்க்கச் சூடிபிடித்துக் கொண்ட மதம் மற்

படிப்பகம்

www.padippakam.com

றும் சாதிவெறிக் கொடுமைகளை அம்பலப்படுத்த அபினி யின் இடத்தில் மருந்தையும் விஷத்தின் இடத்தில் அறிவையும் முறையே சமூக உணர்வையும், பட்டாளி வர்க்க உணர்வையும் முன்னிறுத்த எழுதப்பட்ட பாடல். மெட்டு, அமைப்பு கொடுத்தது ஆக்கத் தூண்டியதும் அமைப்பே!

1. 'மதம், மக்களுக்கு அபினி'—காரல்மார்க்ஸ்!

2. இஸ்ரேலிலுள்ள கிறிஸ்தவ வெறிப்படையின் பெயர். இங்கு ஆர். எஸ். எஸ். அய் தூண்டிவிட்டு, நமது 'இந்து ஜனநாயக' அரசு 'மதச் சார்பற்ற' தாக நடிப்பதைப்போல அங்கு ஆயுதம் கொடுத்து அரபு மக்களைக் கொல்ல கத்தோலிக்கப் புற்றான இஸ்ரேல் அரசின் உடைய கருநாகம் தான், பாலங்கிஸ்டு! இக்கும்பல் தான் மேற்கு பெய்ரூட்டில் அடைக்கலம்புகுந்த அரபுமக்களின் அகதிமுகாம்களில் புகுந்து நூற்றுக்கணக்கானோரைப் படுகொலை செய்து வெறியாட்டம் நடத்தியது.

3. 'ஒவ்வொருவரும் அவரவரின் விருப்பப்படி எவ்வொரு மதத்தைப் பரப்புவதற்கும் அல்லது எவ்வொரு மதத்தைத் தவிர்த்து இருப்பதற்கும் அதாவது ஒவ்வொரு சோசலிஸ்டுக்கும் கண்டிப்பாக ஒரு நாத்திகவாதியாக இருப் பதற்கும் முழுக்க சுதந்திரம் உண்டு'—லெனின்.

'சோசலிசமும் மதமும்' கட்டுரையில்

4. 'இந்தியர்களோடும் எகிப்தியர்களோடும் வேலைப் பிரிவினை தோன்றியிருந்த கடின வடிவமானது, சாதி முறையை அரசிலும், மதத்திலும் நுழைத்த காலத்தில்,

படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றாசிரியர்கள், சாதி முறையானது கடினமான சமூக வடிவத்தை உண்டாக்கி விட்டது என்று நம்பி னார்கள்'

—மார்க்சும், ஏங்கல்சும்
'ஜெர்மானிய சித்தாந்தம்'

5. நாம் மதத்தை எதிர்ப்பவர்கள். நமது பொருள் முதல்வாதத்தின் அரிச்சுவடி அதுதான்! மார்க்சியத்தின் தொடர்ச்சி அதிலிருந்துதான்! ஆனால் மார்க்சியம் 'ஆனா ஆவனா'வோடு நின்று விடுவதில்லை'

—லெனின்
'மதத்தைப் பற்றிய உழைப்பாளர் கட்சியின் நோக்கம்' கட்டுரையில்!

6. இங்கு விஞ்ஞானவாள், சித்தாந்தப் போராட்டத்தைக் குறிக்கிறது.

7. 'கிறிஸ்தவம் விடுதலையை வாழ்க்கைக்குப்பிறகு, இறப்புக்குப் பின்னால் சொர்க்கத்தில் வைக்கிறது. சோசலிசம், இந்த உலகத்தில், சமூக மாறுதலிலேயே சொர்க் கத்தை வைக்கிறது'

—ஏங்கல்ஸ்
'கிறிஸ்தவத்தின் துவக்க வரலாறு'—கட்டுரையில்!

படிப்பகம்

www.padippakam.com

உலகப்பிச்சைக்காரியும்
உள்ளூர் மக்களும்

தனே தானானே தன்னானே தன்னான—தனோ
தனனானே தன்னானே தானானா

அட பாரததேசத்துப் பத்தினிநானு பாருங்க—எனக்குப்
பாம்பும்நாயும் வேணும் பிச்சை போடுங்க
...பாரததேசத்து

தன்னானே தானா—தனே
தன்னேதான தானா

மிக்குவிமானம் வேணும் !—நானு
ரசியாபோக வேணும் !
எப்புவிமானம் வேணும் !—நானு
அமெரிக்காபோக வேணும் !
ஜாகுவார்விமானம் வேணும் ¡—நானு
பிரிட்டீஸ்போக வேணும் !
மீராஜ்விமானம் வேணும் !—எனக்கு
பிரான்ஸ்போக வேணும் !

...அட பாரததேசத்து

அய்எம்எப்கடனு வேணும் !—நானு
ஆளப்பிடிக்க வேணும்
தவணைக்கடன் வேணும் !—கறுப்புச்
சட்டங்கள்போட வேணும் !

படிப்பகம்

www.padippakam.com

கட்டணஉயர்வு வேணும்!—நானு
கடன்விதிய ஏற்கவேணும்!
இந்தியமக்களா வேணும்?—எனக்கு
'ஈட்டிக்காரனே வேணும்!

...அட பாரததேசத்து

பிரஷ்னேவ்மாமா வேணும்!—நானு
பீரங்கிவாங்க வேணும்!
ரீகன்மாமா வேணும்!—இன்சாட்1
ரிப்பன்விட வேணும்!
தாட்சர் அத்தை வேணும்!—நானு
தாய்வீடுவிற்க வேணும்!
அன்னைபாரதம் வேணும்!—எனக்கு
அடகுவைக்கவே வேணும்!

...அட பாரததேசத்து

(பிச்சைக்காரிக்கு மக்கள் மறுமொழி)
ஆமா, பாரததேசத்து மக்கள், இளிச்ச வாயிகளா!
—பெருச்சாளி
பாம்பும்நாயும் கடிக்கஇந்திய சேயிகளா?
...பாரததேசத்து

மோதிலாலு பேத்தி,—சேல
மூவர்ணக்கொடி ஆச்சி!
மிசாக்காளி நாச்சி!—இப்ப
மிதவாதங்கள் போச்சி!
சஞ்சயபெத்த அம்மா!—ஒன்
சரித்திரம்இனி சும்மா
மாருதிகாருமாமி—அட
மக்கள்விழிக்கும் பூமீ!

...பாரததேசத்து

படிப்பகம்

www.padippakam.com

கலாச்சாரத் திருவிழா—லண்டன்
    காலநக்கிப் பிச்சை !
கன்னித்தன்மை பரிட்சை[2]—பிரிட்டிஸ்
    கவுர்மெண்டுவெச்சத நினைச்சே ?
அய்யாயிரம் கோடி—கடனில்
    அமெரிக்கஅடகு ஏண்டி ?
பாக்கிஸ்தான பேசி,—ரசியா
    படைச்செலவுத் தூண்டில் !

...பாரதேசத்து

ஆப்கனைக்கடிச்ச கரடி,—ரசியா,
    போலந்தபுடிச்ச கரடி !
பாசிசவெறி யானை,—மக்கள்மேல்
    பாயும் இந்திர யானை !
ஆசிய விளையாட்டுப் போட்டி,—அட
    அப்பு[3] யானைக் குட்டீ!
ஒலிம்பிக் கரடி ரசியா—நீங்க
    ஓடிப்பிடிச்சு வெட்டி!

—பாரத தேசத்து

பாதுகாக்க மாஸ்கோ,—கைப்
    பணத்துக்கு நியூயார்க்!
கூட்டுச்சேரா நாடு,—இதில்
    குலைநடுக்கம் வேறு!
தவணைக்கடன் வெள்ளைமாளிகை—போர்த்
    தளவாடம் கிரெம்ளின்மாளிகை!
வெள்ளைமாளிகை கிரெம்ளின்மாளிகை—எச்சி
    விருந்துக்குடெல்லிச் செங்கோட்டை!

—பாரத தேசத்து

படிப்பகம்

www.padippakam.com

ம்ாமாப்பய எல்லாம்,—இனி
மறைஞ்சிபோக வேணும்!
மரும்களோடு போதும்,—மக்கள்
மண்குடம்காக்க வேணும்!
உங்கப்பனோடு போதும்,—நீ
உட்காந்திருப்பது போதும்!
எங்கள் நிலம், நாடு—இனி
எங்களுக்கே வேணும்!

நிலப் பெருச்சாளி; பாம்பு; நாய்கள் ஆதிக்கம்!—பண்ணைப்
பிரபுக்கள்; பிரஷ்னேவ்; ரீகன் ஆதிக்கம்!—தரகு
துடைத்தெறிய இந்தியப் புரட்சி வர்க்கங்கள்!
—உயர்த்தும்
செங்கொடியில் விடுதலையின் சொர்க்கங்கள்!
இனி பாரததேசத்தில் புதியஜன நாயகம்!—மக்கள்
படைக்கப்போறோம் அந்தப் புரட்சிக் காவியம்!

*

இந்தியப் பிரதமர் 82இன் மத்தியில் கலாச்சாரத் திருவிழாவுக்காக பிரிட்டீசுக்கும், ஆகஷ்டில் அமெரிக்காவுக்கும், செப்டம்பரில் ரசியாவுக்கும் பல்வேறு யாசகம் கேட்டுச்சென்ற யாத்திரை பற்றியதே இப்பாடல். பல்லவி, படைப்பு மெட்டு. அனுபல்லவி, கரகமேளத்து மெட்டு.

1. அமெரிக்கக் கம்பெனியின் தொழில்நுட்ப உதவியோடு இந்தியா பறக்கவிட்ட செயற்கைக்கோளின் பெயர்,

படிப்பகம்

www.padippakam.com

இன்சாட். இது ஏழரை ஆண்டுகளுக்குப் பறக்கும் என்று நம்பப்பட்டு 150 நாளில் செயலற்றுப்போன செயற்கைக் கோள்.

2. சில ஆண்டுகளுக்குமுன் பிரிட்டிஸ் விமான நிலையம் இந்தியப் பெண்களுக்குக் கன்னித்தன்மைச் சோதனை செய்து 'பிரிட்டிஸ், இந்திய கலாச்சார' ஒற்றுமையை நிலைநிறுத்தியது. இதிலுள்ள ஒரு பெரிய ஆணாதிக்க அவமானம், இருநாடுகளுக்கும் பெண்களே, பிரதமர்கள்.

3. கோடிக்கணக்கான ரூபாயைக்கொட்டி நம்து நாடு நடத்தப்போகும் ஆசிய விளையாட்டுப் போட்டியின் சின்னம் 'யானை'! அதற்குப் போஸ் கொடுக்க விலைக்கு வாங்கப் பட்ட யானைக்குட்டியின் பெயர் அப்பு! நம்து அசோகச் சக்கரத்தை மூன்று சிங்கங்கள் உருட்டியது போதாதென்று 'அப்பு' வேறு வந்திருக்கிறது. (முன்பு ரசியாவில் நடந்த ஒலிம்பிக்கின் சின்னம், கரடி! நம்து இரு நாடுகளுக்குமான 'சமாதான ஒற்றுமை', இச்சின்னங்கள்)

படிப்பகம்

www.padippakam.com

ஆந்திரத்துப் புரட்சிக்கவி

தானனானே தந்தானனே—தனே
தன்னனானே தானானனே
தானதானே தந்தானனே—தனே
தானேதன்னே தன்னானனே

ஆந்திரத்துப் புரட்சிக்கவி—மக்கள்
ஆயுதப்போர்த் தீப்பொறி!
தெலுங்கானாவின் பேனாக்கத்தி,—அதைச்
சாணைப்பிடிச்ச செரபண்டராஜு!

ஆந்திரத்து...

ஏழையுழவர் குடும்பத்திலே—தொள்ளு
ஆயிரத்து நாற்பத்நாலில்
பாடப்பிறந்த மக்கள்கவி—அவர்
பாட்டாளிகளின் புரட்சிக்குயில்!
திகம்பரக் கவிக்கூட்டத்தில்—முன்பு
சேர்ந்திருந்த கோபக்கவி!
பிரளயத்தை வரவேற்கவே—புரட்சிப்
போனாக்காரர் சங்கம்கண்டார்!
தெலுங்கானாவின் போராட்டத்தை—டாங்கே
திரிபுவாதிகள் அடகுவைக்க
சிவப்புரத்தம் அம்பதிலே!—அது
சிரிகாகுளத்தில் எழுபதிலே!
சுப்பாராவ் பானிக்கிரகி—இன்னும்
சிவசாகர் கவிஞர்வழி,
அப்பநடந்த போராட்டத்தை—இப்ப
'அடிலாபாத்' வரை சொன்னகவி!

ஆந்திரத்து...

படிப்பகம்

www.padippakam.com

எழுபத்தொன்னில் தடுப்புக்காவல்—சிறை
இருந்துபின்னர் விடுதலை!
செகந்திராபாத் சதிவழக்கு;—மிசா
சிறைபிடித்தது மறுபடிக்கு!
உலகத்தெலுங்கு மாநாட்டையே—அவர்
உரக்க எழுந்து எச்சரித்தார்!
ஆந்திரமக்கள் வரிப்பணத்தை—மொழி
ஆற்றில்போடக் கூடாதென்றார்.
அரசை எதிர்த்தார்: குற்றஞ்சாட்டி—எழுபத்(து)
அஞ்சிலேயும் விலங்குமாட்ட
பத்துவருசம், வழக்குஜெயில்!—அவர்
பயப்படாத வீரஒளி!
இந்திராவும் மொரார்ஜியும்—கொடும்
இருண்டகாலமும் 'சுதந்திரமும்'
மிசாவுடைத்த சூரியனை—ஜனதா
மேகம்கூட சிறையில்வைக்க
சித்திரவதைச் சிறைகளிலும்—சிவப்புச்
சிறகைவிரித்த புரட்சிப்புயல்!
எழுகதோழா எழுகவென்று—சிறை
இரும்புக்கம்பியைத் துளைத்தகுரல்!

ஆந்திரத்து...

ஆசிரியத் தொழிலைக்கூட—ரெண்டு
அரசாங்கமும் பறித்துப்போக,
உழவர் தொழி-லாளியுடன்—புரட்சி
உழைப்புக்குள்ளே நேசமாக!

8

படிப்பகம்

www.padippakam.com

வறுமைநோய்ப் பிணியும்வந்து—அவை
வாலாட்ட முடியவில்லை!
சஞ்சலம்தலை வலிகள்வந்தும்—அவர்
சமூகநோய்க்கே மருந்துபோட்டார்!
சினிமாச்சந்தைப் பேர்வழிகள்—எங்கள்
சிங்கம்காலில் விழுந்திருக்க
சமரசத்தைச் சகிக்கவில்லை,—அவர்
சரித்திரத்தில் இடமேயில்லை!
மரங்க தூங்க விரும்பினாலும்—அதை
மக்கள்காற்று விட்டிடுமோ!
படகுதூங்க விரும்பினாலும்—அதை
பாட்டாளிகள் அலைவிடுமோ!
ஓட்டுப்பொறுக்கி ஜனநாயகம்—நம்ம
ஊரைஏய்க்கும் நாயிகளை
உடனே அனுப்பு, கசாப்புக்கு—என்று
ஓங்கியடித்தார் மரணஅடி!

ஆந்திரத்து...

நான்குமலைகளை இடிக்கச்சொன்னார்—அவை
'நம்ம'நிலப் பிரபுமலை,
தரகுமுத—லாளிமலை;—பிரஷ்னேவ்
திரிபுமலை, ரீகன்மலை!
புதியஜன நாயகத்தில்,—தியாகம்,
போர்க்குணம்; அரசியலில்,
புடம்போட்ட புரட்சியாளன்;—சிவப்புப்
போராளிகள் முன்னோடி!

படிப்பகம்

www.padippakam.com

பாம்புப்புற்றுப் பாசிசத்தின்—அதன்
பல்லைப்புடுங்க சிந்திச்சதால்,
போராட்டமே வாழ்வானதால்—மூளைப்
புற்றுவந்த தியாகியானார்!
புரட்சிகரப் பண்பாட்டின்—ஒரு
போர்தள—பதிராஜு!
மக்கள்ஜன நாயகத்தின்—பேனா
மையுறைந்தது எண்பத்ரெண்டு!

ஆந்திரத்து...

மரணதேவன் காலில்கூட—அவர்
மண்டியிட்டுப் பணியவில்லை!
உதடுசொன்ன ஒரேவார்த்தை—அது
'யுத்தம்யுத்தம் மக்கள்யுத்தம்'
...யுத்தம்நீண்ட மக்கள்யுத்தம்,—தியாக
ரத்தத்தோழர் ஆயுதம்!
புத்தம்புத்தம் புதியயுத்தம்—நம்ம
புதியஜனநா யகயுத்தம்!

★

இந்தியப் புதிய ஜனநாயகப் போராளியும், ஆந்திரப் புரட்சிக்கவியுமான தோழர் செரபண்டராஜு 7-2-82இல், சிவப்பு மரணமுற்றார். அந்த புரட்சியாளனுக்கான அஞ்சலியே இப்பாடல். கரகமேளப் பாடலான 'சாலநல்லாக் கடந்துவாடி புள்ளே—சந்தைப்பேட்டை தாண்டிவாடி' என்பதின் மெட்டு.

படிப்பகம்

www.padippakam.com

1. ஆதிவாசிகளின் வீரஞ்செறிந்த போராட்டம் பொங்கி வெடித்த ஆந்திர மாவட்டத்தின் பெயர். இங்குள்ள இந்திரவள்ளிக் கிராமத்தில்தான் தென்மாநிலங்களில் முதன் முறையாக தங்கள்மீது நாட்டுப்புலிகள் நடத்திவந்த சுரண்டலை எதிர்த்து ஆதிவாசிகள் செங்கொடி ஏந்தினர். 81 ஏப்ரலில் அஞ்சய்யாவின் துப்பாக்கிக்குண்டுகளால் அய்ம்பதுக்கும் மேற்பட்ட ஆதிவாசிப் போராளிகள் குருதி சிந்தித் தியாகிகளாகப் புரட்சிகர வெளிச்சம் காட்டுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

விடுதலைப் புலிகள்

ராகம்; ஹரிகாம்போஜி தாளம்: ஆதி

தானன தனனே—தனனே
தன்னன தானே

விடுதலைப் புலிகள்—வருகிறோம்
விடுதலைப் புலிகள்!—இந்தக்
கொடுமைகள் சகியோம்!—செங்
கொடியின்கீழ் திரள்வோம்!

விடுதலைப் புலிகள்...

மலையகம்; யாழ்ப்பாணத்தில் மாதத்துக்கும் ஒருகொலை?
'மாங்குளம்' ரயிலுக்குள்ளும் இராணுவத்தால் உயிர்க்
கொலை!
வல்லவத்தை, கொழும்புநகர் வேகந்தை' மக்கள்கொலை!
'மட்டக்கடை' உயிர்வெட்டும் ஜெயவர்த்தனா ஆட்டுக்-
கடை!

விடுதலைப் புலிகள்...

விசாரணை என்ற பேரில் வீசியெறிந்த இளைஞர் உடல்!
வீதியிலே நடமாடவும் விசனப்பட்ட மக்கள் உயிர்!
ஆசார ஆளும்வர்க்கம், 'அகிம்சை சரணம் கச்சாமி!
ஐந்நூறுபேர் ரத்தம்குடித்த அராஜக ஆசாமி!

விடுதலைப் புலிகள்...

படிப்பகம்

www.padippakam.com

சைக்கிளிலே போனசலவைத் தொழிலாளி சுட்டபிணம்!
சந்தியிலே கொன்றதய்யா, அழுக்குக்குணம் காக்கிநிறம்!
உறங்கிக்கொண் டிருந்தஒருவர் உயிருக்கும் குண்டுவிழும்!
உறக்கமே கலைந்துவிட்டால் ஒடுக்குமுறைத் தடிகள்
விழும்!
விடுதலைப் புலிகள்

சின்னஞ்சிறு பாலகரும் பெண்களோடு முதியவரும்
சிப்பாய்கண் பட்டாலோ துப்பாக்கிப் பலிகிடாக்கள்;
அன்னம்தரும் சத்திரத்திலும் அலைகடல் மணல்பரப்பிலும்
இன்னும்மா விழுகுவது இனவெறியிலே வர்க்கப்பிணம்?
விடுதலைப் புலிகள்

மாஸ்கோவில் மழைபெஞ்சா மதுரையிலே குடைபிடிப்பான்!
மதுரையில் இடிவிழுந்தா மவுனவிரதம் கடைபிடிப்பான்!
ஆஸ்தானம் சொல்லுச்சுன்னா அகிலஉலகப் பெருங் கோஷம்!
அந்தாத்தான் ஈழமிருக்கு! அதுஇல்லையா சருவதேசம்!
விடுதலைப் புலிகள்

கொல்லுறான்; குத்துறான், கேக்கவில்லை ஒருபயலும்!
கொண்டாட்டம்; உலகத்தமிழ்'கூத்துக்கள் அனுதினமும்!
சுள்ளுன்னு வைக்கிறான் 'தமிழினமாம்' சந்தைக்கடை!
சுருட்டுற ஓட்டுக்குத்தான் தன்மானம் எடைக்குஎடை!
விடுதலைப் புலிகள்

புலிவருது; புலிவருது, பொய்யல்ல படைவருது!
பொல்லாத அதிகாரப் பேயைக்கொல்ல புலிவருது!
கொஞ்சம்பதுங்க விடுதலைக்குக் குகைபூரா உலகமய்யா!
கொன்றுபோட்ட தருமபுரிக்குள்ளநரியா உதவுமய்யா!
விடுதலைப் புலிகள்

படிப்பகம்

www.padippakam.com

செட்டிப்பய தமிழன்னாலும் 'ஜெயவர்த்தக' தேர்தல்
கொடை!
சிங்களன்னாலும் உழைப்பவன் தான், சேந்துக்க நம்ம
படை!
கொட்டுப்பட பார்லிமென்ட்டுகூட்டுவாத ஓட்டுவேட்ட !
குளுப்பாட்ட தீவுக்குக் கொழும்புஎண்ணெயா? பூட்டு,
கேட்ட!

...விடுதலைப் புலிகள்—வருகிறோம்
விடுதலைப் புலிகள்

*

70முதல் இது வரை இலங்கையில் நடந்த படுகொலைக்குக் காரணமான அங்குள்ள பாசிச அரசை எதிர்த்து உண்மையான விடுதலைப் புலிகள் எப்படி எழவேண்டும் என்பதுதான் இப்பாடலின் மையக் கருத்து. இசை படைப்பு மெட்டு.

படிப்பகம்

www.padippakam.com



மக்களுக்கே அதிகாரமே

ராகம் சிவரஞ்சனி　　　　　　　　　　தாளம் ரூபகம்

தானானே தானனே தனனானே தானனே
தன்னானே தானே தன்னா

போராடிப் பெறுவதே புதியஜன நாயகம்
மக்களுக்கே அதிகாரமே!—பாட்டாளி
வர்க்கத்துக்கே வருங்காலமே!
போராடிப்பெறுவதே

போராடும் வழியிலே புத்தர் ஏசு காந்திகள்
பொய்வேஷம் போட்டுநிப்பானே—நம்மைப்
புரட்சிக்குமுன் வழிமறிப்பானே—அவன்
ஊரோடு வாழும் உபதேசம் அளப்பான்!
ஒத்துக்காதே வாதோழனே!—புது
உலகைக்காண லாம்தோழனே!
...போராடிப் பெறுவதே

வானோடு விமானம் கடலோடு கப்பல்
வட்டிக்குத்தான் கடன்கொடுப்பானே!—அவன்
வார்த்தை உலக சமாதானமே—நம்மல
வீணான போருக்கு வெறியாக்கி விடுவான்
வெளிறிப்போன ரசியாக்காரனே—அவன
வெறுங்கையாய் அனுப்பிவெப்போமே!
...போராடிப் பெறுவதே

படிப்பகம்

www.padippakam.com

வேனான வெயிலிலே மொட்டைமரம் போலவே
வெள்ளைடாலர் அமெரிக்காவே—அவன்
விதிபோட்டு நிதிதருவானே—கடன்
கோடானு கோடியாய் கொடுக்கிற அய். எம். எப்பு
கொள்ளையிட புறவாசலே—அவன
கொடுத்ததோடு போகச்செய்வோமே!
...போராடிப் பெறுவதே

பாழான பின்னரும் பாட்டாளி என்பான்
பத்துஅஞ்சுக்கு ஓட்டுக்கேப்பானே!—எலக்சன்
பார்லிமெண்டு சிவப்புத்துண்டனே!—அவன்
ஆளான திருடன், அநியாயப் புளுகன்
அமைதிவழிப் புரட்சிக்காரனே—அவன
அடையாளம் கண்டுகொள்வோமே!
...போராடிப் பெறுவதே

ஏமாந்த நாடகம் இரட்டைவேட ஆட்சியில
இரத்தத்தின் ரத்தம்சிந்துதே—தருமபுரி
இரும்புக்கரச் சொட்டுசொல்லுதே—இதைக்
காணாமல் இருளென்று கண்மூடச் சொல்லுவது
கட்சி ஓட்டுப் பொறுக்கிகளே—அவன
கண்டதுண்டம் ஆக்குவோமே!
...போராடிப் பெறுவதே

கூனாமல் நிமிர்ந்து கோணாமல் உயர்ந்து
குறிபார்த்து நாம்நிற்போமே!—எதிரிக்
கூடாரத்தின் குணம்சொல்வோமே!—புரட்சியை
அண்ணாந்த மக்களே ஆயுதம் தரிக்கட்டும்!
'அம்பைஎடுத்து வில்லில் தொடுப்போம்!—நாம
வில்லைமட்டும் வளைத்துக் கொடுப்போம்!'
...போராடிப் பெறுவதே

புதியஜன நாயகம்!

★

படிப்பகம்

www.padippakam.com

புரட்சியை மக்கள் நடத்த வேண்டும். முன்னோடிகள் அவர்களுக்கு வழிகாட்டவேண்டும் என்பதை வலியுறுத்தப் பிறந்ததே இப்பாடல். இசை உதவி நண்பர் நீலமேகம். [1]'ஹூனான் உழவர்இயக்க ஆய்வுபற்றிய அறிக்கை'யில்— தோழர் மாவோ குறிப்பிட்ட 'விவசாயிகளின் சொந்த விருப்பத்திற்கு மூடநம்பிக்கை மற்றும் தீயபழக்கவழக்கங் களை ஒழிப்பதற்கு விடவேண்டும். உத்திரவிடவோ அவர் களுக்காக தாமே செய்யவோ கூடாது, என்ற கருத்துக்கு அவர் பயன்படுத்திய வில்வித்தை அறிவுரை தான் இது;

'எய்யாமல் வில்லைமட்டும் வளைத்துக்கொடு.

செய்யும்விதத்தை மட்டும் காண்பி'

படிப்பகம்

www.padippakam.com

வெள்ளச்சாமி

மதுரைமாவட்டம் சோழவந்தானுக்கு அருகிலுள்ள மேலக்கால் கிராமத்தைச் சேர்ந்தவர் வெள்ளைச்சாமி. இவர் சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குப் பக்திசிரத்தையோடு சென்றவர், தவணை நாள் முடிந்தும் வீடுதிரும்பவில்லை இதற்கிடையில் அங்கே திவிபத்து நடந்திருந்ததாலும் ஒருவர் ஓம்குண்டத்தில் பாய்ந்து இறந்திருந்ததாலும் இரண்டில் ஒன்றில் கணவர் சிக்கிச் செத்திருப்பார் என்று கருதிய அம்மா பிள்ளை என்ற பெயருடைய அவர் மனைவி, கருமாதிச் சடங்கு நடத்திக் கொண்டிருந்த பொழுது வெள்ளைச்சாமி திரும்பிவந்தார்.

தினத்தந்தி 31/1/83

வீடுவந்து சேர்ந்த கணவர் வெள்ளைசசாமியைப் பார்த்து மனைவி அம்மாபிள்ளை பாடுவதாக அமைந்த பாடல்.

தன்னானே தானானே தனனானனா—தன்னே
தானானே தன்னானே தானேனனா

அய்யப்பன் பறிச்சான்னு நினைச்சிருந்தேன்—மச்சான்
அய்யோப்பா மாரடிச்சேன் வெள்ளச்சாமி—இப்ப
அதுக்குள்ளே வந்துவிட்டே வெள்ளச்சாமி—நல்ல
ஆளப்பா எம்புருசா வெள்ளச்சாமி!

இருமுடின்னு கட்டிவிட்டேன சபரிமலைக்கு—மச்சான்
ஏம்புள்ளய மொட்டையடிச்சேன் வெள்ளச்சாமி—அடே
கருமாதிக்கு வந்தவனே வெள்ளச்சாமி—மஞ்சக்
கயித்தையும் அடகுவெச்சேன் வெள்ளச்சாமி!

படிப்பகம்

www.padippakam.com

தண்ணிக்கஷ்டம் தாங்காம நான்வறண்டேன்—மச்சான்
தவளச்சொம்ப கவுத்துட்டியே வெள்ளச்சாமி—வீடு
கரண்டுகட்டால் இருளடைஞ்சது வெள்ளச்சாமி—அதுக்கா
காணாம போனியாடா வெள்ளச்சாமி!

காளமாட்ட நம்பிஎனைக் கூட்டிப்போனே—மச்சான்
கண்டுக்காம ஓட்டுப்போட்டேன் வெள்ளச்சாமி—இப்ப
காரவீடு கூரவீடா வெள்ளச்சாமி—வவுத்துக்
கஞ்சிக்கு லாட்டரி வெள்ளச்சாமி!

சூரியன்னு வருவான்னு கூட்டிப்போனே—மச்சான்
சொரணையின்றி ஓட்டுப்போட்டேன் வெள்ளச்சாமி!
—ஓட்டுக்
கூரவீடு குடிசையாச்சே வெள்ளச்சாமி—நம்ம
கூழுக்கும் ஆபத்து வெள்ளச்சாமி!

வாத்தியாரு வேணுமினு கூட்டிப்போனே—மச்சான்
வக்கில்லாம ஓட்டுப்போட்டேன் வெள்ளச்சாமி—நம்ம
குடிசையை இடிச்சுப்புட்டான் வெள்ளச்சாமி—அதனால்
குழந்தைக்குச் சத்துணவு வெள்ளச்சாமி!

காக்கான்னு தேக்கான்னு கூட்டிப்போனே—மச்சான்
கவ்வுச்சுடா நரிவடைய வெள்ளச்சாமி—உனக்கு
நோக்காடா நொடியாடா வெள்ளச்சாமி—தேர்தல்
வாக்கரிசி போடவெச்சே வெள்ளச்சாமி!

செங்கொடிக்குக் குத்துன்னு கூட்டிப்போனே—மச்சான்
சிகிச்சைக்கு மாஸ்கோபோனியா வெள்ளச்சாமி—தாம்
பங்குக்கு ஓட்டுப்பொறுக்கி வெள்ளச்சாமி!—அந்தப்
பன்றித்தொழுவம் நம்பாதேடா வெள்ளச்சாமி!

படிப்பகம்

www.padippakam.com

சாதிகாரன் காப்பான்னு கூட்டிப்போனே—மச்சான்
சண்டையிலே அடிமிச்சம் வெள்ளச்சாமி—சபரி
அய்யப்பன் காப்பான்னு கூட்டிப்போனே—பித்தள
அண்டாவ வித்துப்புட்டே வெள்ளச்சாமி

ஒருலட்சம் லாட்டரிக்குக் கூட்டிப்போனே—மச்சான்
ஒத்திவெச்சேன் ஒருமூக்குத்தி வெள்ளச்சாமி!—ஊரு
சாராயக் கடைக்குப்போனே வெள்ளச்சாமி—கம்மல
சயரோகம் தின்னுட்டுடா வெள்ளச்சாமி!

மூகாம்பிகை கோவிலுக்குக் கூட்டிப்போனே—மச்சான்
முதலமைச்சர் தெய்வம்அவ! வெள்ளச்சாமி!—வேண்டித்
திருப்பதிக்கு மொட்டையடிச்சே வெள்ளச்சாமி!—என்.டி.ஆர்
தேர்தலுக்கே உதவுச்சுடுடா வெள்ளச்சாமி!

நாகப்பட்டண வேளாங்கண்ணிக்கு கூட்டிப்போனே
—மச்சான்
நாகூருக்கும் விசிட்டுபண்ணே வெள்ளச்சாமி!
—அடே
ஆகமொத்தம் முட்டாப்பய வெள்ளச்சாமி—நமக்கு
ஆகவேண்டியத மறந்துட்டே வெள்ளச்சாமி!

அரிசிப்பருப்பு புளிமிளகா விலைஏத்தம்—மச்சான்
அடுப்புக்கரிக்குக் கிராக்கியடா வெள்ளச்சாமி—குடிக்கப்
பைப்புத்தண்ணி கியூவரிசை வெள்ளச்சாமி—ராத்திரி
பல்புக்கும் பேதியடா வெள்ளச்சாமி!

பூண்டுவாங்க ரோட்டுக்குப் போனாக்கூட—மச்சான்
போலிசு சரியில்லே வெள்ள்ச்சாமி—தெனம்
சிலுக்கோ சிலுக்குங்கறான் வெள்ளச்சாமி—ஊரு
சின்னப்பயல கெடுத்துப்புட்டான் வெள்ளச்சாமி

படிப்பகம்

www.padippakam.com

விறகுவாங்க கடைக்குப்போனே காலையிலே—மச்சான்
வெண்மணிக்குப் போங்கறான் வெள்ளச்சாமி—முளகா
கடுகுவாங்க கடைக்குப்போனே வெள்ளச்சாமி!—மண்டைக்
காட்டுக்குவா பொறிக்கேங்கறான் வெள்ளச்சாமி

வத்தல்வாங்க கடைக்குப்போனே சாந்திரத்தில்!—மச்சான்
வாகைக்குளம் வாங்கறான் வெள்ளச்சாமி—சமைக்க
ஒத்தபடி அரிசிவாங்க வெள்ளச்சாமி—என்ன
உயிரோடு திம்பேங்கறான் வெள்ளச்சாமி

மண்ணெண்யிக்குக் கடைக்குப்போனே ராவுலே—மச்சான்
முக்கோணம் நாலணாவாம் வெள்ளச்சாமி—பொறிக்க
கடலெண்யிக்குக் கடைக்குப்போனே வெள்ளச்சாமி—கருக்
கலைப்பு சட்டப் பூர்வங்கறான் வெள்ளச்சாமி

வேப்பங்குச்சி மரமில்லே, பட்டுப்போச்சி! மச்சான்
விளக்குமாறு பல்பொடித்திட்டம் வெள்ளச்சாமி!—இங்க
மழைதண்ணிக்கு துப்புஇல்லே வெள்ளச்சாமி—குன்னக்குடி
வயலீனு வாசிக்கிறான் வெள்ளச்சாமி

சட்டிப்பான பூனைகபடி விளையாட்டு—மச்சான்
சங்கராச்சாரி பவளவிழா வெள்ளச்சாமி—நாட்டில்
இருப்பவனே பேசமுடியலே வெள்ளச்சாமி—இதுல
இந்திஎதிர்ப்பு தியாகிவிழா வெள்ளச்சாமி

வாயப்பொத்தி ஊர்வலமாம் மதுரையிலே—மச்சான்
வசமானஅடி நீதிபதிக்கு வெள்ளச்சாமி—பலகைத்
தாயமாதிரி உருட்டிப்போட்டான் வெள்ளச்சாமி—போலீசு
தரும்புரி இளசுகளை வெள்ளச்சாமி

(இப்படி)

படிப்பகம்

www.padippakam.com

அடிமேல அடிவாங்கி நான்கிடக்குறேன்—மச்சான்
ஆறுதலுக்கு இல்லாம வெள்ளச்சாமி—நீ
ஊருமேய போனாயாடா வெள்ளச்சாமி—நல்லவேள
உயிரோடு வந்தியடா வெள்ளச்சாமி!

இனிமேல சாகாதடா எம்புருசா—மச்சான்
எருமைத்தோல உரிச்சுப்போடு வெள்ளச்சாமி—நீ
விரும்பினாலும் விரும்பாட்டியும் வெள்ளச்சாமி—பூமி
விடிஞ்சிகிட்டே வருவுதடா வெள்ளச்சாமி

உருப்படியா நில்லுடா பக்கத்திலே—மச்சான்
ஊருலக மாத்திப்புடுவோம் வெள்ளச்சாமி!—நம்ம
உழைக்கும்ஜனம் ஒண்ணுசேர வெள்ளச்சாமி—அதுக்கு
உழைக்கவேணும் நாம்எல்லாம் வெள்ளச்சாமி

புதுஉயிரு தரிக்கவேணும் உடலுக்குள்ளே—மச்சான்
போராட்டத்தில் மரிக்கவேணும் வெள்ளச்சாமி—இனி
அநியாயமா நிக்காதேடா வெள்ளச்சாமி—நாளக்கி
ஆளப்போற ஜனம்நாம வெள்ளச்சாமி!

★

இதற்கான இசை, முந்திய தொகுதியான 'திசை தெரிந்த அம்புகளில்' வரும் 'கம்மாக்கரைப் பக்கத்திலே' என்ற பாடலின் மெட்டு. மேற்கண்ட பாடல்தான் பாடல் வகைகளைச் செய்வதில் வெற்றிகரமான உந்துதலைக் காட்டியது. அக்காலங்களில் ஒவ்வொரு மேடையிலும் தபேலா மற்றும் நாவாலேயே தாளமிட்டு, புல்லாங்குழல் மற்றும் ஆலோசனையால் உறுதுணை செய்த கல்லூரி நண்பர்கள் முறையே லிவ்விங்ஸ்டன், இராஜகோபால் இருவரும் நினைவுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்!

படிப்பகம்

www.padippakam.com

அரேபியாவுக்கு

ராகம்: மாயமாளவகௌளை தாளம்: ஆதி

தனனேனா தானனானே—தானன்னா தன்னே

அரேபியாவுக்குப் போகச் சொன்னாயே—என்னம்மா என்னை
ஆளுயர வளர்த்துவிட்டு ஆசைமகனைப் பிரிந்துவாழ
அரேபியா

பிறைநிலவைக் காட்டிக் காட்டிப்
புன்னகிக்கும் வாழ்வு என்றாய்!
பிள்ளைக்கு வேலைகிடைக்க
வில்லையென்றால் 'போ' என்றாய்!
பிழைக்கஇங்கு வழியில்லையா?
உழைக்கும் ஜனங்கள் நாமில்லையா?
அரேபியா

பத்துமாதம் சுமந்தவளே
பாலூட்டி வளர்த்தவளே!
பட்டினியைச் சுமந்துதானே
பாலகனும் வளர்ந்துவிட்டான்!
அங்கேயும் வெயிலுஅடிக்கும்!
ஆகமொத்தம் ஒண்ணம்மா!
அரேபியா

படிப்பகம்

www.padippakam.com

ஓடிவா நிலாஎன்று
    ஓராயிரம் கதைசொன்னாய்!
ஓடிவரா நிலவைக் கண்டு
    ஓடச்சொன்னாய் மகனைஇன்று!
நிலவையென்ன சூரியனையே
    நேரில்நிறுத்துவோம் நாங்களம்மா!

அரேபியா...

'கழுதையையும் காலைப்பிடி'—
    கையைப்பிடித்துக் கற்றுத்தந்தாய்!
பிடித்ததுநான் கழுதையிடம்
    பின்னங்கால் உதையம்மா!
எந்தக்கழுதையும் உதைக்கும்அம்மா!
    இடத்தைப்பொறுத்தது அல்லஅம்மா!

அரேபியா...

கோவில்குளம் குலதெய்வங்கள்;
    கோடிமந்திரம் சொல்லித்தந்தாய்!
கோடாங்கி குறிசொன்னால்
    கொம்மாளம் போட்டுக்கொண்டாய்!
ஜோசியனே இங்கேஇருக்க
    ஆசைமகனா அங்கேபோக?

அரேபியா...

திரைகடல் ஓடுஎன்றாய்!
    திரவியம் தேடுஎன்றாய்!
மண்ணைவிட்டு ஓடுஎன்று
    மறைமுகமா அன்றேசொன்னாய்!
சொந்தநாட்டில் என்னகுறை?
    சொன்னதுண்டா ஒருமுறை?

அரேபியா...

8

படிப்பகம்

www.padippakam.com

தங்குடும்பம் வாழனுன்னு
　　தலைதெறிக்கக் கூடாதம்மா!
சமுதாயத்த மாத்திப்புட்டா
　　தானேவாழும் குடும்பமம்மா!
இங்கேஒரு முடிவுவராம
　　எங்கப்போயும் நரகம்மம்மா!
அரேபியா...

ஊரைவிட்டுப் போனவங்க
　　உழைக்கும்நேரம் குறையவில்லை!
உரிமைஅதி காரமில்லை!
　　உதவிக்குஅங்கு யாருமில்லை!
உலகமுழுக்க போராட்டத்தீ,
　　ஒருமூலையிலும் அணைவதேஇல்லை
அரேபியா...

கோடிரூபா கடன்கொடுத்து
　　கூடவெடி மருந்தும்கொடுத்து
ராக்கெட்டையும் விட்டுப்புட்டு
　　ராத்திரிக்குள் விழுகு(து)என்று
ஆளைஏய்க்கும் ஏகாதிபத்தியம்
　　அவனைவிட்டு நானாபோகணும்?
அரேபியா...

வெளியூரு துட்டுப்போட்டு
　　உள்ளூரு துண்டுவிரிச்சு
விபரமான முதலாளி
　　வேர்வையைவிழுங்கும் தரகன்களையும்
ஓட்டுப்பொறுக்கித் தலைவன்களையும்
　　நாட்டவிட்டுக் கிளப்புமுன்னாலே
அரேபியா...

படிப்பகம்

www.padippakam.com

நம்மூரு தருமகர்த்தா
　　நாட்டாமை பஞ்சாயத்து;
கூலியுழவரைச் சுரண்டித்துவைத்துக்
　　கொடியில்போடும் பண்ணைமாரை
நாடுகடத்தும் முன்னாலே
　　நாயைத்துரத்தும் முன்னாலே

அரேபியா...

இந்தியாவை விட்டுஎல்லா
　　எதிரிகளை அனுப்பிவிட்டு
உழைக்கும் மக்கள் அதிகாரத்தை
　　உயிரைக்கொடுத்துப் படைப்போமம்மா!
என் தகப்பன் தொழிலாளி!
　　என் தாயி விவசாயி!
...புரட்சிபெற்ற பிள்ளைகளே—நாங்களம்மா—புதிய
　　ஜனநாயகப் போர்ப்படையில்
　　மக்கள் தாயாய்ச் சேரம்மா!

★

ஒருதாய் தன்மகனை இங்குஇருக்கிற நிலைமை பொறுக்காமல் பணம் சம்பாதித்துக்கொடுக்க 'அரேபியா போய்வா' என்கிறாள். அவளுக்கு மகன்கூறும்] பதிலே இப்பாடல். மகஇக இசைக்குழு பொறுப்பாளர் தோழர் வீரமுத்து வழங்கியமெட்டு.

படிப்பகம்

www.padippakam.com

உலையிலே தீப்பிடிச்சது!

ஆக்கம்: ஆந்திரப்புரட்சிக்கவி
செரபண்டராஜு

தன்னானே தனனனானே
தானானே தன்னேனானே
தனனானே தானேன்னானே
தன்னே னான தானன தன்னே
தானே னான தன்னேன தன்னே

உலையிலே தீப்பிடிச்சது!
ஊதாங்குழல் காத்துகொதிக்குது!
நிலைமையும் நல்லாஇருக்குது!
தீயை அணைய விடாதே சுப்பண்ணே!
நாளக் கடத்தாம் எந்திரி இப்பண்ணே!

அண்டைவீட்டு விவசாயீ;
அதிகாலையில் ஏருதூக்கி
குன்றுகுழி நிலம்பிளக்கிறான்
பண்டாரம் போல தூங்காதே சுப்பண்ணே!
பருவம் போனா பயனில்லே அப்பனே!

அண்ணாந்த பயிருக்கெல்லாம்
அடிவேருல உரம்போடணும்!
ஆளுக்கொரு வீடெழுப்பணும்!
ஒட்டச் சக்கரம் உதவாது சுப்பண்ணே!
ஓரம் எஃகுப்பட்டை மாட்டணும் நண்பனே!

படிப்பகம்

www.padippakam.com

வடக்கிருந்து இடியோசை!
வானம்பூரா வசந்தமேகம்!
வந்துபாரு சிவப்புமின்னல்!
கலப்ப உழவுக் கருவிஸ்யச் சுப்பண்ணே!
கத்தியைப் போல தீட்டணும் உடனே!

கம்மங்கஞ்சி, கீரத்துவையல்;
கலயத்தையும் அறுவ்டைபோல்
கழுகுகாக்கை கொத்தத்துடிக்குது!
கையில் எடுபரண் வலையைச் சுப்பண்ணே!
கவுணு கல்லால் தலையில் போடுண்ணே!

உலக்கப்போல ஓம்பிள்ளைக;
ஒருகாசுக்கும் உதவாக்கரைங்க!
உடலுக்குப் பகலில் தூக்கமா சுப்பண்ணே?
உழவர் புடைக்கு ஆயுதம் செய்யுண்ணே!

ஓட்டுரிமை வய்சுவந்த
ஓம்மக ராமாயிக்கு
நாட்டிலொரு கல்யாணமில்லே!
வீட்டில் தட்சணைக் காசில்லே சுப்பண்ணே!
வேர்வையைத் தவிர வேறென்ன மிச்சமே!

சட்டம்வந்து விட்டதென்றான்!
பட்டாநிலம் போட்டாச்சென்றான்!
பண்ணையிலே போயிப்பாத்தா,
கால வெச்சதும் மறுகணம் சுப்பண்ணே!
காவல் நாயிக விரட்டுது! ஏன்அண்ணே?

படிப்பகம்

www.padippakam.com

குத்தகைப்பணம் வாங்குபவன்
அக்கிரம்மா என்னைப்பாக்க,

வட்டிப்பணம் வசூலிப்பவன்
வக்கிரம்மாஎன் பெண்ணைப்பாக்க,

பெட்டிப்பாம்பு அரசாங்கம்—நிலப்
பிரபுகளை இன்னும்பாக்க

கோதா வரியில் முழுகாதே சுப்பண்ணே!
கொள்கை வகுத்துப் போராட நில்லு அண்ணே!

...உலையிலே தீப்பிடிச்சது!
ஊதாங்குழல் காத்துகொதிக்குது!
நிலைமையும் நல்லாஇருக்குது!
தீயை அணைய விடாதே சுப்பண்ணே!
நாளக் கடத்தாம் எந்திரி இப்பண்ணே!

சாங்காலம் இருட்டலே! சோம்பாதே அண்ணே!
சாணைப் பிடி,ஏர் மண்வெட்டி அண்ணே!
வாழ்க்கைப் போராட்டம்
வந்துநில்லு அண்ணே!

தோழர் செரபண்டராஜுவின் புகழ்பெற்ற பாடல்களில் ஒன்றான 'கொலிமண்டு கொன்னாதி' என்ற ஒரு விவசாயியின் போர்க் குரலான (1970) தெலுங்குப் பாடல், மொழியாக்கம் செய்யப்படுகிறது. இசை, நாட்டுப்புற வடிவிலமைந்த படைப்புமெட்டு.

படிப்பகம்

www.padippakam.com

'இப்படி வா !'

ஆக்கம்:- செரபண்டராஜு

ராகம்: சங்கராபரணம்

தாளம்: ஆதி

தன்னானே தானானே தன்னானே தானனா

அந்தப்பாதை போகாதே இப்படி வா அய்லசா
அய்லசாவோ அய்லசா அய்லசாவோ

—அந்தப்பாதை

அலைஏற்றம் இறக்கம்கண்டு பயப்படாதே அய்லசா
அதுக்காகப் பாய்மரத்த இறக்கிடாதே ,,
அநியாயமாய் சமுத்திரத்தில் மறைஞ்சிடாதே ,,
அந்தப்பாதை

கடல்அலையின் புகைமூட்டத் திரையைக்கண்டு அய்லசா
கலங்கிப்போயி கண்ணமூடி கவுந்துடாதே ,,
காத்துக்காகச் சுக்கான விட்டுடாதே ,,
அந்தப்பாதை

தியாகங்கள் இறங்குகிற கரையிது தான் அய்லசா
தீபங்கள் எல்லாத்துக்கும் மையம் இது ,,
சூரியனே பிறக்குமிடம் இதுவன்றோ ,,
அந்தப்பாதை

எதிர்கால உலகத்துக் கனவுக்காற்று அய்லசா
இன்றைக்கே நமக்காக வீசுகிறது ,,
இங்கே ஒளி வாழ்க்கை மொட்டு விரிகிறது ,,
அந்தப்பாதை

படிப்பகம்

www.padippakam.com

மயக்குகிற கானல்கள் எதுவுமின்றி — அய்லசா
மனம்உருக்கும் வேதனைகள் எதுவுமின்றி — ,,
வரலாறு அறை கூவும் வசந்தம் இங்கே — ,,
அந்தப்பாதை

வென்றுவந்து புதுவுலகம் நிறுத்துபவரை — அய்லசா
வெளிச்சமான அம்மனிதரை உத்துப்பாரு — ,,
வீரமுழக்கம் போலசுற்றிப் பரவியிருப்பார் — ,,
அந்தப்பாதை

வெற்றிவரும் தோல்விவரும் போராட்டத்தில் — அய்லசா
மண்டியிடும் மரணங்களும் உண்டுஅங்கே — ,,
வளைஞ்சுகொடுத்துப் போகாமல் நேரேவா — ,,
அந்தப்பாதை

கழுத்தைஇறுக்கும் தூக்குமரம்; சிறைச்சாலை — அய்லசா
காணநேரிட்டாலும்நமது பூமிஇது — ,,
காட்டுப்பேயி சமரசம்அதன் கரைநரகம் — ,,
அந்தப்பாதை

புரட்சிஅன்பு; சமதர்ம மனிதஊற்றில் — அய்லசா
போராட்டத்தின் அமுதம்குடிக்கப் — ,,
புறப்பட்டுவா — ,,
அந்தப்பாதை
போகாதே
இப்படி வா

இந்தியப்புதிய ஜனநாயகத் தியாகத் தோழரும் ஆந்திரப் புரட்சிக் கவிஞருமான செரபண்டராஜு குடும்ப நிதியளிப்பு விழாவில் 19-2-83இல் பாடப்பட்ட அவரது பாடல். 'அடுகாது இடுநடு' (1974) என்பது இப்பாடலின் தெலுங்கு மூலத்தின் முதல் அடி. மொழியாக்க உதவி, ஆஞ்சனேயலு. இசை உதவி, நீலமேகம். படகு ஓட்டும் 'அய்லசா' மெட்டு.

---

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

□□□ அந்நிய ஏகாதிபத்திய அடிமைச் சீரழிவுக் கலாச்சாரம் அழியட்டும்!

□□□ உள்நாட்டு நிலப்பிரபுத்துவ பழமைப் பிற்போக்குக் கலாச்சாரம் ஒழியட்டும்!

□□□ சமரச, சீர்திருத்தக் கலாச்சாரப் போக்குகள் மாளட்டும்!

□□□ மக்கள் ஜனநாயகக் கலாச்சாரம் மலரட்டும்!

□□□ சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் ஓங்கட்டும்!

□□□ கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!

படிப்பகம்